THE MANJARI DIGEST DECEMBER 2004

நாட்டு மொழிகளில்
நம்பர் 1 டய்ஜெஸ்ட்


# மஞ்சரி

டிசம்பர்– 2004

5/-

20/12/04





## பாரதியின் பத்திரிகைப் பிரவேச நூற்றாண்டில்...

புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

கீழைநாட்டுக் கவிதை மஞ்சரி - 2005

## "கவிதைகள் வேண்டும்"

கீழை நாட்டுக் கவிதை மஞ்சரி என்னும் கவிதைத் தொகுப்பு நூல் ஒன்றை சிங்கை தமி[illegible]செல்வம் 1995 -ஆம் ஆண்டில் வெளியீடு செய்தார். அந்தப் பெயராலேயே இரண்டாவது கவிதைத் தெ[illegible]ப்பு நூல் ஒன்[illegible] வெளியீடு செய்வதில் தீவிரமாக முயன்று கொண்டிருக்கின்றனர்.

இந்த அரிய நூலில் இடம் பெறுவதற்கான வாய்ப்பினை இந்தியத் திருநாட்டின் சீரி[illegible]ஞர்கள் [illegible]கு பயன்படுத்திக் கொள்ள வேண்டுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

கவிஞர்கள் தங்கள் படைப்புகளைக் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்க[illegible]ம். பரிசீலனைக் குழுவினரால் தேர்ந்தெடுக்கப்படும் கவிதைகள், கீழைநாட்டுக் கவிதை மஞ்சரி - இரண்டா[illegible] தெ[illegible]குப்பு நூலில் இடம்பெறும். படைப்பாளர் தங்கள் பெயர், முகவரி, தங்கள் விவரங்களையும் எழுதலாம் முடிவு தேதி பிப்ரவரி - 2005

**SINGAI TAMIL SELVAM**
P.O. BOX. NO. 1678
ROBINSON ROAD, SINGAPORE - 903328



மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்
நிறுவனர் : அமரர் என். ராமரத்னம்

# மஞ்சரி

மலர் : 57 இதழ் : 12
தாரண - தை
டிசம்பர் - 2004
website :www.manjaridigest.com


உள்ளே...


| | |
|---|---|
| ஞான ரதம் ... | 3 |
| பாரதியின் பத்திரிகைப் பிரவேச நூற்றாண்டில் ... | 9 |
| கவிமணியின் நினைவில் ... | 12 |
| பாரம்பரிய விளையாட்டுகள்... | 17 |
| நர்சி மேத்தா ... | 25 |
| பாணபட்டர் பிறந்த இடம் ... | 30 |
| மிருகங்கள் பேசும் மொழி ... | 33 |
| நாடோடி இலக்கியம் ... | 37 |
| நாராயணமூர்த்தியுடன் ஒரு உரையாடல் ... | 41 |
| நன்னம்பிக்கைத் தொடர் ... | 44 |
| புத்தகப் பகுதி (அரசியல்) ... | 49 |
| நிற சிகிச்சை ... | 54 |
| தென்னாப்பிரிக்க சினி கதை ... | 58 |
| சங்கமித்ரா (ஒரியக் கதை) ... | 65 |
| செய்திக் கதிர் ... | 71 |
| தென்கச்சி பதில்கள் ... | 73 |
| கடித மஞ்சரி ... | 77 |
| உங்களோடு ஒரு வார்த்தை ... | 79 |



மஞ்சரி தனி இதழ் : ரூ.5/-
ஆண்டுச் சந்தா : ரூ. 60/-

சந்தா அனுப்புபவர்கள் KALAIMAGAL பெயருக்கு D.D. அல்லது M.O. மூலம் எண்.1, சம்ஸ்க்ருதக் கல்லூரித் தெரு, மயிலாப்பூர் சென்னை - 4 என்ற முகவரிக்கு அனுப்பவும்.


# நழுவி நடக்கலாமா?

எழுதுகோல் தெய்வம்,
அந்த எழுத்தும் தெய்வம்!

- இந்த மந்திரத்தை ஒவ்வொரு தமிழனின் காதிலும் ஓதிச் சென்றார் மகாகவி பாரதி - தெய்வ நம்பிக்கையும் பயபக்தியும் தமிழனிடம் குடியிருக்கும் என்ற நம்பிக்கையில்!

சென்ற நூற்றாண்டின் எழுத்துலக / பத்திரிகையுலக ஜாம்பவான்களாக விளங்கிய பலருடைய நினைவுகளை இப்போது நம் மனத்தில் இருத்திக் கொள்ள வேண்டியது அவசியமாகிறது. தமிழ்ப் பத்திரிகையுலகுக்கு எழுத்தின் பத்தினித் தன்மையைக் காட்டிச் சென்ற பாரதி, பத்திரிகைப் பிரவேசம் செய்த நூறாவது ஆண்டு இது. இந்த மாதம் அவருடைய நினைவுநாளில் நாம் பத்திரிகையாளர் பாரதியின் புகழைப் பாரெங்கும் பறைசாற்ற வேண்டும். அவர் ஆசிரியப் பணி ஏற்ற (மதுரை சேதுபதி பள்ளி) நூறாவது ஆண்டை பாரதி அன்பர்கள் கொண்டாடும் அதே நேரத்தில் இதையும் நாம் செய்யக் கடமைப்பட்டுள்ளோம்.

வேதங்களைத் தொகுத்தளித்த வேத வியாசர் போன்று, மறைந்து போய்க் கொண்டிருந்த தமிழ் மறையாம் ஆழ்வார்களின் பிரபந்தப் பாசுரங்களைத்

தொகுத்தளித்த நாதமுனிகள் போன்று, கரையான்களுக்கு இரையாகிக் கொண்டிருந்த தமிழர் கருவூலங்களாம் ஓலைச் சுவடிகளைத் தேடித் தேடிப் பதிப்பித்த தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாத ஐயரின் நூற்று ஐம்பதாம் ஆண்டு நிறைவு இது. தமிழ்ச் சமுதாயத்திற்கு நாம் எத்தகைய பங்கை அளிக்க வேண்டும் என கோடிட்டுக் காட்டியவர் அவர்.

சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டவரும், ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக ஒரே பத்திரிகையில் ஆசிரியராகப் பணியாற்றியவருமான (தினமணி) அமரர் ஏ.என்.சிவராமன் நூற்றாண்டு இது. (மார்ச்.1.2005) சமூக அக்கறையோடு ஆரோக்கியமான சிந்தனைகளை மட்டுமே விதைத்தவர். அவருடைய கட்டுரைகளே பல தமிழ் மாணவர்களை ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ்களாகவும் அறிவாளிகளாகவும் ஆக்கியிருக்கிறது. அதற்காக இன்றும் அவருக்கு நன்றி சொல்வோர் பலருண்டு.

சங்க இலக்கியம் மட்டுமல்ல, நல்ல சிந்தனைகளையும் தரமான கதைகள் மூலம் ஆரோக்கியமான எண்ணங்களையும் விதைத்த பத்திரிகையாளராகப் பரிமளித்த அமரர் கி.வா.ஜவின் நூற்றாண்டும் அடுத்த வருடம் தொடங்குகிறது. தமிழ் இலக்கிய உலகுக்கு அவர் செய்த தொண்டு மகத்தானது. அவர் பெயர் இல்லாமல் தமிழ் இலக்கிய வரலாறை இன்று எவரும் எழுதிவிட முடியாது.

அமரர் கல்கி... பன்முகப் படைப்பாளி. இறந்துபோன பண்டைய சமூகத்தை இன்றும் நம் கண் முன்னே உயிருள்ள சமூகமாய் உலவவிட்டவர். நறுக்குத் தெறித்த நடை, சமூகம் சார்ந்த பார்வை, கட்சி சார்பற்ற கருத்து என தனியொரு இடம் பெற்ற இதழாளர். அவருடைய ஐம்பதாம் ஆண்டு நினைவு இப்போது...

இப்படி இன்றளவும் நாம் இவர்களைப் பற்றிய நினைவலைகளில் மூழ்கியிருப்பதற்குக் காரணம் - அவர்களது நேர்மையும் சமுதாயத் தொண்டும்தான். இவர்களது பங்களிப்பில் நூற்றில் ஒரு பங்கேனும் நாம் இந்தத் தமிழ்ச் சமுதாயத்துக்குச் செய்வதுதான், நம் மூத்த தலைமுறைக்கு நாம் செய்யும் நன்றிக்கடனாக அமையும். ஒவ்வொரு மனிதரும் தத்தம் மனங்களில் கொள்ள வேண்டியதும் இதுவே!

நாளைய தலைமுறை நம்மைப் பற்றிய நாலாந்தர மதிப்பீட்டைக் கொள்ளும் வகையில் செயல்படுவது, சமூக அக்கறையின்மையும் பொறுப்பற்ற தன்மையுமே என்பதை இந்த மகான்கள் நமக்குக் காட்டிச் சென்றிருக்கிறார்கள்.

எனவே,

எண்ணக் கண் திறப்போம்! மண்ணின் மகிமை காப்போம்!

இவ்வாறு... சேர வாரும் ஜெகத்தீரே...

**இந்த மாத சிந்தனை:**



பிழைத்த பொறுத்தல் பெருமை; சிறுமை
இழைத்த தீங்குஎண்ணி யிருத்தல் - பிழைத்த
பகைகெட வாழ்வதும் பல்பொருளால் பல்லார்
நகைகெட வாழ்வதும் நன்று

(சிறுபஞ்சமூலம்)

# ஞானரதம்

இசைஞானி இளையராஜா

எவ்வுயிர்க்குள்ளும் 'ஆன்மா' ஒன்றே உறைவதால் - அவ்வான்மா, ஞானமயமாக இருப்பதை ஞானத்தால் அறிந்தால் - உலகில் உலவுகின்ற உயிர்களின் உடலையே ஞானரதம் என்று அழைக்கலாம்!

அனைத்து உயிர்களும் 'ஆத்மா'வை அறியுமா? என்றால் - இல்லை என்றே பதில் வரும். எடுத்திருக்கும் உடல் ஞானரதமாக உலவுகிறதா என்றாலும் - இல்லை என்ற பதில்தான்.

மனித ஜென்மம் கிடைப்பதே அபூர்வம்; அதிலும் கூன், குருடு, நொண்டி, செவிடு இல்லாமல் பிறப்பது அபூர்வம் அதிலும் புத்திமானாக இருப்பது சிரமம் - அதிலும் நல்லவனாக இருப்பது மிகவும் சிரமம்.

நல்லவர்களுக்குள்ளும் பக்திமானாக இருப்பதும், ஞானவானாக இருப்பதும், ஞானியர்களுள் போற்றப்படுபவராக அவதரிப்பதும் சாதாரணமாக நடக்கக்கூடியதா?

ஆனால், மிகவும் சாதாரணமாக மரணம் பற்றிய பயத்தில் - பதினாறு வயதே ஆன ஒரு சிறுவயதுப் பையனுக்கு - ஞானம் கைவரப் பெற்றதெனில் அனாந்தரக் கோடி ஜென்மங்களில் செய்த சுகிர்தத்தால் அன்றி அமையவே அமையாது.

எத் தவத்தாலோ - அதாவது - எத்தனையோ மகான்கள் செய்த எத் தவத்தாலோ - பகவான் ஸ்ரீரமணர், உலக உயிர்களின் மீது கருணை கொண்டு "ஆத்ம வித்தையை" யாவரும் உணரும் பொருட்டு போதிப்பதற்காக மண்ணாய்ப் போகும் மனித உடல் தாங்கி - மண்ணிலே சாதாரண மனிதனைப்போல் வாழ்ந்து காட்டிய மகேசனே ஆவார்!

சிவனும், ஞானியும், வேறல்ல என்பது அவரின் வாக்கு, 'ஞானி' என்றால் தங்களை ஞானி என்று அழைத்துக் கொள்பவர்கள் அல்ல. ஞானியின் லக்ஷணங்கள் - உடல், உலகம், உணர்வுகள் மறந்த நிலை - மறந்த நிலை என்றால் அறிவின் மறதி அல்ல. 'நான்' என்ற எண்ணம் அற்ற நிலை - தவமே வாழ்க்கையாய், வாழ்க்கையே தவமாய் உள்ள நிலை - உலகில் தோன்றிய ஞானபுருஷர்களில் "பகவான் ஸ்ரீ ரமணரைப் போல்" தோன்றிய ஞான புருஷர்களே இல்லை என்று நான் சொல்வேன்.

'புத்தர்' உலகமெல்லாம் போற்றப்படுகின்ற ஞானி. அதற்குக் காரணம் இரண்டு. அவர் அரசனாயிருந்து அனைத்தையும் விட்டு துறவியானது. "ஆசையே துன்பத்திற்குக் காரணம், ஆசையை விடு" என்ற எளிய போதனை

ஆனால் பகவான் ஸ்ரீ ரமணரோ - அவர் சொன்ன அந்த எளிய போதனைக்குள்ளே போய், 'ஆசை' என்பது என்ன; எண்ணம் தானே? எண்ணத்தை விட்டு விடு" என்கிறார் அவரைவிட எளிமையாக! அதை எளிமை என்று நினைத்தால் - அதுவே யாரும் அடைய முடியாத தவமாக இருக்கிறது.

"நான்" என்ற எண்ணம்

தான் இல்லாத அனைத்தையும் தோற்றிவைக்கிறது. அந்த அகந்தை அழிந்தால் 'ஞானம்' அடையப்பட்டதாம் என்கிறார்.

உலகில் மனித இனம் தோன்றியதன் காரணம் ஆன்மாவை அறிதற்கன்றி. அந்த வேலை செய்தேன் இந்த வேலை செய்தேன் என்று மார்தட்டிக் கொள்வதற்கல்ல!

பகவான் அவர்கள் தன்னைப்பற்றிச் சாதாரணமாகக் குறிப்பிட்டுச் சொன்னது சில சமயங்களில்தான்.

ஒரு வழக்கை விசாரிக்க வந்த கோர்ட்டார்கள் கேட்ட கேள்விக்கு தன்னைப்பற்றிய உண்மையை வெளிப்படையாகச் சொன்னது அந்த ஒருமுறை தான்.

கேள்வி: உங்களைப் போல் (நீங்கள் இருக்கும் நிலையில்) யாராவது இருக்கிறார்களா?

பதில்: இல்லை!

கேள்வி: யாராவது இருந்திருக்கிறார்களா?


பதில்: ஆம்!

கேள்வி: யார்?

பதில்: சுகர், ஜடபரதர், ரிஷபயோகி.

ஆக இந்த பதில்களிலிருந்தே பகவான் எவ்வளவு உயர்ந்த நிலையில் இருந்திருக்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ளலாம்.

நாம் அவ்வாறு பகவானை நினைத்தாலும், அவரோ, ''நீயும் நானேதான்'' என்று சுலபமாகச் சொல்லி விடுகிறார்.



ஞானிக்கு அடுத்த பொருளே இல்லை!

ஸ்ரீ பகவான் கூறுவது உண்மையே ஆயினும் அதை நாமே அனுபவபூர்வமாக உணராதவரை அது பொய்யே ஆகும்!

கல்வி, வேதாந்தம், சாஸ்திரம் என்று அத்தனையும் கற்றவனைப் போல் என்னதான் உலகில் உயரமாக அறிவெனும் மலையுச்சியில் நிற்பவனும் - 'ஆகாயத்தை' அளந்து விட்டேன் - என்று கூறமுடியாது.

நமக்கிருக்கும் வெறும் சிற்றறிவைக் கொண்டு ஸ்ரீ பகவான் இப்படிப்பட்டவர் என்று கூற முயல்வதும் அதற்கொப்பானதே ஆகும்.



ஸ்ரீ பகவானைத் தொட்டுப் பணி செய்யும் பேறுற்றவர்களில், 1996 வரை வாழ்ந்திருந்த அனைவரையும் சந்தித்திருக்கிறேன்.

ஸ்ரீ குஞ்சு சுவாமிகள், ஸ்ரீ அண்ணாமலை ஸ்வாமி, ஸ்ரீ சைக்கிள் ராமசாமி, ஸ்ரீ பூஞ்சா ஜீ - போன்றவர்களையும் இன்னும் சிலரையும் சந்தித்திருக்கிறேன்.

இவர்களில் ஸ்ரீ குஞ்சு சுவாமிகள் ஸ்ரீ பகவானைப் பற்றிப் பேச ஆரம்பித்தால் அவரின் கண்களின் ஓரத்தில் ஈரம் உண்டாவதை ஒவ்வொரு முறையும் பார்த்திருக்கிறேன்.

ஸ்ரீ பகவான் தன் உடலை நீத்த நேரத்தில் அண்ணாமலை ஸ்வாமிக்கு கடும் வயிற்றுவலி ஏற்பட்டு உயிரை விட்டு விடுவோம் என்று தோன்றிய நேரத்தில் 'மொட்டை மாடிக்குப் போ' என்ற வார்த்தை குரலின்றி - அர்த்தத்தையும் உணர்த்தியதால் - அவரின் ஆஸ்ரமத்தின் மேலே போக, ஸ்ரீ ரமணாஸ்ரமத்திலிருந்து ஓர் ஒளி வெள்ளம் பத்துப்பேர் கை கோர்த்துப்பிடிக்கும் தூண் அளவிற்கு முப்பதிலிருந்து நாற்பதடி உயரத்திற்கு வேகமாகக் கிளம்பி மலையுச்சியில் கலந்ததாகவும், கலந்த ஒரு நிமிடத்திற்குள் ஸ்ரீ பகவான் விதேகராகி விட்டார் என்று ரமணாஸ்ரமத்திலிருந்து ஒருவர் வந்து தகவல் சொன்னதாகவும் என்னிடம் கூறுவார். அந்த ஒளியைப் பார்த்த அந்த நொடியிலேயே தன் கொடிய வயிற்றுவலி போய் விட்டதாகவும் கூறினார்.

அப்படிப்பட்ட ஸ்ரீ பகவானை யார் என்ன சொல்ல முடியும்? உங்களை ஒரே கேள்வி கேட்கிறேன்.

எத்தனையோ மகான்களின் சரித்திரத்தைக் கேட்டிருக்கிறோம். அவர்களில் -

பசுவிற்கும் - மானிற்கும் - மயிலுக்கும் - நாய்க்கும் - காக்கைக்கும் - மோக்ஷமளித்துத் தன் கையாலேயே சமாதி வைத்த ஞானபுருஷர் யாராவது உண்டா?

மனித மனம் எந்த மகானையும் சந்தேகப்படக்கூடியது!

என்னைப் பொறுத்தவரையில், இந்தக் குறையுடைய மனித மனத்தைப் புனிதமானது என்று ஒரு ஒரே சொல்லாலேயே மாற்றும் மகேசன் பகவான் ஸ்ரீ ரமணர் தான்.

அவருக்குத் தேவையென்று இந்த உலகில் ஏதாவது உண்டோ? பின் எதற்காக அவரின் தோற்றம்?

வேண்டுதல் வேண்டாமை இலான் - தன்னையன்றிப் பிறவறியான் - தன்மயமாய் எல்லாவற்றையும் காணுவான் - காண்பான், காண்பொருள், காட்சி என்ற முப்படி இல்லாதான் - மோக்ஷத்திலேயே எப்போதும் குடி இருந்தான் - ஞானத்தை விட்டு ஒருபோதும் நகராதான் - விஷத்தை அருந்தியவன் - பாம்புகளை மாலையாய் அணிந்தவன் - பார்க்க வந்தோரின் பாபங்களைப் பஸ்பமாய் எரித்தவன் - பார்வையாலேயே பாகுபாடறுத்துப் பரம்பொருளின் உண்மை உணர்த்தியவன் - தன்னுடைய புகைப்படங்களாலே காண்பவரை இழுத்துக் கால்டியில் வைப்பவன் - தன் வார்த்தைகளால், எத்தனையோ என் போன்ற பாவிகளையும் ஆன்ம நிலைக்கு உயர்த்தியவன்...

இன்னும் எத்தனையோ இதுபோன்று புகழ ஆரம்பித்தால் அதற்கு முடிவே இல்லாமல் போய்க்கொண்டிருக்கும்.

இந்தப் புகழ்மொழிகளால் அவருக்கு ஏதும் பிரயோஜனம் உண்டா என்றால், இல்லை! ஆனால் நமக்கு பிறவிப்பயன் கிட்டும்!

அவர் வாழ்ந்த வாழ்க்கை முறையில் எந்த ஒரு பொருளையும் வீணாக்கியதில்லை. அப்படிப்பட்டவர் 'மனிதப்பிறப்பு' எதற்காக ஏற்பட்டதோ அதை விட்டுவிட்டு மற்ற காரியங்களில் நாம் ஈடுபட்டுப் பிறப்பை வீணடிப்பதைப் பொறுத்துக் கொள்வாரா?

தன் முன்னால் வருபவர்கள் அப்படி வீணாய்ப் போகாமல் உயர்ந்த நிலைக்கு ஏற்றிவிடுபவர் ஸ்ரீ பகவான்.

சாஸ்திரங்கள் படித்தாலும், தெய்வபூஜை பண்ணினாலும், கர்மங்களை அனுஷ்டித்தாலும், தேவதைகளின் மந்திரங்களை உபாசித்தாலும், யோகங்களை அறிந்தாலும் இன்னும் என்னென்ன உபாயங்களைக் கடைப்பிடித்தாலும் எத்தனை கோடி கற்பமாயினும் ஞானம் சித்திக்காது.

ஆனால், ஞானியின் கடைக்கண் பார்வை - ஒரு நொடியே கிடைத்தாலும் - அவர் சொன்ன சொல்லை யார் கேட்டாலும் - தகுதியுற்றோர் - அந்த க்ஷணத்திலேயே மோக்ஷமுறுவர் என்று ஸ்ரீ ஆதி சங்கரர் விவேக சூடாமணியில் சொல்லி இருக்கிறார்.

நாம் அனைவரும் 'பிறவி' என்ற நோய் பிடித்தவர்கள். இந்த நோய்க்கு மருந்து ஸ்ரீ ரமண நாமம் ஒன்றுதான்.

பொதுவாக ஒரு, குரு பக்தியை மட்டும் போதிப்பார். இன்னொருவர் யோகத்தை மட்டுமே போதிப்பார். மற்றொருவர் மந்திர யந்திர பூஜைகளைப் போதிப்பார்.

பக்தி, யோகம், மந்திர தந்திரம், யந்திரம், விசாரம், ஞானம் எல்லாமே ஒன்றுதான் என்று அக்குவேறு ஆணிவேறாய்ப் பிரித்து விவரித்துச் சொல்பவர் ஸ்ரீ பகவான் ஒருவராகத்தான் இருக்க முடியும்.


இங்கே சிவபெருமானே ஸ்ரீ ரமணர் என்ற பெயரில் அவதரித்து, உலக உயிர்களுக்கு சிவ ரகஸ்யத்தை உடைத்து விட்டு, ஆன்ம ஞானம் அடையத்தகுதியற்றவர் யாருமில்லை, அது எல்லோர்க்கும் பொது, அதுவே அனைத்துயிர்களின் உண்மை என்று உணர்த்திவிட்டு, ஒளி வடிவமாக திருவருளை உச்சியில் தன்னோடு தானாக - இணைந்து இன்றும் ஒளிர்ந்து கொண்டிருக்கிறது.

நாம் கொண்ட மனிதப்பிறவியின் பயனையடைய இறைவன் உறையும் அவ்வுடம்பின் - உள்ளே ஆத்மாவாக இருக்கும் அவனை வெளியிலும் பாவித்து - மனமாகிய ஞான ரதத்தால் ஸ்ரீ பகவான் அவதரித்த ''திருச்சுழிப் பதியே'' நாம் எடுத்த பிறவிகளின் ஆதி இடம் என்று கொண்டு - பகவானின் அருளால் ஸ்ரீ பகவானின் நாமமே ஞான ரதத்தின் வடம் என்று பாவித்து இழுத்து பவசாகரத்தைக் கடந்து ஸ்ரீ பகவான் என்றும் இருந்து வரும் - திருவண்ணாமலைக் கரையில் ஏறுவோமாக!

இதற்கு பகவானின் அருட்கருணை துணை நிற்கும் என்பது திண்ணம்.

''ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணாய''





# எனது கவிதை

– ஹரிவம்சராய் பச்சன்

வெளிச்சப் பொக்கிஷமாம்
எனது கவிதை

என்னுள் ஓர் இருளடைந்த
உலகம்
இருப்பதையறிகிறேன்
உணர்கிறேன்....

வெளியிலும் பரவுகின்றது
அந்த இருட்டு - எனது
கவிதையே ஒரு
வெளிச்சப் பொக்கிஷமாகும்.

உன் சுமையைச் சுமப்பேனா
நான் - என்
உயிருள்ளவரை?

எழுகின்றது சமூகம்
வெளிச்ச நிமிஷங்களை நோக்கி
எனது கவிதை
வெளிச்சப் பொக்கிஷம்.

என் குறைகளைப் போக்கவிடு
நீ -
உலகெங்கணும் இளஞ்சிவப்பு
நிறத்தை இறைத்து விடு!

அக்னிக் கணைக்குத்
தெரியாது எல்லை - என்
கவிதையாகுமே ஒரு
வெளிச்சப் பொக்கிஷம்!

தமிழில் : அனுராதா சூர்யநாராயணன்

### முதல் நிகண்டு

உலக மொழிகளிலேயே தமிழ் மொழியில்தான் முதன்முதலாக அகரவரிசை தோன்றியது. அதன் பெயர் அகராதி நிகண்டு. இயற்றியவர் சிதம்பர ரேவன சித்தர். இயற்றியளித்த ஆண்டு 1594. அதன் பிறகே மற்ற மொழிகளில் அகர வரிசை தோன்றியது.

### சேம அச்சு

தற்காலத்தில் வாகனங்களில் 'ஸ்டெப்னி' எனப்படும் மாற்றுச் சக்கரம் பொருத்தப்பட்டுள்ளது. வண்டியின் அச்சு முறிந்து விட்டால் அதற்கு மாற்றாகப் பயன்படுத்துவதற்கு சேமஅச்சு கொண்டு செல்லப்பட்டதாகப் புறநானூறு 102 -ஆம் பாடல் கூறுகின்றது.

### அணுகுண்டை வெல்லும் வழி!

பிரபல விஞ்ஞானி ஐன்ஸ்டினிடம் ஒருவர் ''அணு அபாயத்திலிருந்து மக்களைக் காப்பாற்ற ஏதேனும் வழி உள்ளதா?'' என்று கேட்டார்.

அதற்கு ஐன்ஸ்டின், ''ஏன் இல்லை, சமாதானம்தான் அந்த வழி!'' என்று பதில் கூறினார்.

### நானே போதும்

ஒரு சமயம் ஓர் ஆங்கிலேயப் பத்திரிகை நிருபர் காந்தியடிகளைக் கிண்டல் செய்யும் எண்ணத்துடன், ''உங்கள் மக்கள் உங்களை ஏன் தங்கள் பிரதிநிதியாக ஏற்றுக் கொண்டனர்? வேறு தலைவர்களே அவர்களுக்குக் கிடைக்கவில்லையா?'' என்று கேட்டார்.

காந்தியடிகள் சிரித்துக் கொண்டே, ''உங்களைச் சமாளிக்க நானே போதுமென்று அவர்கள் நினைத்திருக்கலாம்'' என்றார்.

### குறள் செய்திகள்

திருக்குறள் உக்கிரப் பெருவழுதி பாண்டியன் முன் அரங்கேற்றப்பட்டது. திருக்குறளில் 14000 சொற்களும், 42194 எழுத்துக்களும் உள்ளன. 1838 -ம் ஆண்டில்தான் திருக்குறள் முதன்முதலாக அச்சடிக்கப்பட்டது. குறளில் 'குறிப்பறிதல்' என்ற அதிகாரம் இருமுறை வருகிறது.

### நீலகேசி

ஐஞ்சிறு காப்பியங்களில் ஒன்றான ''நீலகேசியில்'' தாவரவியல் செய்திகள் விளக்கப்படுகின்றன. இந்நூலின் மொக்கலவாத சருக்கம் என்னும் பகுதியில் அறிவியல் கருத்துகள் பல உள்ளன.

### லைப்ரரி

நூலகங்களை ஆங்கிலத்தில் லைப்ரரி என்று குறிப்பிடுகின்றனர். 'லைபர்' என்கிற லத்தீன் வார்த்தைக்கும் 'புத்தகம்' என்பது பொருள். 'ஏரி' என்கிற வார்த்தைக்கு 'பாதுகாக்குமிடம்' என்பது பொருள். புத்தகங்களையும் பாதுகாக்கும் இடம்தானே 'லைப்ரரி.'

### சுழியம்

பூஜ்யம் என்பதைக் குறிக்க 'சுழி' என்ற சொல்லை பயன்படுத்தி வருகிறோம். 'சுழி' என்ற சொல்லுக்கும் பல பொருள்கள் உள்ளன. எனவே பூஜ்யம் என்பதை 'சுழியம்' என்றும் கூறுகிறார்கள்.

- நெ. இராமன்





# பாரதியின் பத்திரிகைப் பிரவேச நூற்றாண்டு

1904 - நவம்பரில்தான் தமிழ்ப் பத்திரிகையுலகில் மாபெரும் மாற்றத்தையும் புரட்சியையும் ஏற்படுத்திய மகாகவி பாரதி - ஒரு பத்திரிகையாளனாகப் பணியில் சேர்ந்தார்.

ஒரு கவிஞனாகப் பெரும்பாலானவர்களால் இனம்காணப்பட்ட சுப்பிரமணிய பாரதிக்கு, புரட்சிகள் பல செய்த பத்திரிகையாளன் என்ற மற்றொரு முகமும் உண்டு. பாரதி தனது பத்திரிகைப் பணியை 1904 நவம்பரில் சுதேசமித்திரனில் துணையாசிரியராகத் துவக்கினார். அதன்பிறகே தமிழ்ப்பத்திரிகையுலகுக்கு ஒரு உத்வேகம் கிடைத்தது. பாரதியின் பத்திரிகைப் பிரவேசத்தின் நூறாம் ஆண்டில் பத்திரிகையாளர் பாரதியின் நினைவலைகள் இங்கே...



★ தமிழ்ப் பத்திரிகை உலகில் முதன் முதலில் கார்ட்டூன்களை அறிமுகப்படுத்தியவர் பாரதி. 'இந்தியா' (1905) பத்திரிகைக்கே அந்தப் பெருமை சேரும்.

★ பத்திரிகை சந்தாவில் புதுமையை அறிமுகப்படுத்தியவர் பாரதி. வாசகர்களின் வருமானத்துக்கு ஏற்றவாறு சந்தா விகிதம் நிர்ணயித்த பாரதியை இன்றும்கூட யாரும் எட்ட முடியாது.

★ பத்திரிகையுடன் இலவச இணைப்பாக சிறு புத்தகம் வழங்குவதை அறிமுகப்படுத்தியவர் பாரதி.

★ ஒரே நேரத்தில் பல பத்திரிகைகளில் பணிபுரிந்தவர் பாரதி. அவர் பணியாற்றிய சில பத்திரிகைகள் சுதேசமித்திரன், சக்கரவர்த்தினி, இந்தியா, பாலபாரதா அல்லது யங் இந்தியா, விஜயா, சூர்யோதயம், கர்மயோகி, தர்மம்.

★ பத்திரிகைகளில் நேரடியாகப் பணிபுரிந்தது மட்டுமன்றி சுதந்திர இதழாளராகவும் பல பத்திரிகைளுக்கு தம் படைப்புகளை அனுப்பியிருக்கிறார் பாரதி. விவேகபானு, சர்வஜன மித்தி



ரன், ஞானபானு, காமன்வீல், நியூ இண்டியா ஆகிய பத்திரிகைகளிலும் பாரதியின் எழுத்துகள் அணி செய்துள்ளன. புனை பெயர்களை (காளிதாஸன், ஷெல்லிதாஸ், சாவித்திரி, நித்யதீரர், உத்தம தேசாபிமானி) அதிகம் பயன்படுத்தியவரும் பாரதியே.

★ செய்திப் பத்திரிகையில் வாசகரின் ஆர்வத்தைக் கூட்ட கதை, கவிதைகளை வெளியிட்டவர் பாரதி. வாசகர்களை விவாதத்திலும் பங்கேற்கச் செய்தவர் பாரதி.

★ பத்திரிகைகளின் அங்குசம் வாசகர் கடிதமே. இதனை உணர்ந்து பல வாசகர் கடிதங்களை எழுதிய பத்திரிகையாளர் பாரதி. 'தி ஹிந்து' நாளிதழில் அன்றே வாசகர் கடிதங்களை எழுதியிருக்கிறார் பாரதி.

★ முதன் முதலில் தமிழ்ப் பத்திரிகையில் தமிழ் ஆண்டு, மாதம் குறித்தவர் ('இந்தியா', 'விஜயா') பாரதியே. 'விஜயா' இதழில் தமிழ் எண்களையும் பயன்படுத்தி புரட்சி செய்தவர் பாரதி.

★ ''பழைய பத்திரிகைகளில் வெளிவந்த விஷயங்களை எடுத்துக் கோர்த்தால் நல்ல வசனநூல் கட்டலாம்'' என்று பத்திரிகை உலகுக்கு வழிகாட்டியவர் பாரதி. 'எங்கள் காங்கிரஸ் யாத்திரை' போன்ற சிறு நூல்களை தனது பத்திரிகை அலுவலகத்திலிருந்து வெளியிட்டவர் பாரதி.

★ செய்தி அனுப்புவோருக்கு பணம் தரும் முறையை நூறு ஆண்டுகளுக்கு முன்பே செயல்படுத்தியவர் பாரதி.

★ சித்திரங்களை மட்டுமே கொண்ட ''சித்ராவளி'' என்ற பத்திரிகையை நடத்தத் திட்டமிட்டவர் பாரதி.

★ லண்டன் 'டைம்ஸ்' முதல் கொல்கத்தாவின் 'அமிர்தபஜார் பத்ரிகா' வரை 50-க்கும் மேற்பட்ட பிறமொழிப் பத்திரிகைகள் பற்றியும், பிறமொழிப் பத்திரிகை ஆசிரியர்கள் பற்றியும் தனது பத்திரிகை



பாரதி சென்னையில் நடத்திய 'பாலபாரதா' ஆங்கிலப் பத்திரிகை



பாரதி ஆசிரியராக இருந்த 'சக்ரவர்த்தினி' மகளிர் பத்திரிகை



யில் செய்தி வெளியிட்டவர் பாரதி.

★ மகாத்மா காந்தி இந்தியாவில் அறியப்படுவதற்கு முன்னரே 1909 ல் ''காந்தி பசு'' என்ற கருத்துப் படத்தை 'இந்தியா'வில் வெளியிட்டவர் பாரதி.

★ தமிழுக்கு பொதுவுடைமை என்ற புதிய சொல்லை வழங்கியதோடு, வன்முறை மூலம் உருவாக்கப்படும் ரஷ்யாவின் சோஷலிஸ சமுதாயம் நிலைக்காது என்று 1920 லேயே தீர்க்க தரிசனமாக எழுதியவர் பாரதி.

★ நாட்டின் முந்நாள்பெருமையும் இந்நாள் சிறுமையும் எதிர்கால வறுமையும் கருதாத கல்வியால் பலனில்லை என்று கூறி சுதேசிக் கல்வியை வலியுறுத்தியவர் பாரதி.

★ இந்து ஜனத்தொகை குறைவதன் அபாயத்தையும், தீண்டாமை அரக்கனின் கொடிய விளைவையும் தயவு தாட்சண்யமின்றி சுட்டிக் காட்டியவர் பாரதி.

★ மகளிரின் விடுதலைக்காக பத்திரிகையில் குரல்கொடுத்து பாலின சமத்துவத்துக்கு தமிழ்நாட்டில் வித்திட்ட ஆடவர் திலகம் பாரதி.

★ தமிழின் பழம்பெருமையை பேசியபடியே ஆங்கில மோகத்தில் வீழ்வதால் அன்னைத் தமிழ் அவலத்தில் தாழும் நிலையை எடுத்துக்கூறி அன்றே எச்சரித்தவர் பாரதி. அதேசமயம் கிணற்றுத் தவளையாக இல்லாமல் ஆங்கிலம், இந்தி, சம்ஸ்க்ருத மொழிகளையும் அறிந்து அதனை தனது இதழியல் பணிக்கு பயன்படுத்தியவர் பாரதி.

★ ''உள்ளத்தில் உண்மையொளியுண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாகும்'' என்ற தனது அமுதமொழிக்கு தானே உதாரணமாக பாரதி வாழ்ந்ததை மேற்கண்ட தீர்க்கதரிசனங்கள் காட்டுகின்றன.

*வ. மு. முரளி*



பாரதி புதுவையில் நடத்திய 'கர்மயோகி' மாத இதழ்



பாரதி புதுவையில் நடத்திய 'விஜயா' மாலைப் பத்திரிகை

# கவிதை எப்படி இருக்க வேண்டும்?

உள்ளத்துள்ளது கவிதை - இன்பம்
உருவெடுப்பது கவிதை.
தெள்ளத் தெளிந்த தமிழில் - உண்மை
தெரிந் துரைப்பது கவிதை...

- இப்படி செந்தமிழாம் செம்மொழியாம் இனிய தமிழில், கனியும் கண்டும் கனிந்தொழுகு கவி செய்து உள்ளம் மகிழ்வித்தவர் - 'கவிமணி' என்ற சொல்லுக்குச் சொந்தக்காரர். அவரது ஐம்பதாம் ஆண்டு நினைவு நிறைவிலே, அவர் நினைவிலே சற்று நேரம் கழி(ளி)த்திருப்போம்.

1954 செப்.26 அன்று மகாளய அமாவாசை; புண்ணிய நாள். காலையில் நெற்றி நிறைய நீறணிந்து அருகி விருந்தோர்க்கு ஆசிகூறி, திருவாசகத்தைப் படிக்கச் சொல்லி ஈடுபாட்டுடன் கேட்டுக் கொண்டிருந்தார். திருவாசகம் - அதிசயப்பத்தில் வரும் 'பொத்தையூன்சுவர்'... பாடலுள்ள 'அசும்பு' என்ற வார்த்தைக்குப் பொருள் கூறினார் வெகு நேரம்... பின் சிறிது சிறிதாக அறிவு மயங்கிக் கண் அடைத்து 2.30 மணிக்கு ஈசன் பாதம் சேர்ந்தார்.



ஆம்! இறுதிமூச்சு உள்ளவரை பக்தித் தமிழ்ச் சுவையில் நனைந்து தோய்ந்து, தாமும் இன்புற்று, கேட்போரையும் தமிழ் இன்பச் சுவையில் மூழ்க வைத்தவர். கவிதையைப் பற்றி விளக்கம் கேட்ட அன்பர்க்கு அவர் அளித்த விளக்கத்தையும் ஒரு கவிதை எப்படி இருக்கவேண்டும் என்பதை அவர் காட்டிய விதத்தையும், நாம் காண்பதற்கு முன், அவருடைய வாழ்க்கைச் சுருக்கம் இங்கே...

தாது வருடம் (1876) ஆடி - 14 ஆயில்ய நட்சத்திரம் அமாவாசை அன்று (நாஞ்சில் நாடு) தேரூரில் பிறந்தார். தந்தை - சிவதாணுப் பிள்ளை. தாய் - ஆதிலக்ஷ்மி அம்மாள். இவர்களுக்கு ஒரே ஆண்குழந்தை தேசிகவிநாயகம். ஐந்தாவது வயதில் தேரூர் ஆரம்பப் பாடசாலையில் படிப்பு. பிறகு கோட்டாற்றிலுள்ள ஆங்கிலப் பாடசாலையில் தொடர்ந்து பயின்றார். இவருடைய பத்தாவது வயதில் தந்தை மரணமடைய, தாயாரின் வழிகாட்டலிலும், அரவணைப்பிலும் உயர்கல்வி கற்றார். மெட்ரிகுலேஷன் தேறி, எப்.ஏ வகுப்பில் சேர்ந்து படித்தார். இடையூறுகள் பலவற்றால் கல்லூரிப்படிப்பு நின்றுபோக, போதனா முறைப் பாடசாலையும் படித்துத் தேறி, ஆசிரியப் பணி புரிந்தார். அதே வருடம் நாகர்கோயிலை அடுத்த புத்தேரியில் உமையம்மாளைத் திருமணம் செய்துகொண்டார்.

அக்காலத்தில் நாஞ்சில் நாட்டுப் பாடசாலைகளில் மலையாள மொழியே போதிக்கப்பட்டு வந்தது. தமிழ் பயில அரசு ஒரு வசதியும் செய்துதரவில்லை. இதனைப் பற்றி, தாம் எழுதிய நாஞ்சில்நாட்டு மருமக்கள் வழி மாண்மியம்' யாத்திரைப் படலத்தில் அவர் மனம் நொந்து இவ்வாறு கூறுகிறார்...

*''ஐயோ!*
*அப்பன் மரணம் அடையும் காலம்*
*எமவே தனைகள் இல்லா தாக்கவும்*
*சிந்தை சிவனடி சேரச் செய்யவும்*
*செந்தமிழ் மறையாம் திருவா சகத்தைப்*
*பக்கம் இருந்து படிக்க அரியா*
*மக்கள் படிப்பைஇவ் வையகம் மதிக்குமோ?*
*நாஞ்சில் நாட்டில் நல்லஆண் பிள்ளை*
*இல்லா ததனால் இப்படி யாச்சுது''*

கவிமணிக்கு தமிழ்கற்க அளவுகடந்த ஆசை. அதனால் ஓய்வு நேரங்களில் தேரூரை அடுத்த வாணன்திட்டு மடத்திலிருந்த திருவாவடுதுறை ஆதினம் சாந்தலிங்கத் தம்பிரானிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றுவந்தார். அப்போதே கவி எழுத ஆசை... அதனால் எழுந்ததே 'அழகம்மை ஆசிரியவிருத்தம்' என்ற கவிமணியின் முதற்பாடல்கள்.

ஆரம்பப்பள்ளி ஆசிரியரான கவிமணியின் திறமையை உணர்ந்த அரசு, அவருக்கு மகளிர் கல்லூரி விரிவுரையாளர் பதவியைக் கொடுத்தது. 1931 - இல் அரசு அலுவலிலிருந்து ஓய்வு பெற்ற கவிமணி, தமது மனைவியாருடன் புத்தேரியிலேயே வசித்து வந்தார். இத்தம்பதியருக்குக் குழந்தைகள் இல்லை. எனவே கவிமணி மனைவியின் சகோதரர் மகனே (குமாரசுவாமி) உடனிருந்து வேண்டிய பணிவிடைகளைச் செய்துவந்தார்.

கவிதையைப் பற்றி கவிமணியிடம் விளக்கம் கேட்கும் அன்பர்களுக்கு அவர் கூறுவது: ''கவிதை என்பது இன்பம் (Pleasure). இன்பத்தைத் தரக்கூடியது தான் கவி. சன்மார்க்க போதனை செய்வதே கவியின் முக்கிய நோக்கமென்று கொள்ள முடியாது. ஆனால் ஒரு நல்ல கருத்தை அழகாகவும் இன்பம் தரக்கூடிய விதத்திலும் சொன்னால் அது கேட்பவர் மனத்தில் நன்றாகப் பதிந்துவிடும். மருந்தைச் சீனியில் சேர்த்துக் கொடுப்பது போலக் கவிதை

## வாடாத பூஞ்செண்டு

தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள் பாடல்களான ''மலரும் மாலையும்'' தமிழ் மக்களுக்குக் கிடைத்த பெருஞ் செல்வம், அரிய செல்வம், தெவிட்டாத அமிர்தம்; ஆயுள் நாள் முழுதுமே தமிழ் மகன் தன்னுடன் வைத்துக் கொண்டு அநுபவிக்க வேண்டிய வாடா கற்பகப் பூஞ்செண்டு. வயசானவர்களைவிட இளைஞர்கள் பாக்கியசாலிகள்; அறுபது, எழுபது, எண்பது ஆண்டுகள் அவர்கள் அநுபவித்துக் கொண்டிருக்கலாம் அல்லவா? தமிழ் உலகம் பிள்ளையவர்களுக்கு ரொம்பவும் கடமைப்பட்டுள்து. அவர்களுடைய கவிகளைப் பாடி உண்மையான பாவ உணர்ச்சியோடு அநுபவிப்பதே அவர்களுக்கு நாம் செலுத்தக்கூடிய சிறந்த நன்றி.

- டி.கே.சி

இருக்க வேண்டும். எதைச் சொல்லுகிறதென்பதல்ல, கவியின் பிரதானம். எப்படிச் சொல்லப்படுகிறதென்பதுதான் கவியில்உள்ள விசேஷம்.

ஒரு கவிஞன் எழுதுகிற எல்லாக் கவிகளும் நல்ல கவிகளாக அமைந்துவிடும் என்று சொல்வதற்கில்லை. கவியின் தன்மை, கவிஞன் எழுதுகிற காலத்தில் உள்ள அவனது மனநிலையைப் பொறுத்திருக்கிறது. எப்பொழுதும் ஒருவன் ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் இருக்க முடியாது. ஓய்வு, தளர்வு, கவலை இவை எல்லோருக்கும் ஏற்படத்தான் செய்யும். அப்படி உள்ள காலங்களில் அவன் மனநிலை மாறுதல் அடையும். அதனால் ஒரே கவிஞன் எழுதக்கூடிய கவிதைகளும் எழுதக் கூடிய காலத்தில் உள்ள அவனது மனநிலைக்குத் தக்கபடி இருக்குமேயல்லாது எல்லாக் கவிகளும் ஒன்றுபோல நன்றாக இருப்பது முடியாது.

''கவிஞன் சுதந்தர உள்ளம் படைத்தவனாக இருக்க வேண்டும். பிறருடைய கட்டுப்பாட்டுக்கு அடங்கியோ, பிறரது விருப்பத்திற்கு இணங்கியோ, தன் பாடலை மக்கள் விரும்பி ஏற்றுக் கொள்வார்களா, மாட்டார்களா என்ற ஐயப்பாட்டுடனோ கவி எழுதக்கூடாது; உண்மைக் கவிஞன் ஒரு நல்ல மாமரத்துக்கு ஒப்பாவான். மாமரம் வளர்கிறது. பூக்கிறது, காய்க்கிறது, பழுக்கிறது. காய்க்கும்போதும் பழுக்கும்போதும் நம் காய்கனிகளை மக்கள் ஆசையோடு உண்ணுவார்களா என்ற கவலை அந்த மரத்துக்குச் சிறிதும் இராது. அதிலுள்ள காய்கனிகளை,

'மாடு தின்றா லென்ன, மனிதன்
தின்றா லென்ன,
ஆடு தின்றா லென்ன, அழுகிப்
போனா லென்ன?'

என்றுதான் அம்மரம் எண்ணக்கூடும். மக்கள் அதன் மதிப்பறிந்து உபயோகித்துக் கொள்வர். அது போலவே தனது மனத்தில் தோன்றிய உண்மைகளை வெளியிட வேண்டியது கவிஞனின் கடமை. மக்களுக்குப் பயன்படுவதானால் பயன் படட்டும். அன்றேல் கால வெள்ளத்தில் அழிந்து போகட்டும்' என்பது கவிமணியின் கருத்து.

இளங் கவிஞர்கள் பலர் தாம் எழுதியுள்ள கவிகளைக் கவிமணியிடம் காட்டி அபிப்பிராயம் கேட்பார்கள். ''கவிதை அழகாக அமைந்திருக்கிறது. கருத்து நன்றாக இருக்கிறது. ஆனால் கவிதைக்குரிய இலக்கணம் சரியாக அமையவில்லை. ஆதலால் முதலில் கவிக்குரிய இலக்கணத்தை

## பொற் களஞ்சியம்

கவிமணியின் தமிழ் என்றும் மனத்தில் போற்றி வைக்கத் தகும் பொற்களஞ்சியமாக உள்ளது. நல்ல தமிழ், நமது மூதாதையரின் பண்பாட்டிலும் மரபிலும் ஊறித் தோய்ந்து இனிமை முற்றிய தமிழ், உண்மை நிரம்பிய தமிழ், கற்றார்க்கும் கல்லார்க்கும், நகரத்தினர்க்கும் நாட்டுப்புறத்தினர்க்கும் ஒன்று போலவே இனிக்கும் தமிழ். இவ்வியல்புடைய தமிழ் நமது நாட்டில் அரிதாய்ப் போய்விட்டது. இழக்க முடியாத இவ்வரிய செல்வத்தைப் பல ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் நமக்கு அளித்தவர் நமது கவிஞர் பெருந்தகை தேசிகவிநாயகம் பிள்ளையே.

- எஸ். வையாபுரிப்பிள்ளை



## கவிமணி வடிவம்

துரும்பென மெலிந்த தேகம்
துலங்கிடும் குளிர்ந்த பார்வை
இரும்பினும் வலிய உள்ளம்
இனியவே செய்யும் எண்ணம்
பரம்பொருள் நினைவே காட்டும்
பாரெலாம் பரந்த நோக்கம்
கரும்பினும் இனிய சொற்கள்
கவிமணி வடிவ மாகும்.

புவியணி கவிகள் பாடும்
புலமையைப் போற்று கேனோ?
செவிமகிழ் இனிய சொல்லின்
செறிவினை மெச்சு கேனோ?
நவம்மிகப் பழமை பேசும்
நயத்தினைப் புகழு வேனோ?
கவிமணி யவரை வாழ்த்தக்
காரணம் எதனைச் சொல்வேன்?

- நாமக்கல் கவிஞர் ராமலிங்கம் பிள்ளை



நன்றாகப் படித்த பிற்பாடு கவி எழுதத் தொடங்குவதுதான் நல்லது. முயற்சி செய்தால் சிறந்த கவிஞராக வரமுடியும்'' என்று கவிமணி அன்புடனும் ஆதரவுடனும் கூறி ஊக்கம் ஊட்டுவார்கள்.

இலக்கண வரம்பிற்குப் புறம்பான கவிதைகள் எழுதுவது கவிமணிக்குச் சிறிதும் விருப்பம் இல்லாத ஒன்றாகும். ''கவிஞனது கருத்தை வெளியிடுவதற்கு எதுகை, மோனை, தளை முதலிய விலங்குகள் இருத்தல் கூடாது; அவற்றைத் தகர்த்து எறிபவனே புரட்சிக் கவிஞன் என்று பலர் சொல்லுவதையும் எழுதுவதையும் கேட்டும் படித்தும் இருக்கிறோம். அப்படி அவர்கள் சொல்வதன் உண்மையை ஆராய்ந்தால் கவி இலக்கணத்தைப் படியாத குறையும், இலக்கண வரம்பிற்கு உள்பட்ட கவிதை எழுதுவதற்குள்ள திறமைக் குறைவுந்தான் காரணம் என்பது உறுதி. எத்தனையோ பேர் இதற்கு முன்னும் இப்பொழுதும் இலக்கணப் பிழையின்றிக் கவிதைகள் எழுதி வந்திருக்கிறார்களே. அவர்களுக்கெல்லாம் இலக்கணம் விலக்காக வில்லையல்லவா? உயர்ந்த கவிஞனுக்கு இலக்கணம் தாதிப் பெண்போல ஏவல் செய்யும்; அவனது மனத்தில் தோன்றிய கருத்துக்குத் தக்க சொற்கள் தங்கு தடையின்றி வந்து கொண்டே இருக்கும்'' என்பது கவிமணியின் முழு நம்பிக்கை.

# கிளி





பச்சை உடலைப்பார்
பவழச்செவ் வாயைப்பார்
ஆரம் கழுத்தில்
அணியும் அழகைப்பார்
பாலைக் குடிக்குமப்பா
பழங்களைத் தின்னுமப்பா
பாடம் படித்ததெல்லாம்
படித்தபடி சொல்லுமப்பா
கண்களிக்கப் பார்த்திருப்போம்
காதினிக்கக் கேட்டிருப்போம்
பச்சைக் கிளிக்குநிகர்
பாரிலொரு பக்ஷி உண்டோ?

நூலகம்

# காகம்

கன்னங் கரியநிறம் காக்கை நிறமப்பா
கத்தத் தொடங்கிவிட்டால் காதுபுண் ஆகுமப்பா
எத்தித் திரியுமப்பா இரக்கமில் லாததப்பா
எச்சில் இலைக்காக எங்கும் பறக்குமப்பா
ஊனை அருந்துமப்பா உயிர்க்கொலை செய்யுமப்பா
ஆதலால் காக்கையை ஆரும் வளர்ப்பதில்லை.









# பொழுதுபோக்கு விளையாட்டுகள்

குமரி எஸ். நீலகண்டன்

சங்க இலக்கியங்களில் பல பயன்மிகு விளையாட்டுகளைக் காண்கிறோம். மீனாட்சி பிள்ளைத் தமிழில் காணும் கழங்கு, ஊசல், அம்மானை, நீராடலும், பொம்மை வைத்து விளையாடும் பாவைக்கினிய பாவையும், மாளனிகை ஆயிரம் முறை பந்தடித்து விளையாடியதும் பொழுதுபோக்கு விளையாட்டுகளின் பாரம்பரியமிக்க பழமையை உணர்த்தும் சான்றுகளாகும்.

வசந்தவல்லி பந்தடித்து விளையாடும் அழகைத் திருக்குற்றாலக் குறவஞ்சியில் நாம் காணலாம்.

**"செங்கையில் வண்டு கலின்கலின் என்று**
**செயஞ்செயம் என்றாட - இடை**
**சங்கதம் என்று சிலம்பு புலம்பொடு**
**தண்டை கலந்தாட - இரு**
**கொங்கை கொடும்பகை வென்றமை என்று**
**குழைந்து குழைந்தாட - மலர்ப்**
**பைங்கொடி நங்கை வசந்தசவுந்தரி**
**பந்து பயின்றாளே..."**

என்று வசந்தவல்லி பந்து விளையாடும் பாங்கினைக் காண்கிறோம்.

பண்டைய பொழுதுபோக்கு விளையாட்டுகள் எண்ணிக்கையில் ஏராளமானவை. அதன் வரிசை கிட்டிப்புள், பம்பரம், கோலி, கழங்கு என்னும் களச்சி, கயிறு துள்ளல், கண்ணாமூச்சி, வட்டெறிதல், ஆடு ஓநாய் விளையாட்டு, ஆடு புலி ஆட்டம், நிலாப்பூச்சி, தாயம், பல்லாங்குழி, பட்டம், வட்டத்திரி என நீண்டு கொண்டே போகும். இவற்றில் ஒரு சில விளையாட்டுகளின் தன்மையை ஆராய்ந்தால் கூட சமூகப்பயன் சார்ந்த அதன் பண்பினை அறிந்துகொள்ள இயலும்.

## கிட்டிப்புள்

இது தன்னும் புள்ளும் என்ற வழக்குச் சொல்லில் குமரி மாவட்டத்தின் கிராமப் பகுதிகளில் விளையாடப்பட்ட விளையாட்டு. நம் நாடு முழுவதுமே கிராமப் பகுதிகள் அறிந்த விளையாட்டு இது.


சுமார் 1 அடி நீளமுள்ள கம்பினையும், அதில் நான்கில் ஒரு பங்கு நீளமுள்ள கிட்டி எனப்படும் சிறு குச்சியினையும் கொண்டு விளையாடப்படுவதே கிட்டிப்புள். சாக்குட்டான், சாதிமரம், முருமட்டி, நாக்கோணி, ஐந்துக்கோணி, ஆரஞ்சு, கிளேஸ் என ஏழு முறைகளில் நீள்குச்சி பால் கிட்டியை அடித்துப் போட்டியாளர்களை வெல்ல வேண்

டும். முதலில் நிலத்தில் சின்ன பள்ளம் தோண்டி அதில் அந்த கிட்டியை வைத்து நீளமான குச்சியால் கோரி விடுவர். அது கிளேஸ் எனப்படும்.

சாக்குட்டான் என்பது வலக்கையில் நீள குச்சியைப் பிடித்துக்கொண்டு பிடித்திருக்குமிடத்தில் நீளக் குச்சியை வைத்து, பின் தூக்கிப் போட்டு, நீளக் குச்சியால் சிறு குச்சியை அடிப்பதாகும்.

சாதிமரமென்பது இடது கையிலுள்ளசிறுகுச்சியை நீள் குச்சியால் அடித்து சுழல விட்டு மீண்டும் நீள்குச்சியாலே அடிப்பதாகும். முருமட்டி என்பது இடது முழங்கையினைக் குறுக்காகப் பிடித்து அதன்மேல் சிறு குச்சியை வைத்து, அதைத் தூக்கிப் போட்டு வலது கையிலுள்ள நீளக்குச்சியால் அடிப்பதாகும். நாக்கோணி என்பது இடது கையில் ஆள்காட்டி விரல் மற்றும் சுண்டுவிரலை மட்டும் நீட்டி, மற்ற விரல்களை மடக்கிவிட்டு நீட்டிய விரல்களில் சிறு குச்சியினைக் குறுக்காக வைத்து அதைத் தூக்கிப்போட்டு வலது கையிலுள்ள நீளக்குச்சியால் அடிப்பதாகும்.

ஐந்துக்கோணி என்பது வலதுகையில் நீளக்குச்சியைப் பிடித்து அதே கையின்மேலேயே சிறுகுச்சியினை வைத்து, தூக்கிப்போட்டு



அதை அடிப்பதாகும். ஆரஞ்சு என்பது வானம் பார்த்து, முகத்தின் மேல் சிறுகுச்சியினை வைத்து, தலை குனிந்து குச்சி கீழே விழும் முன் அதை நீளக்குச்சியால் அடிப்பதாகும்.

இவ்வாறு ஏழு முறைகளில் கிட்டியை நீளக் குச்சியால் அடிக்கும்போது போட்டியாளர் எதிரே நின்று கிட்டியைப் பிடித்துவிட்டால் அடித்தவர் காய் ஆகிவிடுவார். ஒவ்வொரு முறையிலும் கிட்டி எதிர்த்திசையில் விழும்போது போட்டியாளர் அந்தக் கிட்டியைக் குழியினை நோக்கி எறிவார். அப்போதும் நீள்குச்சி வைத்திருப்பவர் பறந்துவரும் கிட்டியை எதிர்த்து அடிக்கலாம். குழியிலிருந்து எட்ட விழுவதைப் பொறுத்து அவருக்கு வெற்றிக்கனிகள் அதிகம் கிட்டும்.

கிட்டிப்புள் விளையாட்டு முறையினை ஆழ்ந்து நோக்கினால் அது இன்றைய கிரிக்கெட் விளையாட்டின் மூலவடிவமாகவே தோன்றும். கிரிக்கெட்டில் மட்டையால் அடிக்கும் பந்து பிடிக்கப்படுகிறது. இங்கு நீள் குச்சியால் அடிக்கப்படும் கிட்டி பிடிக்கப்படுகிறது. கிரிக்கெட்டில் பந்து வீச்சாளர் பந்தை வீசுவது போல் இங்கும் கிட்டி வீசப்பட்டு நீள்குச்சியால் அடிக்கப்படுகிறது. கிரிக்கெட் நம் கண்பார்வைக்குட்பட்ட இலக்கிலிருந்து ஒரே திசையில் பறந்துவரும். ஆனால் கிட்டிப்புள் விளையாட்டில் கைகளின் பல பகுதிகள் முகமென பல கோணங்களில் கிட்டி அடிக்கப்படுகிறது. இழுப்பு விசையுள்ள பந்தை சரியாக அடிப்பதை விட இழுப்பு விசையற்ற மரத்துண்டை நீள் குச்சியால் காற்றை எதிர்த்து அடிப்பதென்பது அதிகத் திறன் வாய்ந்தது.

கிட்டிப்புள் விளையாட்டில் கைகளுக்கும் விரல்களுக்கும் கண்களுக்கும் நல்ல பயிற்சி கிடைக்கிறது. கிட்டிப்புள்ளைத் தயார் செய்ய ஒரு மரத்தின் கிளையிலுள்ள சிறு கம்பே போதுமானது. குழந்தைகளிடையே குழுமனப்பான்மையையும் இந்த விளையாட்டு வளர்க்கிறது.

## பம்பரம்

இவ்விளையாட்டில் முதலில் வட்டத்திற்குள் ஒரு பம்பரத்தை வைத்து, சுற்றும் பம்பரத்தால் அடித்து வட்டத்தை விட்டு வெளியேற்ற வேண்டும். தரையில் சுற்றும் பம்பரத்தை உள்ளங்கையில் ஏந்தி வட்டத்திற்குள் இருக்கும் பம்பரத்தை வெளியேற்றலாம். ஆட்டத்தில் தோற்றவரின் பம்பரம் வட்டத்திற்குள் வைக்கப்படும். இந்த விளையாட்டினால் உடலுக்கும் உள்ளத்திற்கும் நல்ல பயிற்சி கிடைக்கிறது. பம்பரத்தைக் கயிற்றால் ஒழுங்காக நெருக்கமாக முறையாகச் சுற்றுவதைப் பொறுத்தே, கயிற்றிலிருந்து விடுபடும்போது பம்பரமும் வேகமாக ஒழுங்காகச் சுற்றும். அதனால் கயிற்றைச் சுற்றுவதில் பொறுமைக்கும் நிதானத்திற்கும் பயிற்சி கிடைக்கிறது. கைக்கும் விரல்களுக்கும் பயிற்சி கிட்டுகிறது.



நிதானத்துடன் வேகமாக இயங்கும் திறன் வளர்கிறது. வட்டத்திற்குள் இருக்கும் பம்பரத்தை இலக்காய் விளையாடுவதால், இலக்கை நோக்கிக் குறி வைத்து இயங்கும் திறன் வளர்கிறது.

## கோலி

சுமார் இருபது வருடங்களுக்கு முன்பு வரை நகரங்கள் கிராமங்கள் பேதமின்றி பரவலாகக் குழந்தைகளிடையே விளையாடப்பட்ட இந்த விளையாட்டு இன்று அழிவு நிலையினை நோக்கியே இருக்கிறது.

கோலியினைச் சுட்டுவிரலால் அடித்து மூன்று குழிகளில் விழ வைப்பதும், குழி

களின் அருகில் இருக்கும் போட்டியாளரின் கோலிகளை இலக்காய் அடித்துவிட்டுக் கோலியினைக் குழிக்குள் விழவைப்பதும் இந்த விளையாட்டின் முக்கிய அம்சங்கள். ஒவ்வொரு குழியிலும் கோலிகளை அடித்து விழ வைத்திருந்தாலும் மற்ற போட்டியாளரின் கோலியை ஒரு தடவையாவது தன்கோலியினால் அடித்திருந்தாலே அவர் வெற்றி பெற்றவராகக் கருதப்படுவார்.

கோலிகளை அடிக்கும்போது குழந்தைகளின் மனதிற்கும் உடலுக்கும் ஒருமித்த பயிற்சி கிடைக்கிறது. கண்களையும் மனதையும் ஒருமுகப்படுத்துகிறது. விரலுக்கும் பயிற்சி, எழுந்தும் உட்கார்ந்தும் கோலிகளை அடிப்பதால் கால்களுக்கும் பயிற்சி. துப்பாக்கியால் கண்கள் நேராக இலக்கைக் குறிவைக்கின்றன. ஆனால் கோலி விளையாட்டில் கண், இலக்கு, தரையைத் தொட்டுக் கோலியை அடிக்கும் விரலென மூன்று கோணங்களில் தாக்குதல் நடக்கிறது.

## கழங்கு எனும் களச்சி

ஆண் குழந்தைகளுக்குக் கோலி விளையாட்டுப் போல் பெண்களுக்கானது களச்சி விளையாட்டு. கோலி அளவுள்ள ஏழு கற்களால் விளையாடப்படும் விளையாட்டு இது. இசையோடு பாடலைப்பாடி ஆடப்படும் விளையாட்டு. பாடிக்கொண்டே ஒரு கல்லை மேலே தூக்கிப் போட்டு, அது கீழே வருவதற்குள் கீழ் இருக்கும் மற்ற கற்களைப் பல எண்ணிக்கையில் எடுத்தும், மேலிருந்து கீழ் வரும் கல்லையும் பிடிக்க வேண்டும். முதலில்,

**ஒரி ஒரு வளா**
**ஒரு வளை சூரியா**
**சூரியன் தங்கச்சி**
**சுந்தர வல்லிக்கு**
**நாளை கல்யாணம்**

எனப்பாடிக் கொண்டே ஒரு கல்லை மேலே போட்டு அது கீழ்வருவதற்குள் கீழிருக்கும் ஆறுகற்களில் ஒரு கல்லை எடுத்து விடவேண்டும். பின் அதே முறையில் ஆறு கற்களையும், ஒவ்வொன்றாய் எடுக்க வேண்டும், பின்

**ஈரிரண்டு எடுக்கவே**
**பெரண்டை தளையவே**
**புன்னை மரம் பூக்கவே**

எனப்பாடி, ஒரு கல்லை மேலே போட்டு, பிடிப்பதற்குள் இரண்டு இரண்டாய் மூன்று தடவையாகக் கீழிருக்கும் கற்களை எடுக்க வேண்டும். பின் அதே முறையில்

**மூவாடி ஆத்திலே**
**ராம சரத்திலே**
**சீதை வனத்திலே**

எனப்பாடி மூன்று மூன்றாய்க் கற்களை எடுக்க வேண்டும். பின்

**நாலே வாரி**
**ரெண்டெடு**
**நாராயணன் பேரெடு**
**பெயரைச் சொல்லி**
**பிச்சை எடு**

எனப்பாடி நான்கு, இரண்டு என கற்களை எடுக்கவேண்டும்.

பின்

**அஞ்சன குஞ்சலை**
**பாப்பாத்தி**
**அவல் இடிக்கிற**
**மகராசி**

எனப்பாடி ஐந்து, ஒன்று என்ற எண்ணிக்கையில் கற்களை எடுக்க வேண்டும். அடுத்து,



**ஆறவனே போறவனே**
**அரும்பி நடப்பவனே**
**திரும்பி பார்த்தா**
**திட்டுவானே**

எனப்பாடி மூன்று கற்களாய் கற்களை எடுக்க வேண்டும். அடுத்து,

**ஏழே எழுதுபிள்ளை**
**எழுத்தாணி மாடிபிள்ளை**
**குருத்தோலை கொண்டுவா**
**கொட்டைப்பெட்டி முடைஞ்சு தர்றேன்**

எனப்பாடி ஒன்று, இரண்டு, மூன்று என்ற எண்ணிக்கையில் கற்களை எடுக்க வேண்டும். அடுத்து,

**எட்டிடுவா**
**எங்க ஆச்சி**
**புட்டு தருவா**
**பெரியாச்சி**

எனப்பாடி இரண்டு, நான்கு என்ற வரிசையில் கற்களை எடுக்க வேண்டும். அடுத்து,

**உண்பேன் தின்பேன்**
**ஓலப்பிள்ளை**
**பாலு குடிக்கிற**
**பச்சைப்பிள்ளை**

எனப்பாடி ஒன்று, ஐந்து என்ற எண்ணிக்கையில் கற்களை எடுக்க வேண்டும். அடுத்து,

**பத்தே பதி அம்மைக்கு**
**பாக்குமரம் செல்விக்கு**
**வீர செத்திலை சாமிக்கும்**
**வெள்ளியினாலே கோலாட்டம்**

எனப்பாடி மூன்று, இரண்டு, ஒன்று என்ற எண்ணிக்கையில் கற்களை எடுக்க வேண்டும்.

மேலே கல்லைப் போடுவதும் அது கீழ் வருவதற்குள் சரியான எண்ணிக்கையில் கீழ் இருக்கும் கற்களை எடுத்து கீழ்வரும் கல்லை சரியாகப் பிடிப்பதும் முக்கியம்.

இப்படிக் களச்சி விளையாட்டில் ஆட்டங்கள் பல உள்ளன.

பாடலைப்பாடிக் கொண்டே ஒரு கல்லை மேலே எறிந்து பிடிப்பதற்குள் கீழ் இருக்கும் ஆறு கற்களில் இரண்டு இரண்டாய் மற்ற கற்கள் சிறிதும் அசைந்து விடாமல் கவனமாக எடுப்பதும் சிறப்பு அம்சமாகும்.

கீழ் பரந்து கிடக்கும் கற்களைக் கவனமாக எடுப்பதற்காக மேலே போடும் கல்லை உயரப் போடுவதும், அதற்கேற்ப பாடலைப்பாடுவதும், கைகளுக்கும் விரல்களுக்கும் கண்களுக்கும் ஒருங்கே பயிற்சி ... கவனம் மேலே எறிந்த கல்லிலும், கீழ்



இருக்கும் கற்களிலும், பாடலிலும் இருப்பதால் பல பணிகளையும் ஒரே நேரத்தில் சரியாக ஒருங்கே செய்யும் திறன் கிடைக்கிறது. ஞாபக சக்தியினை அதிகப்படுத்தும் பயிற்சி கிடைக்கிறது.

மற்றுமொரு ஆட்டத்தில் சுற்றி இருக்கும் சகபோட்டியாளர்கள் நகைச்சுவை சொல்லி, அபிநயம் செய்து சிரிப்புணர்வினைத் தூண்ட, களச்சி ஆடும் பெண் மணி அடக்கத்துடன் பல் தெரியாது தவறின்றி இந்த விளையாட்டினை விளையாட வேண்டும். இதனால் தன்னைக் கட்டுப்படுத்தும் திறன் வளர்கிறது. கண் மேலும் கீழும் அசைவதன் மூலம் கண்ணிற்கு நல்ல பயிற்சி. கிராமப் பகுதிகளில் இன்று ஓரளவு இந்த விளையாட்டு விளையாடப்படுகின்றது.

## கயிறு துள்ளல்

பெண்களுக்கான கயிறு துள்ளல் விளையாட்டு இன்று காண்பதற்கு அபூர்வமாகிவிட்டது. சுமார் இரண்டு மீட்டர் நீளமுள்ள கயிற்றின் இரு முனைகளையும் பிடித்துக் கொண்டு துள்ளி, கயிற்றினை கால்களுக்கு அடியோடு மேலும் கீழுமாய்ச் சுழல வைப்பதும், கயிறு தட்டாமல் துள்ளுவதும் கயிறு துள்ளல் விளையாட்டாகும். இது கால்களுக்கும் உடலின் மற்ற பகுதிகளுக்கும் நல்ல பயிற்சியாகும்.

மரங்களில் கயிற்றினைக் கட்டி ஊஞ்சல் விளையாடுவது இன்று காண்பதற்கு அரியதாகி விட்டது.

உடலின் அனைத்துப் பகுதிகளுக்கும் நல்ல பயிற்சியாக விளங்கும் நீச்சல் இன்று, இவ்விளையாட்டில் ஆர்வம் மிகுந்த, அதைச் சார்ந்த வீரர்களுக்கு மட்டுமே உரியதாகி விட்டது. குளங்கள் குறைந்து விட்டன. காங்கிரீட் கட்டிடங்களில் நீச்சலுக்கான வாய்ப்பும் புதைந்து விட்டது.

முந்தைய தலைமுறைக் குழந்தைகள் கூடச் சிறுவீடு கட்டி விளையாடினர். அதனால் அவர்களுக்கு வீட்டினைச் சுத்தமாக வைக்கும் உணர்வு சிறு வயதிலேயே ஊட்டப்பட்டது.

சிறு குழந்தைகள் கண்களை மூடிவிட்டு ஓடி ஒளிந்திருப்பவர்களைக் கண்டுபிடிக்கும் கண்ணாமூச்சி விளையாட்டு இன்று காணாமல் போய்விட்டது.

## ஆடு, ஓநாய் விளையாட்டு

சிறுவர்கள் வரிசையாக ஒருவரின் இடுப்பை ஒருவர் பிடித்துக் கொண்டிருப்பர். அவர்கள் ஆடுகளாவர். அவர்களை சுற்றி வருபவன் ஓநாயாகக் கருதப்படுவான். 'என் ஆட்டைக்காணோம' என நிற்படன் கூறுவான். வரிசையிலிருந்து பிரிந்து நிற்பவனைச் சுற்றி வருபவன் தொட்டால் தொடப்பட்டவன் சுற்றி வரவேண்டும். நாம் சேர்ந்திருந்தால் எதிரியால் ஆபத்தில்லை என்ற ஒற்றுமை உணர்வினை வலிறுத்தும் இந்த விளையாட்டு.

## நிலாப்பூச்சி

நிலாக்காலங்களில் சிறுவர் சிறுமியரால் விளையாடப்படும் விளையாட்டு இது. ஒருத்தி நிலா வெளிச்சத்தில் நின்று கொள்ள, மற்றவர்கள் நிழலில் நின்று கொள்வர். வெளிச்சத்திற்கு வருபவர்களை ஓடித்தொடுவதே இந்த விளையாட்டு. இயற்கையை நேசிக்கும் உணர்வினை மனதினுள் உருவாக்கும் விளையாட்டு இது.



'குலை குலையா முந்திரிக்காய், நிறைய நிறைய கொண்டுவா' என்ற பாடலோடு விளையாடப்படும் வட்டத்திரி விளையாட்டு, இன்றைய தலைமுறையை எட்டவில்லை.

இன்றைய சதுரங்கத்தின் மாதிரியான அன்றைய ஆடு புலி ஆட்டம், தாயம், பல்லாங்குழி போன்றவை இன்றைய தலைமுறைக் குழந்தைகள் அறியாத அழிவிற்கு ஆகிவிட்டன.

சுண்டு விரலுக்குள் சுருங்கிப்போனது இன்றைய உலகம். பொழுதை மனதிற்கும், உடலுக்கும் பயனுள்ள விதமாகப் பயன்படுத்திக் கொள்ளும் நோக்கில் உருவானவையே பொழுதுபோக்கு விளையாட்டுகள்.

விஞ்ஞானத்தின் வியத்தகு வளர்ச்சியில் சிலருக்குப் போக்குவதற்குப் பொழுதுகளும் இல்லை. சிலர் தொலைக்காட்சியின் பல அலைவரிசைகளுக்குத் தம் வாழ்க்கையையே வழங்கி விடுகிறார்கள். அன்றைய பொழுதுபோக்கு விளையாட்டுகளோடு ஒப்பீடு செய்யும் போது இன்றைய பொழுதுபோக்கு விளையாட்டுகளைத் தனித்தனியாகச் சொல்லுமளவிற்கு எந்தத் தனி அம்சமும் இல்லை. இயற்கையோடு சார்ந்த விளையாட்டுப் பொருட்கள் கௌரவம் குறைந்தவைகளாகவே கருதப்படுகின்றன. மின்னணு சாதனங்களோடு தொடர்புடைய விளையாட்டுப் பொருட்களுக்குத் தனி மரியாதை அளிக்கப்படுகிறது. கிரிக்கெட் ஆர்வம் மற்ற விளையாட்டுகளைப் பற்றி நினைக்கக் கூட அனுமதிப்பதில்லை. இவ்விளையாட்டினைத் தொலைக்காட்சியில் கண்டுகளிப்பதிலேயே பலர் தம் பொழுதைக் கழித்துவிடுகின்றனர்.



எண்ணெய்ப் பல காரங்களைக் கொறித்துக் கொண்டே எந்த

இயக்கமுமின்றி இவர்களின் பொழுதுகள் கழிந்து விடுவதால், உடற்பயிற்சியின்றி உடல்களுக்கும் கேடு. இன்னும் உட்கார்ந்து தின்னும் எண்ணெய்ப் பலகாரங்களால் உடலின் கொழுப்புச் சத்து ஏறிவிடும்.

இன்னும் குழந்தைப் பருவத்திலேயே நாம் குழந்தைகளுக்கு வாங்கிப் பழக்கும் விளையாட்டுப் பொருட்கள் கூடப் பழமையான பயனுள்ள சென்ற தலைமுறையின் பல பொழுதுபோக்கு விளையாட்டுகளை அறியாமல் செய்து விடுகின்றன.

இன்னும் இன்றைய விளையாட்டுப் பொருள்களில் பெரும்பாலும் வகைவகையான துப்பாக்கி மாதிரிகள், தீயைக் கக்குவது போன்ற இயந்திரத் துப்பாக்கி வடிவப் பொம்மைகள், அபாயகரமான சப்தங்களை எழுப்பும் ஆம்புலன்ஸ் வடிவ வாகன பொம்மைகள்... என எதிர்மறையான சிந்தனைகளைத் தூண்டும் பொம்மைகளே அதிகமாகக் குழந்தைகளின் விளையாட்டுப் பொருட்களாக ஆக்கிரமித்திருக்கின்றன.

இன்றைய விளையாட்டுப் பொருட்கள் விஷத்தால் ஆக்கப்பட்ட ஒரு போலிக்கலை வடிவம். உண்மையில் விலையற்ற அந்தப் பொருளுக்கு நிறைய விலை கொடுக்கப்படுகிறது. இந்த விளையாட்டுப் பொருட்கள், எதிராளியைக் கொல்வது, அழிப்பது போன்ற பழிவாங்கும் உணர்வை வளர்க்கும் வன்முறை சிந்தனைகளைத் தூண்டும் சாதனங்களாகவே உள்ளன.

பொழுதுபோக்கு விளையாட்டுக் கொள்கையில் புனராக்கக் கொள்கை என்று ஒன்று உண்டு. ஸ்டான்லி ஹால் அவர்களின் விளக்கப்படி, அவ்விளையாட்டின் வழியாக ஒரு குழந்தை தன் இனத்தின் பண்டைய செயல்களையும் அனுபவங்களையும் மீண்டும் பெறுகிறது என்பதாகும்.

பழைய பொழுதுபோக்கு விளையாட்டுப் பொருட்கள் குழந்தைகள் தானே நேர்த்தியுடன் தயார் செய்து கொள்வதால், ஒரு பொருளைப் பயன்மிகு பொருளாய் ஆக்கும் கலை ஆற்றல்... படைப்பாற்றல் வளர்கிறது. நம் மூதாதையர் உபயோகித்த விளையாட்டுப் பொருட்களைத் தலைமுறை தலைமுறையாய் உபயோகிப்பதால் அந்தப் பொருள் ஒரு பாரம்பரிய சின்னமாக விளங்குகிறது.

பழைய விளையாட்டுப் பொருட்களை விளையாடுவதற்குப் பொருளாதாரத் தகுதி தடையாக இல்லை. பழைய விளையாட்டுச் சாதனங்களில் கல், மரம், மண் இவைகளோடு நேரடித் தொடர்பு இருந்ததால், இயற்கையுடனான உறவு இறுக்கமாகவும், இயற்கையினைப் பாதுகாக்கும் உணர்வும் மனிதனுள் இருந்தது.

இந்தக் கணிப்பொறி யுகத்தில், சுண்டு விரலுக்குள் சுருக்கப்பட்ட இந்தத் தகவல் வலை எனும் 'இண்டர்னெட்' யுகத்தில் நாம் அடைந்த சாதனைகள்... வசதிகள் எல்லாம் நம் மனித சமூகம் அடைந்த வெற்றிகள்தான். அதே சமயத்தில் இன்று இழந்த இந்தப் பழைய பாரம்பரியமிக்க பொழுதுபோக்கு விளையாட்டுகளும், அதனால் நாம் இழந்த ஆரோக்கியமும் நாம் அடைந்த பெரிய தோல்விகளாகும்.

பாம்பரியமிக்க இந்தப் பழைய விளையாட்டுகளுக்குப் புத்துயிர் அளித்துப் புதிய தலைமுறைக்குப் பயன்தர வைப்பது நமது கடமை.





# காந்தியைக் கவர்ந்த கவிஞர்

மகாத்மா காந்திக்கு மிக மிகப் பிடித்த பாடல் 'வைஷ்ணவ ஜனதோ!' தன் வாழ்நாளில் ஒவ்வொரு நாளும் மாலைப் பிரார்த்தனைக் கூட்டங்களில் அவர் இப்பாடலைப் பாடுவது வழக்கம். மதுரையிலும் பின்னர் கல்கத்தாவிலும் அவரது பிரார்த்தனைக் கூட்டங்களில் கலந்து கொண்டு நானும் இதைக் கேட்டிருக்கிறேன். எம்.எஸ். பாடி, இப்பாடல் மேலும் பிரபலமானது. இப்பாடலைப் பாடியவர் குஜராத்திக் கவிதையின் தந்தை எனப் போற்றப்படும் நரசிம்ம மேத்தா என்ற கிருஷ்ணபக்தக் கவிஞர். தன்னை நர்சி என்றே தன் பாடல்களில் குறிப்பிடுவதால் அவர் நர்சி மேத்தா என்றே உலகுக்கு அறிமுகமானார்.

நர்சி மேத்தா கி.பி. 1414 -ஆம் ஆண்டு குஜராத் மாநிலத்தில் தலாஜா என்ற ஊரில் நாகர் பிராமண குலத்தில் பிறந்தார். அவரது தந்தை கிருஷ்ண தாஸ். தாத்தா விஷ்ணு தாஸ் ஜுனகாட் அரசரின் தலைமைக் குமாஸ்தாவாகப் பணியாற்றினார். நர்சி தனது மூன்றாவது வயதில் தந்தையை இழந்தார். 11 -ஆவது வயதில் தாயையும் இழந்தார். 1428 ஆம் ஆண்டு மனக் பாயை மணந்தார். பிறகு பன்சிதர் என்ற அண்ணனோடு வாழ்ந்தார். குடும்பத்தில் அக்கறையின்றி, வருவாயுமின்றி இருந்த அவரை அண்ணி கடிந்து கொள்ள, ஒருநாள் வீட்டை விட்டு வெளியேறி 40 மைல் தொலைவிலிருந்த கோப்நாத் கிராமத்திற்குச் சென்றார். அங்கிருந்த பாழடைந்த சிவன் கோவிலில் பட்டினி கிடந்து உயிரை விடத் தீர்மானித்தார். கி.பி. 1428 சித்திரை மாதத்தில் ஏழு நாட்கள் அன்ன ஆகாரமின்றி தியானத்தில் இருந்தார். உடல் இளைத்து ஜன்னி கண்டு, சமாதி நிலையெய்தினார். அப்போது அவருக்கு ஒரு பேரனுபவம் ஏற்பட்டது. அதை அவரே ஒரு பாடலில் விவரிக்கிறார்.

''என் முன்னே சிவபெருமான் தோன்றினார். அவருக்கு மிகவும் பிடித்த ஒரு காட்சியை எனக்குக் காட்டுமாறு சிவனை வேண்டினேன். அவரும் என் தலையில் தன் பொற்கரங்களை வைத்தார். உடனே என் கண் முன்னே விரிந்தது கோபியரோடு கண்ணன் ஆடிய ராசக்ரீடை.''

நர்சி மேலும் சொல்லுகி

கொழும்பு தமிழ்ச் சங்கம

## நர்சி மேத்தா

மு. ஸ்ரீநிவாஸன்

றார்: ''ருக்மிணிவேண்ட அக் காட்சிக்கு ஒளியூட்டிய ஒரு தீப் பந்தத்தை நான் பிடித்துக் கொண்டேன். கிருஷ்ணனும், ராதையும், பிற கோபியரும், ருக்மிணியும், சத்ய பாமையும் ஆடிய அந்த அற்புத ராசக்ரீ டையைக் கண்டு உள்ளம் களி வெறி கொண்டேன். கண் ணன் என் ஊனும் உயிரும் உருக என் கண்முன்னே ஆடிய ஆட்டத்தை நான் கண் டபடியே என் வாழ் நாளெல்லாம் பாடி மகிழ்கி றேன்.''

இந்த நிகழ்ச்சி அவரது வாழ்க்கையையே மாற்றிவிட்டது. நாளெல்லாம் பஜனை வழிபாடு என்றே கழிந்தன. நர்சி, ஜுனகாட் நகருக்குக் குடி பெயர்ந்தார். அங்கும் இறைவன் மீது பாரத்தைப் போட்டு விட்டு அவனது புகழைப் பாடிக் கொண்டிருந்தார். குன்வர் பாய் என்ற மகளும், சியாமல் தாஸ் என்ற மகனும் பிறந்தனர்.

13 ஆண்டுகளுக்குப் பின் அவரது மகள் குன் வர்பாய் கருவுற்ற போது, ஏழாவது மாதம் செய்ய வேண்டிய சீர்வகைகளைச் செய்யும் வசதி அவ ருக்கில்லை. ஆனால் குஜராத்தி சமூகத்தினரிடம் இது ஒரு முக்கியமான தவிர்க்க முடியாத கட்டா யம். அப்போது கிருஷ்ண பகவானும் ருக்மிணி யுமே வந்து சம்பந்திகளுக்கு பொன்னும் பொரு ளுமாக சீர் வகைகளைச் செய்தனர் என்று நர்சி தன் நூலான 'குன்வர்பாய் நுமாமே ருன்' இல் குறிப்பிடுகிறார்.



இப்படியே மகன் சியாமன் தாசின் திருமணத்தையும் கண் ணனே நடத்தி வைத்ததாக 'சியா மன் ஷா விவாஹ்' என்ற பாடல் களில் சொல்லுகிறார். மற் றொரு சமயம் துவாரகை செல் லும் ஒரு யாத்ரிகருக்கு அங்கு சியாமள்ஷா என்ற பெய ருக்கு நர்சி ஓர் உண்டி கொடுத்தார். ஆனால் அந்த யாத்ரிகர் துவாரகையில் எவ்வளவோ விசாரித்தும் அங்கு அந்தப் பெயருடை யவர் யாரும் இல்லை. அப் போது துவாரகாதீசனான கண்ணனே சியாமள் ஷாவாக வந்து அந்த உண்டித் தொகையைக் கொடுத்தான். இப்படி நர்சி மேத்தாவின் வாழ்க்கை யில் எத்தனையோ அநுபவங்கள்.

அவர் பிறந்த சமூகமாகிய நாகர் பிரா மணர்களே, அநாசார வழிகளைக் கடைப்பிடிப் பவர் என்று அவரை வெறுத்து ஜாதிப்ரஷ்டம் செய்தனர். அதை அவர் சட்டை செய்ய வில்லை. அதனால் வெகுண்ட அந்தணர்கள் சைவனான ஜுனகாட் மன்ன னிடம் நர்சி மேத்தா ஒழுங்கீன மான முறையில் உயர் ஜாதிப் பெண்களையும் சேர்த்துக் கொண்டு சேரி மக்களது வீடு களில் நடனம் மற்றும் கேளிக் கைகளில் ஈடுபடுகிறார் என்று குற்றம் சாட்டினர். அர சனும் நர்சியை அழைத்து அவர் குற்றமற்றவராக இருந் தால் அவர் வணங்கும் கண் ணனே அவருக்கு மாலையிட வேண்டும் என்று நிபந்தனை விதித்தான். அப்போது நர்சி கண்ணனிடம் முறையிட்ட பாடல்கள் ஹர்-மாலா என்ற பெயரில் மிக உருக்கமா னவை.

நர்சி பாடி முடித்ததும் அரண்மனைக் கோவில் கதவு கள் தாமே திறந்து இறைவனே வந்து நர்சி மேத்தாவுக்கு மாலையணிவித்து அவர் நிரப ராதி என்று உலகறியச் செய் தான். இது நடந்தது கி.பி. 1456 ஆம் ஆண்டில். முஸ்லிம் படையெடுப்பு ஜுனகா ட்டுக்கு வரவும், நர்சி அமை தியை விரும்பி மங்ரோல் என்ற ஊருக்குச் சென்று தனது பாடும் பணியைச் செய்து கொண்டு அங்கு வாழ்ந்தார். அவர் கி.பி. 1480 இல் தன் 66 - வது வயதில் இறைவனடி சேர்ந்தார்.

நர்சி மேத்தாவின் பாடல்கள் மூன்று வகைப் பட்டவை - கிருஷ்ண சரிதப் பாடல்கள் (பாகவ தம், கீத கோவிந்தம் வழிப் பாடல்கள்), சுயசரி தைப் பாடல்கள், பக்தி - தத்துவப் பாடல்கள் என, கிருஷ்ண ஜன்ம, பாலலீலா, நாக தமன், தான் லீலா, ராச லீலா, ராச ஸஹஸ்ரபதி, சுதாம சரிதம், மான லீலா, ருக்மிணி விவாஹ், கோவிந்த கமன், சுரத் ஸங்க்ராம், ச்ருங்கார மாலா, தசாவ தார முதலியன முதல் வகை. மாமேருன், ச்யா மள் ஷா விவாஹ், ஹர்-மாலா சுயசரிதைப் பாடல்கள் ஞான பக்திப் பாடல்களெல்லாம் தனிப் பாடல்கள்.

நவீன குஜராத்திக் கவிதையின் தந்தை எனப் போற்றப்படும் நர்சியின் பாடல்கள் மிக எளிய, ஜன ரஞ்சகமான நடையில் பாடுவதற்காகவே எழுதப்பட்டவை. கர்ண பரம்பரையாக வந்த அவரது ப்ரபாதியா என்ற காலைப் பாடல்களை இன்றும் குஜராத் கிராமங்களில் பஜனையாக மக் கள் பாடுகிறார்கள்.

கண்ணன் பாடல் ஒன்றில் யசோதையாக இருந்து கொண்டு பாலகோபாலனை எழுப்புகி றார் நர்சி:

**கண்ணா எழுந்திரு கண்விழித்து எழுந்திரு**
**ஆநிரை அவற்றை மேய்த்திடக் கொண்டுசெல்**
**ஆயிரம் கோபர்கள் அருகிருந் தாலும்**
**அவர்களின் தலைவனாய் வேறொரு ஆளிலை.**
**பண்டங்கள் ஆருளர்? உடனே எழுந்திரு.**
**தீஞ்சுவைப் பாலும் தித்திக்க வைத்துளேன்**
**பாயினின்று எழுந்துவா பாலையும் பருகவா.**
**காளியன் தலைமேல் களிநடம் புரிந்தவா**
**தரணியின் பாரத்தைத் தாங்கிட எழுந்துவா.**
**யமுனைக் கரையில் ஆவினம் மேய்ந்திட**
**உலகம் வியப்ப உள்ளம் களிப்புற**
**வேய்ங்குழல் இசைக்க வேறுளர் யாரே?**
**கவிழும் படகினைக் காத்திட உனையலால்**
**திக்கு வேறில்லை தீன தயாளா**
**உன்புகழ் பாடியே உவப்பேன் நர்சியும்.**

மழைக் காலம் முடிந்து சரத்ருது வந்தது. வானம் தெளிந்தது. ஏரி குளங்கள் நிறைந்து எங்



கோயிலில் உள்ள நர்சி சிலை

கும் பசுமை. கோப கோபியருக்கு ஒரே மகிழ்ச்சி, பால் போல் நிலவு மின்னும் ஒரு பௌர்ணமி இரவில், யமுனைக் கரையில் கண்ணன் குழலூத, அவனோடு ராசக்ரீடை செய்தனர் கோபியர். விண்ணவர் யாவரும் வியந்து நோக்கினர்.

*மரகதக் காடுகள் மலிந்த இடமாய்*
*பேரெழில் வாய்ந்தது பிருந்தாவனமாம்.*
*பெருமை வாய்ந்ததிம் மங்களத் திங்களும்.*
*சரத் காலச் சந்திரன் வானில்*
*தண்ணொளி பரப்ப தரணி மயங்கிட*
*யமுனைக் கரையில் ஏகாந் தத்தில்*
*கண்ணன் இசைக்கக் காற்றில் கலந்த*
*புல்லாங் குழலில் பொங்கித் ததும்பும்*
*மந்திர ஒலியும் மனதைக் கவர்ந்திட*
*கோபியர் கேட்டே களிமிகக் கொண்டனர்,*
*ராசக் கிரீடை நடமிட விரைந்தனர்.*
*கண்ணன் கோபியர் களிநடம் என்பது*
*காணக் கிடைக்கா காட்சி அல்லவோ?*
*இந்திராதி தேவர் இறங்கி வந்தனர்*
*கண்ணன் லீலையைக் காண விரைந்தனர்.*
*கண்ணன் கோபியர் கூடி மகிழ்ந்த*
*ராசக் கிரீடையர் இன்பக் கிரீடை.*
*தேனென இனித்தஇத் தெய்வக் காட்சியை*
*நரசியும் கண்டான் நல்லின்ப*
*மும் கொண்டான்.*

'ஈனப் பறையர்களேனும் அவர் எம்முடன் வாழ்ந்திங்கு இருப்பவரன்றோ' என்று பாரதி பாடிய பறையருக்கும் புலையருக்கும் ஹரியின் மக்கள் என்று பொருள்படும் 'ஹரிஜன' என்ற சொல்லை முதன் முதலாகப் பயன்படுத்தி அவர்களுக்கு ஏற்றம் தந்தவர் நர்சியே. அக்காலத்துக்கு அது மிகப் பெரிய சமூகப் புரட்சி. அச்சொல்லையே மகாத்மா காந்தி எடுத்துக் கொண்டார். தன் பத்திரிகைக்கு 'ஹரிஜன்' என்றே பெயர் வைத்தார். உண்மையில் காந்திஜியின் வழிகாட்டிகளில் முக்கியமானவர் நர்சி மேத்தா என்றால் மிகையாகாது. அதிலும் குறிப்பாக 'வைஷ்ணவ ஜனதோ'





பாடலைத் தன் வாழ்க்கையின் லட்சியமாக அவர் அமைத்துக் கொண்டார். உண்மையான வைஷ்ணவன் யாரென்று அப்பாடலில் நர்சி மேத்தா சொல்லுகிறார்.

*வைணவன் எவனென விளம்புவன் நர்சி:*
*கருணை வடிவாய்க் காண்பவன் எவனோ*
*துன்பப் படுவோர் துயர் தீப்பவனோ*
*அதிலோர் பெருமை தேடான் எவனோ*
*தரணி மாந்தரைத் தாழ்ந்து வணங்குவோன்*
*எவரையும் இகழும் இயல்பற் றவனாய்*
*சிந்தனை சொல்லும் செயலனைத் திலுமே*
*தூய்மை; அவன்தன் அன்னைக்கு அணிகலன்.*
*விருப்பம் வேட்கை விடுபட் டவனாய்*
*பெண்களைத் தாயாய்ப் பேணும் உளத்தோன்*
*பொய்மை பேசான் பொறாமை அகன்றான்*
*பேராசை வஞ்சம் பேணா நெஞ்சினன்*
*பற்றுதல் அற்றான் தெய்வப் பற்றுளான்*
*அவனை அறிந்த அன்பர் குலமெலாம்*
*நற்கதி பெற்றிடும் நர்சியின் வாக்கிது.*

இறைவன் இல்லாத இடம் இல்லை, எல்லாம் அவனே, அவனன்றி வேறில்லை என்பதை உணர்ந்து விட்டால், நிச்சயமாக இறைவனை அடையலாம் என்று உறுதியளிக்கிறார் நர்சி.

*ஆயிர மாயிரம் வடிவங்கள்*
*கொண்டாய்*
*ஆயினும் உன்னை யன்றி*
*வேறில்லை.*
*உடலில் உறையும் ஆன்மா*
*நீயே*
*உயரே உலவும் கதிரவன் நீயே*
*ஓமென வேதம் உரைப்பதும்*
*நீயே.*
*நீயே நிலமும் நீரும் நீயே*
*கடுகிச் செல்லும் நீரும் நீயே*
*மலைகள் மரங்கள் மற்றுள*
*எல்லாம்*
*நீயே ஆனாய்; பின்னர் நீயும்*
*படைத்த இன்பம் பலவும்*
*துய்த்திட*
*மனிதனாக மண்ணில் பிறந்*
*தாய்.*
*பொன்னும் பொன்அணி*
*கலன்களும் ஒன்றே*
*பற்பல பெயர்களில் பார்த்திட்*
*டாலும்*
*அனைத்தும் பொன்னே அன்றி*
*வேறில்லை*
*என்றே உரைக்கும் எண்ணரும்*
*வேதம்.*
*மரத்தில் விதைநீ விதையில்*
*மரம்நீ*
*பார்ப்பதில் உள்ளதே பலவேற்*
*றுமையும்.*
*உளத்தின் கற்பனை இவை*
*யென உணர்ந்து*
*அன்பெனும் துணையை*
*அகத்தில் நிறுத்தி*
*உன்னைக் காண்பது*
*உறுதியாம் என்றே*
*உரைத்தேன் நர்சி உண்மை*
*வாக்கிது.*

(பாடல்களின் தமிழ் வடிவம்: கட்டுரையாசிரியர்)

# பாணபட்டர் பிறந்த இடம் எது?

காதம்பரி படைப்பாளி

புகழின் சிகரத்தில் அமர்ந்திருக்கும் பாணபட்டர் - புதுமை படைத்த கவிஞர், கதாசிரியர். அவரது பெயர் அவரது ஜன்மபூமியில் வழங்கி வரும் வழக்கத்துடன் தொடர்புடையது.

விந்திய மலைப் பகுதியில் அதுதான் அவரது ஜன்மபூமி. தாய் தந்தையருக்கு ஒரே பிள்ளையாகப் பிறந்திருந்தால் அந்தக் குழந்தை பாணா / பண்டா / பணுவா / என்று அழைக்கப்படும். அவருடைய பெயரே அவர் ஒரே பிள்ளை - பெற்றோர்க்கு என்று ஊகிக்கலாம். அவரது பெயரின் தொடர்பு விந்தியப் பகுதியின் மண்ணுடன் தொடர்புடையது.

பாணபட்டர் வத்ச கோத்திரத்தில் உதித்த அந்தணர். இந்த அந்தணர்கள் இன்றும் விந்தியப் பகுதியில் ஸிதி மாவட்டத்தில் உள்ள பரமர்சேன் தாலுக்காவில் தன்ஹான், புடுவா, ரத்வார், பகட் கிராமங்களில் வசிக்கின்றனர்.

அவரது படைப்பான காதம்பரியைப் படிப்பவர்கள் அவர் பிறந்த இடங்களின் இயற்கை அழகை உணரமுடியும். அவர் பாடலிபுரத்தினின்று தனது ஜன்மபூமியான பிரமர்சேன் பகுதியில் உள்ள மரங்களை வருணித்துள்ளார். அவர் வாழ்ந்தது ஆறாம் நூற்றாண்டு. அந்தக் கால கட்டத்தில் இன்றுபோல் போக்குவரத்து சாதனம் இல்லை. கால்நடையாகவே பாடலிபுரம் போய் வரவேண்டும். அவர் வருணித்துள்ள மரங்கள் இன்றும் அந்தப் பகுதியில் உள்ளன.

காதம்பரியில் 'ஹரிண்யவாஹ்' என்ற பெயர் அடிக்கடி வருவதை நாம் அறிவோம். இது ஒரு ஜீவ நதி. அவரது கிராமத்திற்கு அருகில் ஓடுகிறது என்று அவர் குறிப்பிடுகிறார். ஹிரண்ய என்றால் ஸோன் (தங்கம்) வாஹ் என்றால் பிரவாகம் என்று பொருள். அவர் வாழ்ந்த ஆறாம் நூற்றாண்டில் இந்த நதி ஹிரண்யவாஹ் என்று அழைக்கப்பட்டு பின்னர் மருவி இன்று 'ஸோன்பத்ர' என்று அழைக்கப்படுகிறது. பாணபட்டர் தமது படைப்பில் அவர் பிறந்த ஊருக்கு அருகில் ஒருபுறம் சரஸ்வதியும் மறு கரையில் சியவன் ஆசிரமமும் உள்ளன என்று குறிப்பிடுகிறார். இன்று பிராமர்ஸேன் கிராமத்திற்கு அருகே உள்ளது சந்திரேஹ் கிராமம்! இங்குதான் 'ச்யவன்' ஆசிரமம் இருந்தது. இந்தக் கூற்றை பேராசிரியர் கிருஷ்ணதத்த வாஜ்பேயியும் ஒப்புக் கொள்ளுகிறார்.

அவரது பிறந்த கிராமத்திற்கு அருகில் 'ஹிரண்யவாஹ்' நதி ஓடுவதையும் இவரது ஊருக்கு அருகே இந்த நதி தென்திசையினின்று வடதிசை நோக்கி ஓடுவதையும் பாணர் குறிப்பிடுகிறார்.

மலைகளைத் துளைத்துக் கொண்டு நதி ஓடுகிறது. ஏராளமான தேன் கூடுகள் தொங்குகின்றன. ஸோன்பத்ர என்று இன்று வழங்கும் நதி மாமரக் காடுகளின் வழியாக ஓடுகிறது. பிரமர்ஸேனின் அழகே அழகுதான்.

இன்றுள்ள வேட்டையாடும் பகுதியான பிரமரசேனுக்கு சுற்றுப் புறத்தில் உள்ள காடுகளில் சிங்கங்கள் இருந்தன. அங்கு மான்களின் கூட்டமும் வாழ்ந்தன. இதை பாணர் தனது படைப்புகளில் குறிப்பிடுகிறார். இவை சமீப காலம்வரை அங்குள்ள கானகங்களில் காணப்பட்டு வந்தன.

அந்தப் பகுதிகளில் சிங்கங்களின் கர்ஜனையும், சுவாஹா, ஸ்வதா என்ற வேதமந்திரங்களின் த்வனியும் ஒன்றாகவே கேட்குமாம்.

இந்தப் பகுதிகளில் வேத விற்பன்னர்களான சதுர்வேத அந்தணர்கள் இன்றும் ஏராளமானவர் உள்ளனர். ஒரு விசேஷ வகையான வெண்மை நிறமுள்ள சிங்கங்கள் இங்கு வாழ்ந்து வந்தன.

காதம்பரியின் தொடக்கத்தில் பகவான் சங்கர் அருளும் கடவுளாக சித்தரிக்கப்பட்டு வணங்கப்படுகிறார். இதனால் சிவனின் பக்தர்கள் நிரம்பிய பகுதியில் பாணபட்டர் வாழ்ந்துள்ளார் என அறியலாம்.

இன்றும் வேட்டைப் பகுதியான ஸிதி மாவட்டத்தின் பிரமஸேன் பகுதியில் உள்ள சிவாலயங்கள் இதற்கு சான்று தருகின்றன. உலகப் புகழ் பெற்ற பாண பட்டர் இங்குதான் வாழ்ந்தார் என்பதற்கு இந்த சிவாலயங்கள் சாட்சி என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

பாணபட்டர் தோன்றிய பகுதியிலுள்ள மலைகளில் கணவாய்கள் உள்ளன. அதை அடுத்து மிக உயர்ந்த மலைகளின் சிகரங்கள். அந்தப் பகுதி முழுவதிலும் தேனீக்களின் பெரிய அடைகள், கூடுகள் ஆயிரக் கணக்கில் இன்றும் காணமுடிகிறது. பாணபட்டர் தமது படைப்புகளில் இவைகளைக் குறிப்பிட்டுள்ளார். தேனீக்களின் பகுதியானதால்தான் இந்தப் பகுதி 'ப்ரமர்ஸேன்' என்று அழைக்கப்பட்டிருக்கலாம். ப்ரமர் என்றால் ஸம்ஸ்கிருதத்தில் வண்டுகள் என்று பொருள்.

பாணபட்டர் இந்தப் பகுதியில்தான் பிறந்து வாழ்ந்தார் என்பதற்கு மேலும் ஒரு சான்று உள்ளது. அவர் எழுதிய காதம்பரியிலும், ஹர்ஷ சரிதத்திலும் கட் என்ற இனத்தவரும் குன்வி என்னும் இனத்தவரும் வாழ்ந்து வருவதாகக் கூறப்பட்டுள்ளது. இன்று அந்த இனத்தவர் குன்பி என்னும் கூர்ம வமிசத்தவர் என்னும் அழைக்கப்படுகின்றனர். இவர்களின் ஜனத்தொகை கணிசமானவை. அதனால் நாம் பாணபட்டர் பிரமர்ஸேனில்தான் பிறந்தார் என்று துணிவுடன் கூறலாம்.

ஹர்ஷ சரிதத்தில் 'ஸ்கந்தார்' என்ற பகுதி குறிப்பிடப்பட்டுள்ளது. இது இப்போது ஸிதி மாவட்டத்தில் உள்ள கந்தவார் என்ற பகுதிதான். மகாராஜா ஹர்ஷர் அழைத்தபோதெல்லாம் பாணபட்டர் அதிகாலையில் தனது விட்டினின்று புறப்படுவாராம். நடுப்பகலை இதே ஸ்கந்தாவாரில் (கந்தவார்) தங்கி இளைப்பாறிவிட்டுச் செல்வாராம்.

மத்தியப் பிரதேசத்தில் நீண்ட நாள் முதல்வராக இருந்தவர் கோவிந்த நாராயணன் சிங். அவருக்கு ஸம்ஸ்கிருதத்தில் நல்ல புலமை உண்டு. அவர் நாளில் ஸோன் நதியில் 'தேவலௌந்த' என்ற பகுதியில் அணை கட்டப்பட்டது. அதனருகில் இருந்துதான்

பாணபட்டர் சாதனைகள் படைத்தார். அதனால் அந்த அணையை பாணஸாகர் என்று பெயரிட்டு பெருமைப்படுத்தினார்.

அவருக்கு இதில் ஆலோசனை கூறியவர் சர்வோதயவாதியான சந்திர பிரதாப் திவாரி என்பவர். இதனால் பாணபட்டர் இந்தப் பகுதியைச் சேர்ந்தவர் என்பதற்கு அங்கீகாரம் கிடைத்தது.

தமிழில் : தியாகி. டி.எஸ். ராஜூசர்மா

ஹிந்தியில் : ஸ்ரீ முத்ரிகா பிரசாத் துவேதி

பிராணா லோக் - ஹிந்தி ஆராய்ச்சி இதழ்

## கவிதை

வார்த்தைகளை
சிந்திவிடலாம்
அள்ள முடியாது....
வாஸ்தவம் தான்
சிந்திக் கொண்டேயிருக்கிறார்
கள்
கவிஞனென்று
சொல்லிக்கொண்டு!

அள்ளித்
தீரவில்லை
தொலையவில்லை....

சொற்களால்
ஆனதுதான் கவிதை
எனில்
சொற்களில்லை கவிதை!

- அபராஜிதா

கவிச்சுவை

## வேர்கள்

தூரிகைகள் காயும்முன்
காணவில்லை ஓவியங்கள்!
வெளிநாடு செல்லும் பட்டதாரிகள்!

- நாகஷரண், ஜம்புமடை

## இரை

கவித்தேடலில்
தான்கள் நிரம்பின
கவிதைகள் மட்டும்
காணாமற் போயின!

- பொன்கௌசல்யா தினகரன்

★ விதைவூன்றுவதில் தீவிரமாய்
ஆலயச்சுவரில்
எச்சமிடும் காக்கை!

★ பனித்துளி ருசிபார்க்கும்
இரவே போட்டு முடித்த
கோலங்கள்!

★ சண்டையில் மாணவர்கள்
கேலியாய்ச் சிரிக்கும்
சீருடைகள்!

ச. கணேஷ்குமார்

## நர்சரி பள்ளி

★ நாற்றுகள்
நசுக்கப்படுகின்றன
புத்தகச் சுமையில்!

கூவல் இல்லை
கடிகார அலறலோடு
அதிகாலை விடியல்

- வேடசந்தூர் கி. கனகராஜ்





# மிருகங்களின் பேசும் மொழி

## கற்பனையா? உண்மையா?

ச. நாகராஜன்

தமயந்தி அன்னத்தைத் தூது விட்டது, பாண்டவர்கள் பறவைகள் மிருகங்களின் சம்பாஷணைகளைக் கேட்டு ஆபத்திலிருந்து தப்பித்தது, விக்ரமாதித்தன் பறவைகளின் பேச்சைக் கேட்பது என்று இப்படி நமது இதிஹாஸ, புராண, பழம் கதைகளில் எங்கும் வரும் மிருகம் மற்றும் பறவைகளின் பேச்சு சுவாரசியமானவைதான்! ஆனால் இவை உண்மை அல்ல; வெறும் கற்பனை என்றே பெரும்பாலானோர் எண்ணுகின்றனர். உண்மை அதுவல்ல; மிருகங்கள் மற்றும் பறவைகள் தங்களுக்குள் பேசிக்கொள்கின்றன. தகவல்களைப் பரிமாறிக் கொள்கின்றன என்கிறது நவீன அறிவியல். கேட்க வியப்பாக இருந்தாலும் உண்மை இது தான் என்கிறது அறிவியல் ஆய்வு!

டாக்டர் சார்லெட் உலென்ப்ரோக் என்ற பெண்மணி சிறந்த விஞ்ஞானி. அவர் மிருகம் மற்றும் பறவைகளை நெடுங்காலம் உன்னிப்பாக ஆராய்ந்தார். அவரது ஆய்வு முடிவுகள் சுவாரசியமானவை; பிரமிப்பூட்டுபவை! ''ஒரே பூமியில் மிருகங்கள், பறவைகள், மனிதர்கள் வாழ்ந்தாலும்கூட நமது உலகம் தனி. அவைகளின் உலகம் தனி'' என்கிறார் அவர்.

''ஒரு சிலந்தி தன் வலைப் பின்னலில் நர்த்தனம் ஆடுகிறது. யானை தன் கால்கள் மூலம் கேட்கிறது. மீன்கள் தனது உடலிலிருந்து மின் அலைகளைப் பரப்பி மின்சார மொழியால் பேசுகிறது.

நவீன தொழில்நுட்பம் நாளுக்கு நாள் முன்னேறி வருவதால் தான் இவைகள் பேசுவதைக் கேட்க முடிகிறது என்கிறார் இந்த அதிசய விஞ்ஞானி.

ஓநாயின் உறுமல், டால்பினின் மெல்லிய விசில், குயிலின் இன்னிசைப் பாட்டு இவை அனைத்திலும் ஊடுருவி அடிப்படையாக இருப்பது ஒலி! ஒலியில் உள்ள வேறுபாடுகள் எல்லையற்றவை (Infinity) அவற்றைப் புதிர் அவிழ்ப்பது போல அவிழ்த்துப் பார்த்தால் ஏராளமான தகவல் பரிமாற்றங்கள் நடப்பது, நிகழ்வது தெரியும். ஆணும் பெண்ணும் உறவு கொள்ள விழைவதோ, குட்டிகளைப் பராமரிப்பதோ, உணவு தேடுவதோ, ஆபத்து வருவதைத் தெரிவிப்பதோ, அனைத்தையும் மிருகங்கள் இன்று வரை விஞ்ஞானிகள் உணர முடியாத அளவிற்கு நுட்பமாகவும் சிக்கலாகவும்

ஒலி மூலம் அனுப்புகின்றன.

## நுண்ணிய ஒலி அதிர்வுகள்

மனிதரின் காதுகள் இருபது முதல் 20000 ஹெர்ட்ஸ் வரை உள்ள ஒலி அதிர்வுகளைக் (Sound frequencies) கேட்க வல்லது. நாய்கள் 45000 ஹெர்ட்ஸ் வரை கேட்கும். பூனைகளோ, 85000 ஹெர்ட்ஸ் வரை கேட்கும். வெளவால்கள் ஒரு லட்சம் ஹெர்ட்ஸ் வரை கேட்கும் திறன் படைத்தவை. கும்மிருட்டில் கூட ஒலி அலைகள் மூலம் 'பார்க்கும்' திறன் கொண்டு எதன் மீதும் மோதாமல் அங்கும் இங்கும் பறப்பவை! சில அறிவியல் சோதனைகள் மூலம் வெளவால்கள் நம் தீயணைப்பு வண்டிகள் எழுப்புமளவு ஓசைகளை எழுப்புவது தெரிய வருகிறது. என்றாலும் நம்மால் அதைக் கேட்க முடியாது.


## யானைகளில் பேச்சு

யானைகளோ மிக நுண்ணிய ஒலி அதிர்வுகளைத் தங்களுக்குள் தகவல் பரிமாறுவதற்காக உபயோகிக்கின்றன. இது பல மைல் தூரம் வரை செல்லும். ஆச்சரியத்தைத் தெரிவிக்கவும் ஆபத்தை அறிவிக்கவும் உதவி கேட்கவும் அது தும்பிக்கையைத் தூக்கி பிளிறுகிறது. கூட்டமாகச் செல்லும் போது கூட்டத் தலைவியான பெண் யானை ஆபத்தைக் கண்டால் துதிக்கையை உயர்த்திக் கோபத்துடன் பிளிறுகிறது. காதுகளை அகல விரிக்கிறது. எதிரியை இது பயமுறுத்தாவிடில் எதிரிகளை உடனே தாக்க ஆரம்பிக்கிறது - மணிக்கு 25 மைல் வேகத்தில்! சமாதான காலத்திலோ இது முணுமுணுக்கிறது. ''யானை முணுமுணுக்கும் போது அருகில் இருப்பதே ஒரு ஆச்சரியமான அனுபவம்'' என்று கூறும் சார்லெட், ''பதினைந்து அடி தூரத்தில் அதன் ஒலி அளவு 95 டெசிபலாக இருக்கிறது. இது டீசல் எஞ்ஜின் அருகே இருந்தால் நாம் கேட்கும் சப்தத்தை ஒத்தது'' என்கிறார்.



சார்லெட்.

யானைகள் 'இன்ப்ரா சவுண்ட்'' (Infra Sound) எனப்படும் மிகக் கீழான அளவு ஒலி அலைகளை எழுப்ப வல்லவை. இரண்டு கிலோ மீட்டரிலிருந்தே இதை இனம் காண முடியும். மனித ஒப்பீட்டில் இதைக் கூறுவது என்றால் நமது நகரின் எதிர் கோடியிலிருந்து நண்பன் நம்மை அழைப்பதைப் போன்றது என்று கொள்ளலாம்.





கென்யாவில் உள்ள அம்ப்ரோஸி நேஷனல் பார்க்கில் நடத்திய ஆராய்ச்சியில் ஆராய்ச்சியாளர்கள் 70 விதமான ஒலிகளை அவைகள் எழுப்புகின்றன என்று குறித்துள்ளார்கள். ''முதலில் ஏதோ சத்தம் என்று எண்ணி இருந்த எனக்கு நாள் செல்லச் செல்லத்தான் இந்த மறைந்திருக்கும் மொழியும் அதன் அர்த்தமும் புரிய ஆரம்பித்தது'' என்று கூறுகிறார் சார்லெட்.

## பெங்குயின் கொடுக்கும் அழைப்பு

க்ராஜெட் தீவுகளில் (Crozet islands) பெங்குயின்களை ஆராய்ந்த போது ஆச்சரியம் காத்திருந்தது. 300 மைல்கள் தாண்டி இரை தேடப் போன தாய் தந்தை பெங்குயின்கள் திரும்பி வந்தவுடன் தன் குட்டிகள் இருக்கும் இடத்தை அறிந்து கொள்ள குரல் கொடுத்தன. உடனே அவை இருக்கும் இடத்தை அறிந்து கொண்டு அங்கே சென்றன!

பிரான்ஸில் நடந்த ஆய்வுகளின் முடிவில் பெங்குயின் குரலில் குட்டிகளை அடையாளம் காணும் ஏதோ ஒன்று இருப்பது தெரிய வந்தது. இது என்ன என்று கண்டுபிடிக்க பெங்குயினின் பல்வேறு அழைப்புக் குரலை ஒலிக்கச் செய்தனர். குட்டிகள் அண்ணிய ஒலி அலைகளை உன்னிப்பாக கவனித்து, பெரிய சத்தத்தைக் கண்டு கொள்ளவே இல்லை. இதிலிருந்து அவர்கள் கண்டுபிடித்தது, ஒலி கிளம்பிய முதல் வினாடியில் நாலில் ஒரு பகுதியைக் கேட்டவுடனேயே குட்டி பெங்குயின்கள் யார் எங்கிருந்து கூப்பிடுகிறார்கள் என்பதை உணர்கிறது என்பதையே!

## புலிகள் வெளிப்படுத்தும் ரசாயன மொழி

புலிகள் சில ரசாயனங்கள் மூலமாகத் தமக்குள் தகவலைப் பரிமாறிக் கொள்கின்றன. மரங்கள் அவற்றிற்கு முக்கியமானவை. ஆழமான கால் சுவடுகளைப் பதித்து அதில் சிறுநீர் கழிப்பது, மரங்களில் உராய்ந்து தங்கள் வாசனையை அதில் பதிப்பது போன்ற இவை மூலமாகத் தங்கள் இனத்திற்கு ஏராளமான தகவல்களைத் தருகின்றன.

## மிருக மொழி


மிருகங்கள் தங்களுக்குள்ளே பேசிக் கொள்கின்றன. கலிபோர்னியாவில் பருந்துகள் வருவதை அணில்கள் மலை எலிகளுக்கும் இதர இனங்களுக்கும் அறிவிப்பதை ஆய்வு மூலமாகக் கண்டுபிடிக்க முடிந்தது. இதுபோலவே ஆப்பிரிக்காவில் பறவைகள் அபாய ஒலி எழுப்பி வேடர்கள் வருவதை காட்டு மிருகங்களுக்கு அறிவிப்பதையும் ஆய்வு தெரிவித்தது. வளர்ந்து வரும் அறிவியல் கண்டுபிடித்துள்ள அதி நவீன தொழில்நுட்ப உத்திகள் மூலமாக மிருக மொழியை இனி சீக்கிரமே நன்கு அறிந்து விட முடியும் என்கிறார் சார்லெட்.

## குயில் பாட்டு

மரக்கிளையிலே குயில் அமர்ந்து ஓசை எழுப்பினால் ஏதோ இனிய கானம் என்று யாரும் இனி எண்ணி விடக்கூடாது. அது ''நெருப்புச் சுவைக் குரலில் ஆசை ததும்பி அமுதூற நீசக் குயில்'' பாடும்.

''காதல் காதல் காதல்
காதல் போயின்
காதல் போயின்
சாதல் சாதல் சாதல்''

என்ற அமர வரிகளாகவும் இருக்கலாம்! அதை நாம்தான் கவனமாகப் புரிந்து கொள்ள வேண்டும்!



அமரர் ராமரத்தினம்

**நினைவுக் குறுநாவல் போட்டி 2005**

முதல் பரிசு ரூ. 6,000/-
இரண்டாம் பரிசு ரூ. 4,000/-

குறுநாவல் அனுப்பும் எழுத்தாளர்கள், உறையின்மேல் 'அமரர் ராமரத்தினம் நினைவுக் குறுநாவல் போட்டி' என்று குறிப்பிட வேண்டும். குறுநாவல்கள் 2005 பிப்ரவரி 1 ஆம் தேதிக்குள் எங்களுக்குக் கிடைக்க வேண்டும். கலைமகளில் 16 பக்கங்கள் வருமளவு குறுநாவல்கள் இருக்கலாம்.

தேர்ந்தெடுக்கப்படாத குறுநாவல்களைத் திரும்பப் பெற இயலாது. நகல் எடுத்துக் கொண்டு அனுப்பவும், காகிதத்தின் ஒரு பக்கத்தில் தெளிவாக எழுதி அனுப்ப வேண்டும். தபால் தலை இணைக்க வேண்டாம்.

பிறமொழித் தழுவல்களோ, மொழி பெயர்ப்பாகவோ இருக்கக் கூடாது. ஒருவர்ஒரு குறுநாவலை மட்டும்தான் அனுப்ப வேண்டும்.

பரிசுக்குரிய குறுநாவலைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது.

கலைமகள் த.பெ.604, சென்னை – 600 004.






கி.வா.ஜகந்நாதன்

# வாழிய உள்ளம்



தமிழ் இலக்கியத்தில் காதலைப் பற்றிச் சொல்லும் பகுதிக்கு அகப்பொருள் என்று பெயர் வைத்திருக்கிறார்கள். அந்த அகப்பொருள் தமிழுக்கே சிறப்பானது என்றும் பழங்காலத்தில் அகத்துறை அமைந்த பாடல்களைப் புலவர்கள் மிகவும் ஊக்கத்தோடு பாடினார்கள் என்றும் புலவர்கள் சொல்லிக் கொள்வார்கள்.

காதல் என்பது ஆண் பெண் என்ற பகுப்புடைய ஜீவன்கள் எல்லாவற்றிற்கும் உரியது. மனித ஜாதிக்கு அது சிறப்பாக உரியது. காதலை வாழ்க்கையில் உயர்ந்த இன்பமாகவும் மிகவும் மேன்மையான உணர்ச்சியாகவும் போற்றிப் பாதுகாக்க வேண்டுமென்பது லக்ஷ்யவாதிகளின் கொள்கை. கவிஞர்களுக்கோ, காதல் தெய்வத்துக்குச் சமமானது. காதலைப் பாடாத கவியே உலகத்தில் இல்லை என்று சொல்லி விடலாம். எந்த எந்தப் பாஷையில் கவிதை இருக்கிறதோ அந்த அந்தப் பாஷை இலக்கியத்திலே காதலும் நிரம்ப இருக்கும்.

'எல்லா மொழிகளுக்கும் பொதுவான காதலைத் தமிழர்கள் மாத்திரம் தங்களுக்கே உரியதென்று சொல்லிக் கொள்ளுதல் எவ்வாறு பொருந்தும்?' என்ற கேள்வி எழுவது நியாயந்தான். காதல் தமிழர்களுக்கே உரிய சிறப்பு உணர்ச்சியல்ல. காதற் கவிதைகளும் தமிழ் மொழிக்கே தனியுரிமைப் பொருளல்ல.

ஆனால் தமிழர்கள் மற்றவர்கள் செய்யாத ஒரு காரியத்தைச் செய்திருக்கிறார்கள். காதல் வாழ்க்கையை ஒரு நாடகத்தைப் போல விரித்து ஒன்றன்பின் ஒன்றாக உணர்ச்சி வகைகளையும் நிகழ்ச்சிகளையும் தனித்தனித் துறையாக வகுத்து இலக்கணமும் இலக்கியமும் செய்திருக்கிறார்கள். இன்ன விஷயத்தை இன்ன இன்னபடி சொல்லிக் கொண்டு போக வேண்டும் என்ற வரையறையே தமிழர்கள் தங்கள் சொத்தென்று பாராட்டி உரிமை கொண்டாடுவதற்கு உரியது. அந்த வரையறை பொருட்போக்கைச் சிறைப்படுத்தி வெறும் வாய்பாடாக வைத்துவிடவில்லை. கலைத்தன்மை நிரம்பிய வரம்பு கட்டி அழகுபடுத்துகிறது.

ஒரு சிறிய உதாரணத்தைக் கவனிக்கலாம்; இந்தக் காதல் சித்திரம் அவ்வளவும் உலகத்தில் உண்மையாகவே நிகழ்வதன்று என்று புலவர்கள் சொல்லுகிறார்கள். 'இல்லது, இனியது, நல்லது, புலவர்களால் நாட்டப் படுவது' என்று சொல்வார்கள். அமானுஷ்யமானது, லக்ஷ்ய வாழ்க்கையாகக் கருதுவதற்கு உரியது, கலையம்சம் நிரம்பியது, கவிதைச் சுவைக்கு வளப்பம் தருவது என்ற கருத்தோடு தான் அப்படிச் சொல்லுகிறார்கள்.

ஒரு காதலனும் காதலியும் அன்பு பூண்டு இன்பம் நுகர்கிறார்கள் என்ற செய்தி இந்த அகப்பொருளில் வருகின்றது. இந்த நாடகத்துக்கு நாயகனாக உலகத்திலுள்ள ஒருவனை வைக்கக்கூடாது. யாரையாவது பாட்டினால் புகழ வேண்டும் என்றால் அவன் பேரை வேறு ஏதாவது ஒரு சம்பந்தம் பற்றிப் பாட்டிலே சொல்லலாமே ஒழிய, காதல் நடத்தும் நாயகனாகச் சொல்வது அகப்பொருளுக்குப் புறம்பானது. இந்த வரையறை காதலை மானுஷ்யமாக்காமல் தெய்வீகமாக்கி விடுகிறது. கவிதையின் சுவையைப் புற உலக நினைவோடு நுகராமல் காதலின் நுண்மையை உள்ளபடி எண்ணிக் கருத்தில் ஊறும் இன்பத்தை நுகரும் வாய்ப்பை உண்டாக்குகிறது.



இந்த மாதிரி புலவர்களால் பழங்காலந் தொடங்கிப் போற்றிப் பாதுகாக்கப் பெற்று வந்த காதற் கவிதை படரும் துறைகள் பல. காதலனும் காதலியும் பிறர் அறியாதபடி தம்முள்ளே கலந்து இன்புறுதலும், இடையிடையே தடை நிகழ்தலும், அது நீங்கவேண்டுமென்று விரும்பிக் காதலி துயருறுதலும் இவைபோன்ற வேறு நிகழ்ச்சிகளும் அடங்கிய பகுதிதான் மிகவும் முக்கியமானது. எல்லோரும் அறிய மணந்து கொண்டு கணவன் மனைவியாக வாழும் வாழ்க்கையை மற்றொரு பகுதி சொல்லும். முதற்பகுதிக்குக் களவென்றும், பின் பகுதிக்குக் கற்பென்றும் பெயர் வைத்திருக்கிறார்கள்.

களவென்னும் பகுதி மிகவும் சுவை பொருந்திய காட்சிகளை உடையது. காதலன் காதலியைத் தேடிக் கொண்டு வருவதும், கட்டுக்காவலுக்குள் அடங்கி நிற்கும் காதலி அவனைக் குறித்த இடத்தில் குறித்த காலத்தில் சந்திக்க முடியாமல் அவதியுறுவதும், இருவர் உள்ளத்திலும் எழும் உணர்ச்சிகளும் கவிதையின் சுவையை மிகுவித்து ரஸமயமாக்குகின்றன.

தன் காதலன் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட இடத்தில் வந்து நிற்கிறான் என்பதைக் காதலி உணர்ந்தும் அவனைப் போய்ச் சந்திக்க முடியவில்லை என்றால் அவள் மனம் என்ன பாடுபடும்! வேலை செய்ய ஓடுமா? தன் காதலன் தன்னைக் காணாமல் ஏமாந்து போவானே என்ற வருத்தம், அவனைச் சந்திக்க முடியவில்லையே என்ற குறை, அவன் அங்கே நிற்பதை யாரேனும் கண்டுபிடித்து விட்டால் என்ன



செய்வது என்ற அச்சம் - எல்லாம் சேர்ந்து அவள் உள்ளத்தில் போராடுகின்றன.

நல்ல வேளையாக அவளோடு உயிருக்கு உயிராகப் பழகும் தோழி ஒருத்தி இருக்கிறாள். அவள் தான் அந்த இரண்டு காதலர்களுடைய தெய்வக் காதலும் படர்ந்து வளர உதவியாக இருப்பவள். காதலி தன்னுடைய உள்ளத்தில் பொங்கி எழும் உணர்ச்சிகளை அவளிடம் சொல்லுகிறாள். உள்ளத் துயரை வெளியிடுவதில் ஓரளவு ஆறுதல் ஏற்படும் அல்லவா?

தவிர, தலைவியின் உள்ளத்தில் ஏழு கடல்களும் புரண்டால்தான் என்ன? அவள் கருத்தை நாம் எப்படி உணரப் போகிறோம்! அந்த உணர்ச்சி வார்த்தைகளாக வந்தால்தானே கவிதைக்கு உரிய பொருளாகும்? காதலி தனியே பேசிக்கொண்டே இருந்தால் நாடக ரஸம் சிறவாதே.

ஆகவே அவளைப் பேச வைப்பதற்கு அந்த உயிர்த்தோழி உபகாரமாக இருக்கிறாள். காதலன் காதலியருக்கு அத்தோழி வேண்டுமோ இல்லையோ, கவிஞனுக்கு அவள் அவசியமாகிறாள். காதலி தோழியிடம் தன் மனத் துயரை உரைப்பதும், தோழி ஆறுதல் கூறுவதும், காதலனிடம் தோழி தலைவியின் நிலையை எடுத்து உரைப்பதும் ஆகிய பேச்சு வகைகளினாலே, உணர்ச்சியளவிலே நின்ற ஊமைக் காதல், கவிதைக்கு உரிய காதல் ஆகிவிடுகிறது.



புலவர்களின் இலக்கியத்திலே காணப்படும். இந்தக் காதல் விசித்திரங்களை உலகத்திலும் பார்க்கலாம். காதலர்கள் மறைவா[illegible] காதல் புரிவதுதான் இயற்கைக்குப் பொருத்தமானது. ஆகவே உலகம் முழுவதும் களவுக் காதல் நடந்துகொண்டுதான் இருக்கிறது. உண்மை வாழ்க்கையின் ஓவியமாகிய நாடோடி இலக்கியம் இதற்குச் சாட்சி கூறுகிறது. முன்னே சொன்ன காதல் நிகழ்ச்சியை நாடோடிப் பாட்டிலும் பார்க்கிறோம்.

தன் காதலனை மாமன் என்று அழைப்பது நாட்டுப்புறத்துச் சம்பிரதாயம். காதலி வீட்டில் வேலை செய்து கொண்டிருக்கிறாள். அவளுடைய காதலன் அவளைச் சந்திப்பதற்காக வந்து அருகிலே உள்ள மாந்தோப்பிலே நிற்கிறான். வசந்த காலமும், இயற்கையெழில் குலுங்கும் மாந்தோப்பும் புலவன் கற்பிக்கும் கவிதைக்குத்தான் சொந்தமென்று நினைக்காதீர்கள். நாடோடிக்கும் அவை சொந்தப் பொருள்களே.

தன் காதலன் வந்து நிற்பதை அவன் செய்யும் சங்கேத ஒலியால் உணர்ந்து கொள்கிறாள். அவள் உள்ளம் தவியாகத் தவிக்கிறது. ஒரே ஓட்டமாகப் போய் அவனைக் கட்டி அணைத்துக் கொள்ள வேண்டுமென்று ஆத்திரப்படுகிறது. வீடென்னும் சிறையில் இருக்கும் அவளுக்கு அவ்வளவு சுதந்திரம் ஏது? அவளால் போக முடியவில்லை..

கொழும்புத் தமிழ்ச் சங்கம்

தன் காதலன் வருவானென்றும் அவனைப் போய்ச் சந்திக்கலாமென்றும் அவள் ஆவலோடு அலங்காரப் பொருள்களை வாங்கி வைத்திருக்கிறாள். தன் காதலனைச் சந்திக்கும்போது மடித்துக் கொடுக்க நல்ல வெற்றிலை வாங்கி வைத்திருக்கிறாள். அவனுக்குப் பொட்டிடச் சந்தனம் அரைத்து வைத்திருக்கிறாள். தன்னை அலங்கரித்துக் கொள்ளப் பூ வைத்திருக்கிறாள். அவளுக்கு அரளிப் பூத்தான் இருக்கிறது. அதைப் பிறர் அறியாமல் இறைவானத்திலே செருகி வைத்திருக்கிறாள்.

இவற்றை உபயோகப்படுத்தலாமென்றும் தன் காதலனை - மாமனை - மாந்தோப்பிலே சந்தித்து மகிழலாம் என்றும் அவள் கனவு காண்கிறாள். பாவம்! அவள் விருப்பம் நிறைவேறவில்லை. அப்பொழுதுதான் அவளுடைய தாய் உடனிருந்து ஏதோ வேலை செய்யும்படி சொல்லிக்கொண்டு இருக்கிறாள். வாசலிலே தகப்பனாரும் அண்ணன்மாரும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். இவ்வளவு பேருக்கும் தெரியாமல் எப்படிப் போவது? முடியவில்லை

ஒருநாள் கழிந்தது. அவளுடைய ஆயுளில் ஒருபாதி வியர்த்தமாகி விட்டது போன்ற துக்கம் அவளுக்கு ஏற்பட்டது. மறுநாளும் அவளுடைய காதலன் வருகிறான். அவனுடைய வாய் ஊதல் - அதை வீளை என்று பழந்தமிழர் சொல்வார்கள் - அவள் காதில் இனிமையாக விழுகிறது. அவளை அழைக்கும் குறிப்பு ஒலி அது. இன்றும் காவல் அதிகமாக இருக்கிறது. அவள் உள்ளம் துடிக்கிறது; முகம் வாடுகிறது. உடம்பில் சோர்வு உண்டாகிறது. செய்கிற காரியத்திலே புத்தி போகவில்லை. இந்த நிலையில் இங்கும் ஒரு தோழி - காதலியின் சிநேகிதக்காரி வருகிறாள். காதலியின் தோற்றத்திலே புலப்பட்ட சோர்வு அவள் கண்ணை உறுத்துகிறது. ''ஏன் இப்படி இருக்கிறாய்?'' என்று அந்தரங்கமாகக் கேட்கிறாள்.

காதலி சொல்ல எண்ணுகிறாள். வார்த்தை வரவில்லை; அவளுக்குத் துக்கம் பொங்குகின்றது. முதல்நாள் வாங்கி வைத்த வெற்றிலை இன்று வாடிப்போயிற்று; அரைத்துவைத்த சந்தனம் உலர்ந்துபோயிற்று; இறைவானத்திலே செருகிவைத்த பூ, குருவி கொத்தியதால் அழகு குலைந்துவிட்டது. இந்தக் குறைகளைத்தான் வெளிப்படையாகச் சொல்லலாம் என்று நினைக்கிறாள். ஆனால் எல்லாவற்றிற்கும் சிகரமான குறையை அவள் தன்னை அறியாமலே கடைசியில் சேர்த்துச் சொல்லிவிடுகிறாள்;

**வாட வெத்தலை வதங்க வெத்தலை**
**வாய்க்கு நல்லால்லே**
**நேத்து வச்ச சந்தனப் பொட்டு**
**நெத்திக்கு நல்லால்லே**
**குருவி கொத்தின அரளிப் பூவு**
**கொண்டைக்கு நல்லால்லே**
**மாமன் வந்து தோப்பிலே நிக்கிறது**
**மனசுக்கு நல்லால்லே!**

அவள் உள்ளத்தை வாடும் வெற்றிலை என்னலாமா? உலர்ந்த சந்தனம் என்னலாமா? குருவி கொத்தின மலர் என்னலாமா? சே, சே! இந்த உபமானங்களெல்லாம் எங்கே! அவளது வாடிய உள்ளத்தின் நிலை எங்கே! அதைப் புலப்படுத்த எந்தப் பாஷையிலும் வார்த்தைகள் இல்லை.



# சமூகத்தை உங்கள் முன் வையுங்கள்

வளர்ந்துவரும் இந்திய ஜனநாயகத்தில், பொதுமக்கள், அரசியல்வாதிகள், தொழிலதிபர்கள் பங்கைப் பற்றி இதில் கருத்து தெரிவிக்கிறார் இன்போஸிஸ் தலைவர் என்.ஆர்.நாராயணமூர்த்தி. பெங்களூரைச் சேர்ந்த பத்திரிகையாளர் காத்யாயனி காமராஜுடன் நடத்திய உரையாடல் இது.

*நம் நாட்டைப் போல அதே கால அளவில் சுதந்திரம் பெற்ற இதர நாடுகளில் நடைபெறும் ஜனநாயகத்துக்கும் நம்நாட்டில் காணப்படும் ஜனநாயகத்துக்கும் என்ன வித்தியாசம் காணப்படுகிறது? நம் நாட்டு ஜனநாயகம் எவ்வாறு அமைய வேண்டுமென நீங்கள் விரும்புகிறீர்கள்?*



பார்க்கப் போனால் நம் நாட்டுத் தலைவர்கள் காட்டிய ஜனநாயக வழியில் இன்று நாம் செல்லுவதாகக் கூற முடியாது. உதாரணமாக, வறுமை, எல்லோருக்கும் கல்வி, எல்லோருக்கும் உணவுத் தேவை பூர்த்தி, வீட்டு வசதி முதலிய துறைகளில் தேவையான அளவு முன்னேற்றம் எட்டப்படவில்லை. ஜனநாயகம் என்றால் தேர்தலில் முதல் தரமான தலைவர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்கள் மூலம் தேசத்தை சுபிக்ஷத்துக்குக் கொண்டு செல்வது என்றால் அதில் நாம் வெற்றிபெறவில்லை. தோல்விதான் அடைந்துள்ளோம்.

உதாரணம் வேண்டுமானால் சீனா, மெக்ஸிகோவைப் பாருங்கள். அந்நாடுகள் நம் தேசத்தைக் காட்டிலும் பல துறைகளில் பல மடங்கு முன்னேறி உள்ளன. நாமும் ஏன் அதைப் பின்பற்றக்கூடாது. முக்கிய காரணம் சுயநலம் பாராமல் நாட்டுக்கு உழைக்கவல்ல பெரும் தியாகிகளும், பெரும் தலைவர்களும் இல்லாததுதான் எனலாம்.

*சமீபத்தில் பெங்களூர் பத்திரிகைகளில் உங்கள் பெயர் பிரபலமாகியது. 300 கோடி செலவில், 4 வழிபெரும் சாலை வழி வசதி மேம்பாடு, பெங்களூரை எலெக்ட்ரானிக் வசதி கொண்ட நகராக்குதல் முதலிய திட்டங்களை முன் வைத்தீர்கள். பெங்களூர் நகர சபை வருமானம் 900 கோடியாக இருக்கும் போது நிறைய குடிசைப் பகுதிகளில், குடிக்கத் தண்ணீர் இல்*

*லாது அவதிப்படும் பெண்கள் உள்ளனரே?*

சாலை வசதி அபிவிருத்தி அடையவேண்டும். தூரத்திலிருந்து வேலைக்கு வருபவர்களுக்குத் தேவையான சாலை வசதி இன்று கிடையாது. சாலை வசதி குடி தண்ணீர் வசதிக்கு, பல தனியார் நிறுவனங்கள் நிதிஉதவி அளிக்கத் தயாராக உள்ளன. அரசாங்கம் நிதியை கடன் பத்திரம் மூலமாகவாவது பெற்று, முக்கிய அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும்!

*கடன் வாங்கிய தொகையை எவ்வாறு திரும்ப அளிப்பது?*

சாலைப் போக்குவரத்தை உபயோகிப்பவர்கள் தான் பணம் கொடுக்க வேண்டும். அதாவது சுங்கவரி மூலம் சில வருஷங்களில் முதலீடு செய்யப்பட்ட தொகை வசூலாகி விடும்.

*இன்றைய நிலையிலிருந்து, 5, 10, 15 ஆண்டுகளில் நம் நாட்டு ஜனநாயகம் எவ்வாறு அமையும்?*

இன்று நம்நாட்டில் ஜனநாயகம் செல்லும் அதே பாதையில் செல்லுமானால் நம் நாட்டு எளிய மக்கள் ஜனத்தொகை 35 கோடியிலிருந்து 50 கோடியாக அதிகரிக்கும். தவிர நாட்டின் பொருளாதார முன்னேற்றம் பின்னடையும்.

*இன்றைய நம் ஜனநாயகம் எந்தெந்த சவால்களை சந்தித்து வருகிறது?*

நம்நாட்டுத் தலைவர்களும், அரசு பதவியில் இருப்பவர்களும்தான் மக்களுக்குப் பொறுப்பாளிகள். கோடிக்கணக்கான கல்வி பெறாதவர்கள், கோடிக்கணக்கான சுகாதார வசதியற்ற எளிய மக்கள், சிறுவர்கள் பணியில் அமர்த்தப்படுவது போன்றவைகளே, நம்முன் நிற்கும் முக்கிய சவால்களாகும்!

*நம்நாட்டு ஜனநாயகம் இச்சவால்களை வெற்றிகரமாக சமாளித்து முன்னேற முடியுமா?*

அரசாங்கம்தான் இதற்கு முக்கியப் பொறுப்பாளி என்ற நிலையில் நாம் இதை சமாளிக்க முடியும். லஞ்சம் வாங்கும் அரசாங்க அதிகாரிகள், மந்திரிகள், நாட்டு முன்னேற்றத்திலும், மக்கள் முன்னேற்றத்திலும் சிறிதும் கவனம் கொள்ளாத தலைவர்கள் இருக்கும் வரையில் நாம் இந்த சவால்களை எவ்வாறு முறியடிக்க முடியும்?

*தொழில அதிபர்கள், அந்த ஸ்தாபனங்கள் நாட்டு ஜனநாயகத்தைக் காத்திட என்ன செய்யவேண்டும் என்கிறீர்கள்?*

முதலில் அவர்கள் அரசியலில் பங்கு கொள்வதைக் கைவிட வேண்டும். ஓட்டளிப்பதுடன் நின்றுவிட வேண்டும். வரிகளைக் கட்டிவிட்டு தங்கள் தொழில் அபிவிருத்திக்குப் பாடுபட வேண்டும். சமூகத்துக்கு அவர்கள் ஆற்றும் தொண்டினை நினைவில் கொண்டு செயல்புரிய வேண்டும்.

*நவீன கருவிகள் புரட்சி, ஜனநாயகத்தைப் பலப்படுத்த உதவுமா? ஆம் என்றால், எப்படி?*

பார்க்கப்போனால், டி.வி. இன்டெர்நெட் போன்ற நவீன சாதனங்களால் பல நன்மைகள் உள்ளன. ஓட்டு அளிக்கும் நவீன சாதனைக்கருவி நல்ல பயன் அளிக்க உதவுகிறது. கள்ள ஓட்டு போடுதல் முதலியவற்றை ஓர் அளவு கட்டுப்படுத்த உதவும்.

*இன்போஸிஸ் பவுண்டேஷனின் பணிபற்றி நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?*

இந்த அமைப்பு விபசாரத்துக்கு ஆளான



பெண்களை நல்ல பணியில் அமர்த்தி மறுவாழ்வு தருகிறது. முதியோர் இல்லம் ஆதரவற்றோர் விடுதி போன்றவற்றை நடத்துகிறது. பத்தாயிரம் கிராமங்களில் நூலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

*தொழில் அதிபர்களும், பொதுப்பணி நிறுவனங்களும் அரசியலில் இறங்கக் கூடாது என்கிறீர்கள். பல அரசியல் தலைவர்களுக்கு அவர்கள் தேர்தலில் போட்டி இட ஏராளமான தொகையை அளிக்கின்றனர். அவர்கள் தேர்தலில் வெற்றி பெற்றால் தங்களுக்கு வியாபார விஷயத்தில் உதவுவார்கள் என்ற கணிப்பு தான்! இது எவ்வாறு நாட்டு வளர்ச்சிக்கு உதவும்? இது ஏழைகளை பாதிக்கும் செயல் அல்லவா?*

உண்மைதான். அரசியல் கட்சிகள் எங்கிருந்து அவர்களுக்குப் பணம் வருகிறது என்பதை இருட்டடிப்பு செய்துவிடுகிறார்கள். இவ்விஷயத்தில் அவர்கள் உண்மையைக் கடைப்பிடிக்க வேண்டும்.



*அரசுநிதி உதவி, தேர்தலைத் தூய்மைப்படுத்துமா?*

இன்றைய நிலையில் எளியமக்களுக்கு உதவவே போதுமான நிதி அரசிடம் இல்லை. அவ்வாறு இருக்கையில் தேர்தலுக்கு உதவ முன்வந்தால், எளிய மக்களுக்கு உதவும் திட்டங்களை அது பெரிதும் பாதிக்கும். எளிய மக்களுக்கு நியாயம் கிடைக்காது. ஆகவே, தனியாரும் தனியார் ஸ்தாபனங்களும் தேர்தலுக்கு நிதி அளிப்பதே போதுமானதாகும் எனலாம்!

*இந்திய ஜனநாயகத்தை வலுப்படுத்த உங்களுடைய யோசனையாக எதைக் கூறுவீர்கள்?*

தலைவர்களின் சுயநலப் போக்கு பெரிதும் மாறவேண்டும். நாட்டு நலன் அவர்களின் மனத்தில் இடம் பெற்றால், இந்திய ஜனநாயகம் வளரும்!

*இன்றைய தேர்தல்களில் பணபலம், ஆள்பலம், பொய் பிரசாரம் முதலியவை ஆதிக்கம் செலுத்தும் நிலையில் உண்மையான மனிதர்கள் நாணயம் மிகுந்தவர்களுக்கு தேர்தலில் வெற்றி காணும் வாய்ப்பு இல்லாமலே போய் விடுகிறதே. இது எவ்வாறு நிகழ்கிறது?*

கட்சிகள் தங்கள் வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்கும்போது அவர்களின் அந்தஸ்து, அவர்களது நாணயம், லஞ்சம் வாங்க மறுக்கும் அவர்களுடைய மனத்துணிவு, அன்றுவரை அவருடைய பொதுவாழ்வின் கணிப்பு முதலியவை நன்கு ஆராயப்பட வேண்டும். களங்கம், சதிவழக்குகளில் சம்பந்தம் உடைய கட்சி வேட்பாளர்களைப் புறக்கணிக்க வேண்டும். பலர் அரசியல் கட்சிகளில் பங்கு கொள்வதற்கு சுயநல நாட்டமே ஒரு முக்கியக் காரணமாகும்! இதில் கவனம் செலுத்தி கட்சியைப் புனிதப் படுத்த வேண்டும். இந்தியா சுதந்திரம் பெற உழைத்த பல தலைவர்களின் தியாகத்தை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். நாட்டுநலத்தையும், சமூக வளர்ச்சியையுமே முன்வைத்து செயல்பட வேண்டும்.

ஹியூமன்ஸ்கேப் - இதழிலிருந்து
தமிழில் கே.ஆர்.கே.

வாழவேண்டும்!

மரணிக்கப் போகிறவனுக்கு மரங்களெல்லாம் தங்க மயமாகத் தெரியும். விருப்பம் அதிகரித்தால் விபரீத புத்தியே விளையாடி விதியாகும்.

இந்த உலகில் துன்பம் இரண்டு வகையில்தானுண்டாகும். ஒன்று - 'விரும்புவதை அடையமுடியவில்லையே' என்பது. இன்னொன்று - 'வெறுப்பதை விலக்க முடியவில்லையே' என்பது.

ஆகவேதான் விருப்பு - வெறுப்பு இரண்டையும் விட்டாலன்றி ஆனந்தம் அமைவதில்லை!

விருப்பை விடமுடியாதபோது அதற்கு ஆகாரம் போட எதை எதையோ தேடத் தொடங்குகிறோம்.

தேடுங்கள்; ஆனால் தேடுவது கிடைக்கவில்லையே என்று வாழ்வே போய் விட்டதாக வருந்திச் செத்துவிடாதீர்கள்!

வாழுங்கள்! தேடுவது கிடைக்காவிட்டாலும் வாழுங்கள்! ஏனெனில், நம் வாழ்க்கை நமக்காக மட்டும் இங்கே ஏற்படவில்லை. எப்படியெனில், நாம் தனியில்லை; உலகத்தின் பகுதியாவோம்.

நம்மை உலகம் பாதிக்கிறதெனப் புலம்புகிறவர்களால் நாமும் உலகைப் பாதிக்கிறோம் என்பதை உணர முடிகிறதில்லை.

ஆகவே உலகம் பற்றிய பொறுப்பு நமக்குண்டு. எனவே உலகில் நம் பொறுப்பை நிறைவேற்ற வாழவே நினையுங்கள்.

ஏனெனில், சாவு என்பது வரப்போகும் மற்றொரு வாழ்விற்கு வாசலே தவிர; சுமாவே தவிர முற்றுப் புள்ளி இல்லை.

### தேடுங்கள்!

நம்மோடு சேர்ந்து வராததையெல்லாம் நம் தேவை என நம்பித் தேடிக் கொண்டிருக்கிறோம்.

காதல், நட்பு, அன்பு, பாசம், சுகம் போன்றவை எல்லாமே நமக்குத் தேவை. ஆனால் அவற்றுக்காக நாம் ஒவ்வொருவரும் தேடும் காதலி, நண்பன், உற்றார், யாரும் நம் தேவை இல்லை. சுருக்காக, சுகப்பொருள் எதுவுமே நம் தேவை இல்லை.

இதை யோசித்தீர்களானால் நன்கு

# தேடுங்கள்; கிடைக்காவிட்டாலும் வாழுங்கள்!



புரிந்து கொள்ளலாம்.

எதை நாம் தேடவேண்டும்? நம் தேவை எதுவோ அதை. எப்போது தேட வேண்டும்? தொலைத்துவிட்ட போது அல்லது மறந்துவிட்ட போது தேடியாக வேண்டும்!

உண்மையில், நாம் நம் தேவை. நம்மைத்தான் நாம் மறந்து விட்டோம். நம்மை நாம் தேடியாக வேண்டும்.

நாம் யார்? எனத் தெரிந்து கொண்டால் தானே தேடமுடியும்? சாத்திரங்களும், அறிந்தவர்களும் கூறுகின்றனர்.

'நாம் ஜீவர்' அதை மறந்துவிட்டதால் தேடுகிறோம். தேடுங்கள். கிடைக்கா விட்டாலும், உலகத் தேவைகளுடன் வாழுங்கள்; தேடுவதை அடைய வாழுங்கள். அதற்காவே நாம் பிறக்கிறோம். அடையும் வரை அடுத்தடுத்து வாழ்க்கையை அடைந்து கொண்டே தேடிக் கொண்டிருப்போம்.

### மற்றவருக்காக!

''ஐயா, பணமில்லை. எப்படி வாழ்வது? காதலில் தோல்வி. எப்படி உயிருடன் இருப்பது? தப்புச் செய்து மாட்டிக் கொண்டுவிட்டேன்... அவமானம் தாங்கவில்லை, வாழ்வதெப்படி? இப்படிச் சின்னதும் பெரிதுமான உலகத் துக்கங்கள் தற்கொலை எண்ணத்தைத் தருவிக்கின்றன.

சிலர் அப்படிச் சாகாமலேயே, வாழ்க்கையை எப்படிப் போனாலென்ன? என்று ஏனோதானோ என்று நடைப்பிணம் போல உயிருடனிருந்து கொண்டிருப்பர். இதுவும் மரணம்தானே?

நமக்கு என்ற சுகம் நாம் நினைத்தபடி கிடைக்காவிட்டாலும் பிறருக்கு உதவியாக வாழலாம். உண்மையில் அது நமக்கே உதவி. நல்லூழாக மாறி நாம் தேடுவது கிடைக்கத் தடையாக இருப்பதை நீக்கும் என்றே, பிறருக்கு உதவியாக வாழ்வதை சிபாரிசு செய்வோம்.

உலகை உற்றுப் பார்த்தால் அறிவும் உணர்வுமற்ற ஜடப் பொருட்கள் கூடத் தமக்காக மட்டுமே வாழ்வதில்லை.

வெயிலால் சூரியனுக்கென்ன சுகம்? அல்லது சூரியனுக்கு மட்டுமா சுகம்?

மழையால் மேகத்திற்கு என்ன சுகம்?

மரம்தரும் கனிகளால் மரங்களுக்கு மட்டுமா சுகம்?

அறிவுள்ள மனிதன் மட்டும் தன்



நலத்தை அடைய என்றே தன் அறிவைப் பயன்படுத்தலாமா?

'சாஃப்ட் வேர்' உத்தியோகத்தில் உள்ளவர், உடலும் மனமும் கெடாதிருக்க அமெரிக்காவில் கூட, 'தன்னலமற்ற சேவையை'ச் செய்யச் சொல்லுகிறார்களாம். நம் கீதையில் கூறப்பட்ட கர்மயோகம் எவ்வளவு பயனுள்ளது பாருங்கள்!

யார் எந்த வேலை செய்து சம்பாதித்தாலும், அவர் தொழில் பலருக்கும் உதவியாக இருப்பதைக் கவனியுங்கள். இதுவே இறைவன் நம்மைப் பயன்படுத்திக் கொள்ளும் விதம். ஒன்றுக்கும் உதவாத ஓர் ஆண்மகன் ஒரு பெண்ணுக்கு சுக வாழ்க்கை தருபவனாக முடியும். இதனால்தான் சாத்திரம் திருமணம் கூடப் பொதுநலம் எனக் கௌரவிக்கிறது.

## துக்கம் தடையன்று

எவ்வளவு பெரிய துக்கம் ஏற்பட்டாலும் வாழுங்கள். துக்கம் ஒரு தனி உணர்வன்று; அதில் மகிழ்ச்சியும் கலந்துள்ளது என்று மனோவியல் கூறுகிறது.

சபையில் சகுனியுடன் சூதாடிச் சுகமும் சொத்தும் இழந்து, கண்முன் கட்டிய மனைவி அவமானப்படுத்தப்பட்டும் கூடப் பாண்டவர் தற்கொலை செய்து கொண்டு இறந்துவிடவில்லை. அவ்வளவு துக்கத்திலும் அவர்களை 'நல்லவர்' என்று இரக்கம் காட்டினார்களே, அது மகிழத்தக்கது தானே?

இவ்வாறு தேடியது கிடைக்காத துயரத்திலும் 'வாழ வேண்டும்' என நினையுங்கள்; வாழ்க்கை வரும்.

## வாழ்க்கை அடிமைத்தனமும் சுதந்திரமும்

சுதந்திரம் என்பது என்ன?

விருப்பப்படி எதையும் செய்யும் நிலையா? விருப்பத்தை அடக்க முடியும் நிலையா?

விருப்பம் என்பதே எதற்கோ அடிமைப்பட்டு அடைய அல்லது அனுபவிக்க நினைப்பது. எனவே விருப்பப்படி எதையும் செய்வது அடிமைப்பட்ட நிலை.

1. விரும்பாமல் இருக்க முடியவில்லை.

2. எதையும் செய்யாமலிருக்க முடியவில்லை.

முடியாத இந்த நிலையும், முடியாமல் புலம்புகிற நிலையும் சுதந்திரமாகுமா? இது அடிமைத்தனமே.

ஒரு கார் உள்ளது. போகும் நிற்கும் என்ற கட்டுப்பட்ட நிலை, அது நல்லபடி இயங்குவதைக் காட்டும். போனால் நிற்காது, நின்றால் போகாது எனில் கோளாறுதானே?

அதேபோல மனம் விரும்பும், விரும்பாதே எனில், அப்படியும் இருக்கும் என்ற கட்டுப்பட்ட நிலையில் இன்பந் தருவதாகும். இதுவே சுதந்திரம்.

மனத்தை அதன் போக்கில் விட்டால் தரும அடியே கிட்டும். மனம் அடங்கிய நிலையிலேயே ஆனந்தம். இச்சைப்படி திரிய விடப்பட்டால் துன்புறும். காற்று, அழுத்தம் குறைந்தால் புயல் மழை. இதுபோல, மன அழுத்தம் குறைந்தால் வம்பு; சண்டை.

அடிமைத்தனம் என்பது அடக்கமின்மை. சுதந்திரம் என்பது சுயகட்டுப்பாடு; அடக்கம். அடங்காமை ஆரிருள் உய்த்துவிடும் என்றார் வள்ளுவரும்!



## சுதந்திரமானவர்

விருப்பம் உங்களுக்குக் கட்டுப்பட்டு விட்டால் அடிமை விலங்கு உங்களுக்கில்லை.

விருப்பம் எப்படிக் கட்டுப்படும்? விருப்பம் என்பது ஆசைதான், வேறில்லை.

உலகிலுள்ள சுவைமிக்கவை அனைத்தும் உண்ணப் பட்டுவிட்டாலும் கூட ஒருவன் பசி, ருசி ஆசை அடங்காது.

உலகத்தின் ஐச்வர்யம் முழுவதும் கிடைத்துவிட்டாலும் செல்வத்தின் ஆசை போகாது.

இப்படியே எந்த ஆசைக்குரியது



கிடைத்தாலும் மனிதனுக்கு ஆசை அற்றுப் போவதில்லை.

ஆசைக்குரியதைத் தேடி அனுபவிப்பது என்பது எரியும் நெருப்பில் விடும் நெய் போல! நெய் விட்டதீ அணையுமா, அதிகமாகுமா?'

இதை நன்கு சிந்தித்தால் மனிதர் ஆசையை அடக்கிக் கொண்டு விடமுடியும்.

அப்புறம் ஆசைக்குரிய பொருள்களுக்கு நாம் அடிமைப்பட மாட்டோம். இருப்பதில், கிடைப்பதில் மகிழ்வோம்.

இங்கேதான் தேடுவது கிடைக்காவிட்டாலும் சாகத் தோன்றாது. ஊக்கமாக, உற்சாகமாக இருக்க முடியும்.

பசி, தாகம், பிறப்பு, இறப்பு, (நரை, திரை) மூப்பு, சோர்வு, அறியாமை, சோகம் எதுவும் இல்லாத ஜீவரே நாம் என்ற விழிப்பு உண்டாகிவிட்டால் முற்றிலும் சுதந்திரமானவரே நாம். ஏனெனில் உட்சார்ந்த எந்தத் தேவையுமிருக்காது. தேடலுமிராது. வாடலும் வராது.

## நமக்கு நாமே பிரியமானவர்

''என்னை எனக்கே பிடிக்கவில்லை ஐயா!'' என்ற நண்பர் இருக்கிறார். ''ஏன்?'' என்றால், ''நான் எதிர்பார்க்கிற வேறுமாதிரி இருக்க முடியவில்லை'' என்றுதான் கூறுவார். அப்படி இருக்க ஏன் விரும்புகிறார்? இவர் மீது இவருக்குள்ள பிரியத்தால் தானே? இதுதான் தர்க்க முறை.

எதையோ தேடும் நாம் எல்லாரும் யாருடைய அனுபவத்திற்குத் தேடுகிறோம்? நம் அனுபவத்திற்குத் தானே? பெற்றோர், உற்றோர், நண்

பர், செல்வம், புகழ், சுகம், வீடு வாசல், வணங்கும் தெய்வம் உட்பட நிம்மதிக்காகவே தேவை என்றே தேடுகிறோம். அந்த நான் தான் எனக்குப் பிரியம்.

ஆகவே, நானாகிய ஜீவனை - ஆத்மாவைத் தேட விழித்துக் கொள்ளுங்கள்; வெற்றி பெறுங்கள்.

அப்படித் தேடியும், ஒருநாளில், இல்லையேல் இந்த ஒரு பிறவியில் கிடைக்காவிட்டாலும் வாழுங்கள். அப்போதுதான் மேலும் மேலும் தேடலாம். அதை அடையும் வரை தேடுங்கள். உண்மையில் இந்தத் தேட்டமே வாழ்க்கை என வாழுங்கள்!

### வழக்கம் போல்...!

ஒரு பாலைவனம். தாகமெடுத்த மானொன்று தொலைவில் ஓர் ஓடை ஓடுவது போல நீரைக் கண்டது. தேடிக் கொண்டே தாகத்தோடு அந்த மான் போய்க் கொண்டிருந்தது. தாகத்தால் அது இறக்கவில்லை. தண்ணீர் கிடைக்கவில்லையே என்றும் சாகநினைக்கவில்லை. கானல் நீரைப் பார்த்தே போய்க் கொண்டிருந்ததால் அது வாழ்ந்து கொண்டுமிருந்தது. நிச்சயம் ஓர் ஊற்று அதன் கண்ணில் படாமலா போகும்?

மானை விடுங்கள்; ஒரு கிளி பற்றிப் படியுங்கள்.

ஒரு பெரிய மரம். அதன் பல பெரிய பெரிய கிளைகளிலும், அடி பொந்துகளிலும் பலப்பல ஜீவன்கள் வாழ்ந்து வந்தன.

அதன் பரந்த நிழலில் அரசர்களும் கூடவந்து தங்கிச் செல்வர். மரத்தடியில் இருந்த ஒரு மிருகத்தைப் பிடிக்க ஒரு வேடன் நஞ்சு தடவிய ஓர் அம்பை விட்டான். கொடிய நஞ்சு (அந்த அம்பு) அடிமரத்தில் பட்டதால் மரத்தில் ஏறிவிட்டது.

அதனால் மரம் பட்டுப்போனது. இலைகளெல்லாம் உதிர்ந்து விட்டன. நிழலுமில்லை. ஆகவே யாரும் அங்கே வந்து தங்குவதுமில்லை. கனி, மலர், காய் எதுவும், இலையும் இல்லாத மொட்டை மரத்தில் பிராணிகள் தங்காமல் வேறு இடம் தேடிப்போயின. ஏனெனில் உயிர்கள் தேடும் எதுவும் அங்கே கிடைக்காததால் வாழ்வைத் தேடி பல இடங்களுக்கும் போய்க் குடியேறிவிட்டன.

ஒரே ஒரு கிளி மட்டும் தேடுவது கிடைக்காவிடினும் அந்த மரத்திலேயே வாழ்ந்தது. இதனாலது இளைத்துப் போனது.

மற்ற பறவைகளிடம் ''இந்த மரம் வளமுடன் இருந்தபோது இதில் தேடியதெல்லாம் பெற்று நன்கு வாழ்ந்தேன். இப்போது தேடுவது கிடைக்கவில்லை என்று எப்படி இம்மரத்தை விட்டுப் போக முடியும்? என்ன ஆனாலும் சரி, இதிலேயே வாழ்வேன்'' என்றிருந்தது கிளி.

அதன், நட்பு, நேயம், மரத்திற்காக (பிறருக்காக) வாழ்வது எல்லாம் பார்த்த இந்திரன் அமுதத்துளிகளை அம்மரத்தின் மீது விட்டான். மரம் மீண்டும் வளமும் செழுமையும் பெற்றது. மீண்டும் எல்லா உயிர்களும் அதில் குடியேறி வாழலாயின.

தேடுவது கிடைக்கவில்லை என மாற்று எண்ணம் கொள்ளாமல் இருந்த கிளியால் மரமும் உயிர்பெற்றது. பல உயிர்களுக்கும் வாழ்க்கையமைந்தது.

இம்மாதிரி உண்மைகளில் வாழ்வில் விழித்துக் கொண்டால், வாழ்க்கையில் வெற்றி பெறலாம்!

(முற்றும்)





# 1967: காங்கிரஸ் தோல்வி!

## ஒரு விமர்சனப் பார்வை

**காங்கிரஸ் இயக்கமும் தமிழக அரசியலும்**
என்ற புத்தகத்திலிருந்து...

வெளியீடு: அருந்ததி நிலையம்,
19, கண்ணதாசன் சாலை,
தி. நகர், சென்னை - 17.

விலை: ரூ. 70 பக்கங்கள்: 216.
நூலாசிரியர்: பி.சி. கணேசன்

1967-இல் தமிழகத்தில் காங்கிரஸ் தோற்றுப் போனது பலருக்கு அதிர்ச்சியாக இருந்தாலும், அது சரித்திர நிர்ப்பந்தங்களின் விளைவு என்பதை மறுத்து விடுவதற்கில்லை. காமராஜரின் ஆட்சிக் காலம் தமிழகத்தின் பொற்காலம் என்று கருதப்பட்டது உண்மை. உள்ளபடியே தமிழகம் எல்லாத் துறைகளிலும் துரித வளர்ச்சி பெற்ற காலம் அது.

ஆயினும், அந்தக் காலகட்டத்தில் ஸ்தாபன அளவில் தமிழக காங்கிரஸ் தொடர்ந்து பலகீனப்பட்டுக் கொண்டே வந்தது. காமராஜர் தமிழக மக்களின் நெஞ்சம் நிறைந்த தலைவராக விளங்கினார். ஏழை பங்காளார் என மக்கள் அவரைப் போற்றினார்கள்.

பல்லாண்டு காலமாக தமிழகக் காங்கிரசுக்கு அவர் சேர்த்து வைத்த புகழினை, மாவட்ட காங்கிரஸ் தலைவர்களாக இருந்தவர்கள் சேதாரப் படுத்தினார்கள். தந்தை சேர்த்து வைத்த சொத்தினை ஊதாரிப் பிள்ளைகள் விரயம் செய்வதைப்போல, மாவட்டத் தலைவர்கள் காங்கிரசுக்காக காமராஜர் சேர்த்த புகழினை விரயம் செய்தார்கள்.

இந்தக் காலகட்டத்தில் இன்னொரு பக்கம் வேறொரு முக்கியமான அரசியல் செயல்பாடும் நிகழ்ந்து கொண்டிருந்தது. பெரியாரிடமிருந்து பிரிந்து அண்ணா உருவாக்கிய திராவிட முன்னேற்றக் கழகம் துரிதமான வளர்ச்சியினைப் பெற்றுக் கொண்டிருந்தது. கிராம மட்டத்திலிருந்து நகரங்கள், பெருநகரங்கள் வரை திராவிட முன்னேற்றக் கழகத்தின் கிளைகள் தோன்றி, மக்களிடையே தீவிரப் பிரச்சாரத்தில் ஈடுபட்டன.

இதை எதிர் கொள்வதற்கு மாவட்டப் பொறுப்பிலிருந்த காங்கிரஸ் தலைவர்களும் சரி, மாநில அளவில் செயல்பட்ட காங்கிரஸ் தலைவர்களும் சரி, எந்தவிதமான முயற்சியினையும் மேற்கொள்ளவேயில்லை. காமராஜர் பெற்றிருந்த பெரும் புகழ் தங்களையும், தங்கள் கட்சியினையும் காப்பாற்றி விடும் என்றே அவர்கள் நம்பிக் கொண்டிருந்தார்கள்.

தி.மு.கழகம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து ஏறத்தாழ 18 ஆண்டுகள் இது தொடர்ந்து நடைபெற்றது. 1957 -ல் 15 சட்டமன்ற இடங்களைப் பெற்ற தி.மு.க. 1962 -ல் 50 இடங்களைப் பெற்ற போது காங்கிரஸ் விழித்துக் கொள்ளவில்லை. தி.மு.க.வின் துரித வளர்ச்சிக்கான காரணங்களைப் பரிசீலிக்கவும் இல்லை.

தி.மு.க. மக்கள் பிரச்னை சம்பந்தப்பட்ட பல விஷயங்களைக் கையில் எடுத்துக் கொண்டு வெகு ஜனப் போராட்டங்களை நடத்தியது.

கைத்தறி நெசவாளர் துயரம், புயல், வெள்ள நிவாரணப் பிரச்னை, விலைவாசி ஏற்றம் போன்ற பல்வேறு பிரச்னைகளுக்காக தி.மு.கழகம் தலைமை தாங்கி போராட்டங்களை நடத்தியது. இதனால் ஒரு மாபெரும் மக்கள் இயக்கமாக தி.மு.க. உருவெடுக்க ஆரம்பித்தது.

எல்லாவற்றுக்கும் மேலாக, தி.மு:க. நடத்திய இந்தி எதிர்ப்புப் போராட்டம் தமிழக மக்களை, குறிப்பாக இளைஞர்களைப் பெரிதும் கவர்ந்தது. மாணவர் சமுதாயம் தி.மு.க.வின் பின்னே அணி திரண்டார்கள். இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியை பக்தவத்சலம் தலைமையிலிருந்த தமிழக காங்கிரஸ் அரசு சரியாகக் கையாளத் தவறியதால், மாணவர் சமூகத்தினிடையே காங்கிரஸ் எதிர்ப்புணர்ச்சி மேலோங்கியது.


முதல்வர் பக்தவத்சலம் தேவையற்ற அடக்குமுறைகளைக் கையாண்டதோடு, மாணவர் பிரதிநிதிகளை சந்தித்துப் பேச மறுத்து, நிலைமையை மேலும் சிக்கலாக்கினார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் மொழி சம்பந்தப்பட்ட சில தகவல்களையும் அறிந்து கொள்வது அவசியமாகிறது. தி.மு.கழகம் அரசியல் சதுரங்கத்தில் மொழியை மையமாக வைத்து காய்களை லாவகமாக நகர்த்திக் கொண்டிருந்தது.



தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் தான் தமிழ் மொழிப் பற்றாளர்கள் போலவும், காங்கிரஸ்காரர்கள் தமிழுக்கு எதிரிகள் போலவும் ஒரு தோற்றத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தார்கள். அவர்களின் முயற்சிகளுக்கு ஆதாரமளிப்பதைப் போல சில காங்கிரஸ் தலைவர்களின் செயல்பாடுகளும் அமைந்தன.

மொழிவழி மாநிலங்கள் அமைந்த பிறகு, அந்தந்த மொழி சம்பந்தப்பட்ட பிரதேசங்களில் மொழி உணர்ச்சி முன்னிலைப் படுத்தப்படுவது தவிர்க்க முடியாததாக இருந்தது. ஏற்கெனவே அந்த மொழி உணர்ச்சியை தி.மு.க.காரர்கள் சுவீகரித்துக் கொண்டிருந்தார்கள்.




ஒன்றுபட்ட சென்னை மாநிலத்திலேயே, தமிழ் நாடு காங்கிரஸ் என்கிற ஓர் அமைப்பு தனியாகச் செயல்பட்டும் கூட, தமிழகக் காங்கிரஸ் தலைவர்கள் அதன் பலன்களை சரியாகப் பயன்படுத்திக் கொள்வதற்குத் தவறிப் போனார்கள்.



தமிழ்ப் பற்றுள்ள யாராவது 'நமஸ்காரம்' என்பதற்குப் பதிலாக 'வணக்கம்' என்று சொன்னாலே, அவர் திராவிட இயக்கத்தைச் சார்ந்தவராக இருக்க வேண்டும் என முத்திரை குத்த ஆரம்பித்தார்கள்.

இதுபோன்ற விவரமற்ற செயல்களின் விளைவாக தமிழைப் பற்றியும், தமிழின் பெருமை பற்றியும் பேசுகின்றவர்கள் கழகத்தைச் சேர்ந்தவர்களாகத்தான் இருக்க வேண்டும் என்கிற மாயத் தோற்றமும் உருவாக்கப்பட்டது.

இதில் வேடிக்கை என்னவென்றால், காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் தான், தமிழ் மொழி வளர்ச்சி பெறுவதற்கான உருப்படியான திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன என்பதாகும்.

தமிழ் பாடமொழி ஆக்கப்பட்டதும், தமிழ் கலைக் களஞ்சியம் கொண்டு வரப்பட்டதும், தமிழ் ஆட்சிமொழியாகப் பிரகடனப் படுத்தப்பட்டதும், தமிழ் ஆசிரியர்கள் மற்ற ஆசிரியர்களுக்கிணையான அங்கீகாரத்தைப் பெற்றதும் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்தவையே ஆகும்.

தவிர, தேசிய இயக்கம் தமிழகத்தைப் பொறுத்தவரையில் மொழிப் பற்றில் வேரூன்றி வளர்ந்த இயக்கமே ஆகும். பாரதி பாட்டின் மூலம் தேசபக்தியைப் பரப்பினான். செக்கிழுத்த செம்மல் வ.உ.சிதம்பரனார் பண்டைத் தமிழ் இலக்கணங்களிலிருந்து இலக்கியம் வரை அற்புதமான விமர்சனங்களை உருவாக்கிய வித்தகர் ஆவார்.

திரு. வி. கல்யாணசுந்தர முதலியார் விஞ்ஞானத்திலிருந்து தொழிற்சங்கப் பிரச்னை வரை எதனையும் எளிமையாக விளக்கிடும் ஆற்றல் தமிழுக்கு உண்டு என்று நிரூபித்த மொழி வல்லுனர் ஆவார். தமிழுக்கு சிறுகதை . வடிவத்தை வடித்துக் கொடுத்த வ.வே.சு. அய்யர் தலை சிறந்த சுதந்திரப் போராட்ட வீரர்.

பிற்காலத்தில் பழகு தமிழில் ஜன ரஞ்சகமாக எதையும் சொல்லி, பல் துறைப் பேராசிரியராக விளங்கிய கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி செய்த தமிழ்த் தொண்டினை மிஞ்சி எவரும் செய்திருக்க முடியாது.

தேசிய இயக்கத்தில் எண்ணற்ற எழுத்தாளர்கள் தோன்றி தமிழன்னைக்குப் பல்வேறு அணிகலன்களைப் பூட்டியிருக்கிறார்கள். கவிமணி தேசிக விநாயம் பிள்ளை போன்றோர் மொழிக்குச் செய்த சேவை வரலாற்றுச் சிறப்பு மிக்கது.

சுதந்திரம் பெற்ற பிறகும், பத்திரிகைகள் மூலம் தமிழ்த் தொண்டு ஆற்றிய பேராசிரியர் டி.எஸ். சொக்கலிங்கம், அரசியல் விமர்சன மேதை ஏ.என். சிவராமன், குழந்தைக் கவிஞர் அழ.



வள்ளியப்பா என்கிற முடிவில் லாத ஒரு வரிசையும் உண்டு.

இத்தகைய மொழிப் பாரம்பர் யம் கொண்ட தமிழக காங்கிரஸ், தமிழ் மொழிக்கு அன்னியப்பட் டது போன்ற தோற்றத்தை தி.மு.க மூகம் வெற்றிகரமாகச் செய்து முடித்தது. தமிழக காங்கிரஸ்காரர் களும், அறிந்தோ அறியாமலோ, அந்தப் பிரச்சாரத்துக்குப் பலியா கிப் போனார்கள். இதன் ஒட்டுமொத்த விளைவை 1967 தேர்தலின் போது காங்கிரஸ் பத வியிழந்து அனுபவித்தது.

தலைவர் காமராஜர் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத தலைவராக விளங்கினார் என்பது உண்மையாயினும், தனிப்பட்ட முறையில் அவரிடமிருந்த சில பலஹீனங்களும் காங்கிரசின் வீழ்ச்சிக்குக் காரணமாக இருந்ததை மறுப்பதற்கில்லை.

தனக்கு அடுத்த வரிசையில் தலைவர்களை உருவாக்குகின்ற முயற்சியினை அவர் மேற்கொள் ளவே இல்லை. காலவேகத்தை உணராத மூத்த தலைவர்களே அவரைச்சுற்றி இருந்தார்கள். சுதந் திரப் போராட்ட காலத்தில் அவர் கள் செய்த தியாகங்களை மதிக்க வேண்டும் என காமராஜர் எண் ணியதில் தவறில்லை.

ஆனால் அவர்களின் விசுவாசத்தை மதிப் பதாகச் சொல்லிக் கொண்டு திறமைக் குறைவானவர் களைப் பொறுப்பான பத விகளுக்கு அவர் நியமித்தபோது காங்கிரஸ் பலஹீனமடைந்தது. இளைய தலைமுறையி னரை, ஒரு கால கட்டத்தில் காமராஜர் ஊக் கப்படுத்தினாரே தவிர, அவர்களை நம்பிப் பொறுப்புகளை ஒப்படைக்கத் தயங்கினார் என்பதும் உண்மையே.

அண்ணாவின் அணுகுமுறை இதற்கு நேர் மாறானதாக இருந்தது. இளைஞர்களை அவர் ஊக்கப்படுத்தியதோடு மட்டுமின்றி, பெரிய பொறுப்புகளையும் அவர்களை நம்பி ஒப்ப டைத்தார். திறமை எங்கிருந்தாலும் அதைத் தேடிக் கண்டுபிடித்து தன்னுடைய கட்சிக்கு சுவீகரித்துக் கொள்ளும் அணுகுமுறை அண்ணாவிடம் இருந்தது.




அதனால் அங்கீகாரம் பெற விரும்பிய இளைஞர் பட்டாளம் அணி அணியாக அவருடைய பாசறையைச் சென்று அடைந்தது. திறமைசாலிகளுக் குத் தகுதியான பதவிகளைக் கட்சியில் கொடுத்து அண்ணா ஊக்குவித்தார்.

அதன் விளைவாக சிறந்த பேச்சாளர் களும், எழுத்தாளர்களும் தி.மு.கவில் தோன்றி தமிழகமெங்கும் கட்சியைப் பலப் படுத்தினார்கள். எழுத்து, பேச்சு மட்டு மின்றி, நாடகம், திரையுலகம் ஆகியவற்றை யும் தி.மு.க.வின் பிரச்சார சாதனங்களாக அண்ணா பயன்படுத்திக் கொண்டார். சிறந்த திரை வசனகர்த்தாக்கள் உருவானார்கள்.



நடிகர்கள் பலர் தி.மு.க வின் ஆதரவாளர்களானார் கள். என்.எஸ். கிருஷ்ணன், கே.ஆர். ராமசாமி, எம்.ஜி. ராமச்சந்திரன், எஸ்.எஸ். ராஜேந்திரன் என்று பல முன்னணி நடிகர்கள் தி.மு.கவின் பிரச்சார பீரங் கிகளாக உருவெடுத்தார் கள். அண்ணாவும் அவர் களை அரவணைத்துப் போற்றினார்.

திரைப்படங்களின் மூலம் தி.மு.கழகம் பாமர மக்களையும் எளிதில் சென் றடைந்தது. பாரதிதாசன், கண்ணதாசன், முடியரசன் போன்ற பல கவிஞர்கள் தி.மு.கழகத்துக்கு பலம் சேர்த்தார்கள்.

தி.மு.க. அரங்குகளில் அரசியலும் இலக்கியமும் கலையும் கைகோர்த்து மக் களைப் பரவசப்படுத்தின. மக்களைக் கவர்வதற்கான சகல அம்சங்களையும் தி.மு.க. பெற்றிருந்தது.

தமிழக காங்கிரஸ்





இதையெல்லாம் கண்டு கொள்ளவே இல்லை. கலைஞர் கள் அரசியலுக்கு வரு வதை கேலி பேசி னார்கள். அரிதாரம் பூசுகின்றவர்களுக் கும், கூத்தாடிகளுக் கும் என்ன அரசியல் தெரியும் என்று வினா எழுப்பினார்கள். யதார்த்த அரசியலிலி ருந்து காங்கிரஸ் முற்றிலும் விலகியே நின்றது.

விளம்பர சாதனங்களும், பிரச்சார பலமும் காங் கிரசிடம் இல்லாததால், அதைப் போற்றி வளர்த்துக் கொள்ளத் தவறியதால், தி.மு.க. எழுப்பிய எதிர்ப்பு அலையை காங்கிரசால் எதிர்கொள்ள முடிய வில்லை. 1967 தேர்தலில் ஆட்சியை இழக்கின்ற அவ லம் காங்கிரசுக்கு ஏற்பட்டது.

அதற்குப் பிறகு ஏறத்தாழ 40 ஆண்டுகளாகியும், தமிழகத்தில் இழந்த ஆட்சியைக் காங்கிரசால் மீட்க முடியவில்லை. திராவிட முன்னேற்றக் கழகம் உடைந்த போதும் அதன் ஒரு பிரிவுதான் தமிழக ஆட்சியைக் கைப்பற்ற முடிந்ததே தவிர, காங்கிர சால் பதவியை நெருங்கக்கூட முடியவில்லை.

அண்ணா, கருணாநிதி, எம்.ஜி.ஆர்., ஜெயல லிதா என்று திராவிட இயக்கத்தைச் சேர்ந்தவர்களே தொடர்ந்து தமிழகத்தின் முதலமைச்சர்களாக இருந்து வருவதற்கு என்ன காரணம்? ஆட்சியை இழந்த ஆறு ஏழு ஆண்டு காலம்வரை காமராஜர் உயிரோடு இருந்தபோதும் ஆட்சியைப் பிடிப்பதற்கு அவர் செய்த முயற்சிகள் தோற்றுப் போனது ஏன்?

தமிழக காங்கிரஸ் வரலாற்றில் ஆராயப்பட வேண்டிய காலம் இது.

முதிர்ந்த அரசியல் அறிஞரும் பத்திரிகையாளருமான பி.சி. கணேசனின் பார்வையில் தமிழகத்தில் காங்கிரஸ் இயக்கத்தின் பங்கைச் சொல்லும் சிறந்த புத்தகம், படிப்ப தற்கு சுவாரஸ்யமாக, வரலாற்று நிகழ்வுகளைச் சொல்லும் புதையலாக உள்ளது இந்நூல்...

# நிற சிகிச்சை

(Colour Theraphy)

■ ஜெயானந்தன்

நமது இதிகாசங்கள், புராணங்கள், இலக்கியங்களும் சூரியனை தெய்வமாகப் போற்றுகின்றன. 'சூரிய நமஸ்காரம்' என்பது இந்திய கலாசாரத்தின் குறியீடுகளில் ஒன்று என்பது உலகமே அறிந்த உண்மை.


சூரிய ஒளி, தாவர - மனித - மிருக வாழ்க்கையை இயக்கும் சக்திகளில் ஒன்று. பஞ்ச பூதங்களில் தலையாய சக்தி சூரியசக்தி. சூரிய ஒளி இல்லையேல் தாவரங்கள் பூமியில் வளராது. தாவரங்கள் இல்லையேல் மனித இனம் அழிந்துவிடும்.

இதே சூரிய ஒளி, பலவித நோய்களை குணமாக்கும் அருமருந்தாக இருக்கின்றது. சூரிய ஒளியில் ஒளிந்து கொண்டிருக்கும் நிறங்கள், பலவித நோய்களை குணமாக்கும் வீரியத் தன்மை கொண்டது.

ஒவ்வொரு மனிதனும் மிக எளிதாக இந்த நிற சிகிச்சையை செய்து கொள்ளலாம். இந்த சிகிச்சை முறையை மற்றவர்களுக்கும் கற்றுத் தரலாம். இச்சிகிச்சைக்கு பணம் செலவழிக்கத் தேவையில்லை. இயற்கையாகக் கிடைக்கும் இம்மாமருந்தை ஏன் நாம் அறிந்து கொள்ளக் கூடாது?

நாம் மழைக் காலங்களில் வானவில்லைப் பார்த்து மகிழ்ச்சி அடைகின்றோம். அதன் வர்ண ஜாலங்களைக் கண்டும் வியந்துள்ளோம். இந்த வானவில்லின் ஏழு நிறங்கள் கண்டு ஆனந்தம் அடைகின்றோம். இந்த ஏழு நிறங்களின் தோற்றம் எங்கிருந்து வருகின்றது.

சூரிய ஒளியின் ரகசியக் கவிதை இந்த ஏழு நிறங்கள். இந்த ஒளிக் கதிரின் முதன்மை நிறங்கள் மூன்று. ''பச்சை, சிகப்பு, நீலம்.'' இந்த மூன்றின் கலவையிலிருந்து தோன்றும் வண்ணக் கோலங்கள் ஏழு நிறங்கள்.



தாவரங்களை உற்று நோக்குங்கள். அதன் இலை, பூ, காய், பழங்களின் நிறங்களைப் பாருங்கள். இந்த நிறங்களின் தோற்றத்திற்குக் காரணம் சூரியனின் ஒளிக் கதிர்கள்தான் என்ற உண்மையை அறிந்துக் கொள்ளுங்கள்.

இவ்வித நிற சிகிச்சையில் எவ்வித பக்க விளைவுகளும் தோன்றாது.

## நமது உடலும், நிறங்களும்:

மனித உடலில் நாளமில்லாச் சுரப்பிகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. இந்த நாளமில்லா சுரப்பிகள் சுரக்கும் நீர்களினால்தான் நமது உடல் இயங்குகின்றது.

இந்த நாளமில்லா சுரப்பிகள், பிட்யூட்டரி, தைராய்டு, பாரதைராய்டு, அட்ரினல், பான்கிரியாஸ் போன்ற சுரப்பிகள், நீர்களை சுரக்கின்றன. சுரக்கும் நீர்களுக்கு சூரிய நிறக் கதிர்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

நமது மூளை, நம்மைச் சுற்றி இருக்கும் நிறங்களைப் பதிவு செய்து வைத்துள்ளது. இவ்வித நிறங்களைப் பார்க்கும் போது, மூளையின் ஆணை பிறப்பிக்கப்படுகின்றது. இந்த ஆணையால், நாளமில்லா சுரப்பிகள் சுரக்க ஆரம்பிக்கின்றன. இந்த நாளமில்லா சுரப்பிகள் சுரக்கும் நீர், நமது இரத்தத்தில் கலந்து, மனித உடல் சீராக இயங்க உதவி செய்கின்றன.

ஆகவே, நிறக்கதிர்களைக் கொண்டு, பலவித நோய்களை குணமாக்கச் செய்வதே நிற சிகிச்சை என்று அழைக்கப்படுகின்றது. இந்த முறையை அறிந்தவர்கள் நிறசிகிச்சையாளர் (Chromo therapist) என்று அழைக்கப்படுகின்றனர்.

சில நேரங்களில் சில நிறங்களைப் பார்த்தால் நமக்கு பலவித எண்ணங்கள் தோன்றும். மஞ்சள் நிறங்களைக் கண்டால் மகிழ்ச்சி உண்டாகும். பச்சையைக் கண்டால் வளமான எண்ணங்கள் தோன்றும். சிகப்பைக் கண்டால், உறுதி தோன்றும். ஊதா நிறம் சில நோய்களுக்கு மருந்தாக இருக்கின்றது.

நிற சிகிச்சையின் விதிப்படி, ஒருசில நிறங்கள், ஒருசில உறுப்புகளின் செயல்பாடுகளுக்கு தேவைப்படுகின்றன.

நீலம் - மண்டை, கழுத்துப் பகுதி

அடர் நீலம் - தொண்டை

வெளிர் நீலம் (Violet) - மார்பு, நுரையீரல்

பச்சை - சிறுநீரகம், சிறுகுடல்


அடர் பச்சை - இடுப்புப் பகுதிகள்


சாதா பச்சை - தோல்

மஞ்சள் - ஈரல்

ஆரஞ்சு - பேதி குணமாக்கும்

சிகப்பு - உடல்வலி, சீதளம்





குணமாக்கும்

ஒவ்வொரு வகையான நிறக் கதிர்களைக் கொண்டு, வெவ்வேறு விதமான நோய்களை குணமாக்கலாம்.

**நிற சிகிச்சையின் தன்மைகள்**

பலநிற உணவுப் பண்டங்கள், நிற திரவங்கள், சூரிய நிறக் கதிர், செயற்கை நிறக்கதிர் சிகிச்சை, வண்ண உடைகள், நிறக் கண்கள், வண்ண அறைகள், வண்ண படிவக்கற்கள், வைரக்கற்கள் போன்ற பொருட்களின் மூலமாக நிற சிகிச்சையை அளிக்கலாம்.

நிறக்கதிர் சிகிச்சையின் போது, கவனிக்க வேண்டிய சில விதி முறைகள்:

1. நிறக்கதிர் சிகிச்சை எடுக்கும் போது, எலக்ட்ரிக் / எலக்ட்ரானிக் பொருட்களை அருகில் வைத்துக் கொள்ளக் கூடாது.

2. சிகிச்சை பெறுபவர், தரையில் அமரக் கூடாது. பலகையின் மேல் அமர்ந்து சிகிச்சை எடுத்துக் கொள்ளவும்.

3. சிகிச்சை எடுத்துக் கொள்ளும் போது, உடனிருப்பவரிடம் பேசக் கூடாது. அமைதியாக அமர்ந்து சிகிச்சை எடுத்துக் கொள்ளவும்.

4.-நிறக்கதிர் சிகிச்சை எடுத்துக் கொள்ளும் போது, மிகுந்த கவனத்துடன் அமர்ந்து எடுத்துக் கொள்ளவும்.

நிறக்கதிர்கள், நம் தோலின் மீது பட்டு, பின் உடல் திரவத்தால் உறியப்பட்டு, ரத்தத்தின் தன்மையோடு கலந்து, உடல் உறுப்புகளுக்கு செல்கின்றன. பாதிக்கப்பட்ட பகுதிகள், சீராக்கப்பட்டு செயல்படுகின்றன. இம்முறை எளிய முறையாகத் தோன்றினாலும், முறையாகக் கையாள வேண்டும்.

ஒவ்வொரு நிறத்தையும், உடலின் ஒவ்வொரு பகுதிக்குதான் செலுத்த வேண்டும்.

ஒரு சில வியாதிகளுக்கு, நேரடியாக நிறக் கதிர்களை செலுத்த முடியாது. அக்கதிர்களை ஊடகங்களின் மூலமாக அனுப்ப வேண்டும். இவைகள் தாங்கிகளாகச் செயல்பட்டு, நிறக் கதிர்களை எடுத்துச் செல்கின்றன.

**தாங்கிகள் பின் வருமாறு:**

★ நீர்
★ எண்ணெய்
★ சர்க்கரை நீர்
★ கிளிசரின்
★ காற்று
★ கதிரியக்கம்

இந்த நிற சிகிச்சையின் மூலம், பலவித அறுவை சிகிச்சைகூட இன்று பிலிப்பைன்ஸ் நாட்டில் நடக்கின்றன. இதற்கு அம்மருத்துவர் சிறந்த தெய்வ நம்பிக்கையும், யோக சாஸ்திர நிபுணராகவும் இருக்க வேண்டும். இதைத்தான் இன்று நம்பிக்கை வைத்தியம் (FAITH HEALING) என்று அழைக்கின்றனர்.



இந்த மாதம் வந்தது எப்படி தெரியுமா?

# கிறைஸ்ட் மொனாத்
## (December)

கிரேக்கர்கள், ரோமர்களின் லத்தீன் மொழிக் காலக் கணிதப்படி ஆண்டின் 10வது மாதந்தான் இந்த டிசம்பர் மாதம். இன்றைய நடைமுறைப்படி ஆண்டின் கடைசி மாதம், அதாவது 12 வது மாதம்.

கிறித்துவர்களுக்கு மிக மிக முக்கியமான மாதம் இந்த டிசம்பர். ஏசுநாதர் பிறந்தது இந்த மாதம் 25 -ஆம் நாளில்தான். கிறிஸ்துமஸ் விழா கொண்டாட்டமும் இதே மாதம் அதே நாளில் தான்.

டச்சுக்காரர்கள் இந்த டிசம்பர் மாதத்தை ''விண்டர் மாண்ட்'' (WINTER MAAND) என்றும், ஆங்கிலோ ஸாக்ஸோனியர்''வின்டர் மொனாத்'' (WINTER MONAD) என்றும், ''யூல் மந்த்'' (YOLE MONTH) அதாவது ''யூல்'' என்றால் கிறிஸ்துமஸ் பண்டிகை வரும் மாதம் என்றும் கூறுகின்றனர்.

ஆங்கிலோ ஸாக்ஸோனியர்கள் கிறித்துவர்களான பிறகு டிசம்பர் மாதத்தை ''ஹெலிக் மொனாத்'' (Heligh monad) புனிதத் திங்கள் என்று குறிப்பிட்டுள்ளனர்.

அந்தக் காலத்து ஜெர்மானியர்கள் இந்த மாதத்தை ''கிறைஸ்ட் மொனாத்''(Christ monath) என்றனர். பிரெஞ்சுப் புரட்சிக் குடியரசு காலண்டர் படி இந்த மாதத்தை ''ஃப்ரிமெய்ரீ'' (FRIMAIRE) என்கின்றனர். அதாவது ''ஹோர்ஃப்ராஸ்ட் மன்த்'' (Hoar Frost month) ''வெண்பனி மாதம்'' என்று பொருளாம்.

இந்த டிசம்பர் மாதத்துக்கு பல வரலாற்றுப் பெருமைகள் உண்டு. ஏசுநாதர் பிறந்தாள் - கிறிஸ்துமஸ் பண்டிகை வெகுவிமரிசையாகக் கொண்டாடப்படும்.

பிரான்சு நாட்டு அரசியல் வரலாற்றில் குறிப்பிட்டுள்ள ஒரு செய்தி. பிரான்சு நாட்டுப் புகழுடன் மட்டுமல்லாது உலகப் புகழ்பெற்றவன் மாவீரன் நெப்போலியன். காலம் 1808 - 1873. இந்த டிசம்பர் மாதத்தில்தான் நெப்போலியன் 1848 -ஆம் ஆண்டில் பிரான்சு நாட்டின் தலைவர் ஆனார். 1851 ஆம் ஆண்டு இதே டிசம்பர் மாதத்தில்தான் பெரும்புரட்சியை நடத்தி வெற்றி கண்டார். அடுத்த ஆண்டு 1852 -இல் டிசம்பர் மாதத்தில் பிரான்சு நாட்டின் சக்கரவர்த்தியானார். இன்னும் பலநூறு நிகழ்ச்சிகள் நெப்போலியனின் வாழ்க்கையில் டிசம்பர் மாதத்திலே நிகழ்ந்துள்ளன.

இதே டிசம்பர் மாதம் 1825 ஆம் ஆண்டில் தான் ரஷ்ய நாட்டின் கொடுங்கோல் மன்னன் ஜார் நிக்கோலஸ்ஸின் ஆட்சி கவிழ்க்கப்பட்டு முடிவுற்றது.

- விஜயகீதா

source: BREWER'S DICTIONARY OF PHRASE AND FABLE

தென் ஆப்பிரிக்க சினி கதை

# சர்க்கஸ் கோமாளி

ஒரு அத்துவானக் காட்டில் அந்த ரயில்வே ஸ்டேஷன் இருந்தது! ஸ்டேஷன் மாஸ்டர் ஹென்றி சலித்துப் போன வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தார். அவர் மனைவி காதரினுக்கு அந்த இல்வாழ்க்கையில் பூரணத் திருப்தி இல்லாமல் இருந்தது! அவர்களது ஒரே மகள் எம்மாவும் சகஜமான மனோ நிலையில் இல்லை. நன்றாகப் பியானோ வாசிக்கத் தெரிந்த அவளுக்கு, ஏனோ இங்கு வந்த பிறகு பியானோ வாசிப்பதில் லயிப்பு ஏற்படவில்லை!

வரும் வருமானம் வாய்க்கும், கைக்கும் சரியாக இருந்தது! அதுவும் வாழ்க்கையில் சலிப்பு ஏற்பட ஒரு காரணம் என்று சொல்லி விடலாம்.

ஹென்றி வீட்டுக்கு 'ஜோ' என்ற இளைஞன் அடிக்கடி வருவான். அவன் அந்தப் புதிய பிரதேசத்தில் ஹென்றி தம்பதியருக்குப் பழக்கமான இளைஞன். அவனுக்கு எம்மா மீது ஒரு கண். ஆவால் அவன் ஆசை ஆசையாகப் பேச வரும்போது எம்மா விலகி விலகிப் போய்விடுவாள். அவளுக்கு வயது 19. 'ஜோ' எப்போதும் தன் ஸ்போர்ட்ஸ் சைக்கிளை வைத்துக் கொண்டு சுற்றிக் கொண்டிருப்பான். கடைத் தெருவுக்குப் போகும்போது காதரினுக்கு வேண்டிய மளிகைச் சாமான்களை வாங்கி வந்து தருவான்.

ஃபிராங் என்ற நடுத்தர வயது மனிதரும் ஹென்றியின் குடும்ப நண்பர். அவருக்கும் வயதாகி விட்டது என்றாலும் - வயதான காதரினிடம் காதல் வார்த்தைகளைச் சொல்லிக் கொண்டே இருந்தார்.

ஹென்றி, கேதரின் தம்பதிகளின் ஒரே மகனான 'வில்லம்' பேசும் திறனை இழந்திருந்தான். மருத்துவப் பரிசோதனைகள் அவனுக்கு உடல் கோளாறு இல்லை என்று சொல்லின. ஆனால் ஏனோ, ஒன்பது வயதாகியும் அந்தச் சிறுவனுக்கு பேசும் சக்தி இல்லை!

ஒருநாள் ஹென்றி படுக்கை அறையில் இருக்கும்போது, ஒரு சிங்கத்தின் உறுமல் கேட்டுத் திடுக்கிட்டுக் கண் விழித்தான். காதரினுக்கும், எம்மாவுக்கும்கூட விழிப்பு வந்துவிட்டது!

''எங்கிருந்தோ, ஒரு சிங்கம் மோப்பம் பிடித்துக் கொண்டு வந்துவிட்டது! இரு! இரட்டைக் குழல் துப்பாக்கியை எடுத்துக் கொள்கிறேன்!'' - என்று திகிலுடன் சொன்னார் ஹென்றி. துப்பாக்கியுடன் இருட்டில் தட்டுத் தடுமாறி டார்ச் விளக்கின் ஒளியுடன் நடந்து சென்றார்.

எஸ். குரு

ஆம்! அது ஒரு சிங்கத்தின் உறுமல்தான்! ஆனால் அந்த சிங்கத்தைத் துப்பாக்கியால் சுட வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. ஏனென்றால் அந்தச் சிங்கம் கூண்டில் அடைபட்டிருந்தது. தண்டவாளத்தின் மீது நின்ற வேகன்களில் ஒரு சர்க்கஸ் கம்பெனியின் தளவாடங்களும், கம்பெனிக்குரிய மிருகங்களும் இருந்தன. தன் சின்ன ரயில்வே ஸ்டேஷனின் அமைதியைக் குலைக்கும் வண்ணம் ஒரு சர்க்கஸ் கம்பெனி அங்கு வந்தது ஹென்றிக்கு மஹா எரிச்சலை ஏற்படுத்தியது. கூண்டில் இருக்கும் சிங்கத்தை எம்மா கிட்ட நெருங்கி ஆவலுடன் பார்த்தாள்...



மறுநாள் காலை எம்மா ரயில்வே டிராக் அருகில் வந்து சர்க்கஸ் கூட்டத்தினரை வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தபோது, ரிங் மாஸ்டர் ஒருவன் அவளைக் கண்டுவிட்டான். ஒரு வேகன் அருகில் அவள் வந்தபோது அவன் வாயைப் பொத்தி பலாத்காரம் செய்ய முயன்றான். எம்மா திமிறினாள்.

மகளைத் தேடிக் கொண்டு அங்கே வந்த ஹென்றி முனகல் சத்தம் கேட்டு அதிர்ச்சி அடைந்தார். எம்மாவின் தோழன் 'ஜோ' காதிலும் இந்த முனகல் கேட்டது. ஹென்றி, 'ஜோ' இருவரும் உரிய நேரத்தில் அந்தக் கிராதகனிடமிருந்து அவளை மீட்டார்கள்...

காதரின் இரண்டு பேர் காயங்களுக்கும் மருந்திட்டாள். 'ஜோ'வுக்கு உதடு கிழிந்து

ரத்தம் கசிந்து கொண்டிருந்தது.

மானுவேல் என்ற சர்க்கஸ் கோமாளி சிறுவன் வில்லத்திற்கு நண்பனானான். முக்கால்வாசி நேரம் மானுவேல், கோமாளி முக மேக்கப்பைக் கலைக்காமலே இருந்தான். அவனது விரிய எழதப்பட்ட கண்களும், அகன்ற சித்திர உதடுகளும் சிறுவன் வில்லத்திற்கு வினோதமாகத் தெரிந்தன. வண்ண மயமான அவனது கோமாளி உடையை அதிசயத்துடன் பார்த்தான்...

ஹென்றி தம்பதிகளின் வீட்டுக்குஅருகில் பாழடைந்த ஒரு தானியக் களஞ்சிய அறை இருந்தது. சிறுவன் தன் சர்க்கஸ் கோமாளி நண்பனை அதில் குடியேற்றினான். சர்க்கஸ் கூட்டத்தைக் கொஞ்ச காலம் புறக்கணித்துவிட்டு, கோமாளி மானுவேல் அந்தக் களஞ்சிய அறையிலேயே வாசம் செய்தான். சிறுவன் வில்லம் அந்தக் கோமாளியை அங்குக் குடியேற்றி இருப்பது ஹென்றி தம்பதியருக்கோ, அக்கா எம்மாவுக்கோ தெரியாது.

பல செப்பிடு வித்தைகளை மானுவேல், சிறுவனுக்குக் கற்றுக் கொடுத்தான்... பள்ளி நேரம் போக மற்ற நேரங்களில் களஞ்சிய அறையே கதி என்று கிடந்தான் வில்லம். கையில் நாணயத்தை வைத்துக் கொண்டு, அதை மறைய வைப்பது, துண்டாக்கிய முழு நீளக் கயிறை மீண்டும் இணைப்பது, பாக்கெட்டிலிருந்து இழுக்க இழுக்கக் கைக்குட்டைத் துணிகள் தொடர்ச்சியாக வந்து கொண்டே இருப்பது என்று பல வித்தைகளைச் சிறுவன் கற்றுக் கொண்டான்.

சில மாஜிக் வேலைகளைத் தன் குடும்பத்தினரின் முன் செய்துகாட்டி அவர்களை வியப்பில் ஆழ்த்தினான். சிறுவனுக்குள் ஒளிந்திருந்த ஓவியனும் இப்போது வெளிப்பட்டான். விதம் விதமான கோமாளி உருவங்களை அவன் சித்திரமாகத் தீட்டிக் காட்டினான்...

ஒருநாள் மானுவேலுடன் தனித்து இருந்தபோது சிறுவன் துக்கம் மேலோங்க அழத் தொடங்கினான்... கோமாளி மானுவேல் பச்சாதாபம் கொண்டு சிறுவனின் கண்ணீரைத் துடைத்தான்...

''சிரித்த முகத்துடன் இருக்க வேண்டும்'' என்று சொல்லிவிட்டுத் தன் மேக்கப் பெட்டியை எடுத்தான்...

சிறுவனுக்கு கோமாளி மேக்கப் போட ஆரம்பித்தான்... சிறுவன் முகத்தில் அவன் எழுதிய அகன்ற வாய் சதா இளித்துக் கொண்டே இருந்தது.

கோமாளி மேக்கப் போடப்பட்ட வில்லம் தன் அம்மா கேதரினைத் தொந்தரவு செய்து ஒரு வண்ண மயமான கோமாளி உடையையும் தைத்துக் கொண்டான்! சிறுவனின் கண்முன் விதவிதமான கோமாளி உருவங்கள் தோன்றத் தொடங்கின. தன் டிராயிங் நோட்டுப் புத்தகத்தில் அந்தக் கோமாளி உருவங்களை வில்லம் பதிவு செய்து வைத்தான்...

ஒருநாள் எம்மா, ஒரு குளியல் தொட்டியில் ஆடையின்றிக் குளித்துக் கொண்டிருந்தாள்... தூரத்தில் 'ஜோ' சைக்கிளில் வருவதைப் பார்த்ததும் தொட்டியைத் தலைகீழாகக் கவிழ்த்து அதற்குள் மறைந்து கொண்டாள். 'ஜோ' - கவிழ்ந்து கிடந்த குளியல் தொட்டியைப் பார்த்தான். அருகே மெல்ல நடந்து வந்தான்...



''உள்ளே யார் இருப்பது? காதரினா? வில்லமா? இல்லை... இல்லை.... எம்மா நீதான் இருக்கிறாய்!'' என்று சொல்லிவிட்டுச் சட்டமாக அந்தத் தொட்டி மீது அமர்ந்து கொண்டான்...

''என்னை வெளியே வரவிடு!'' - என்று எம்மா பரிதாபமாகக் கத்தினாள்...

''நான் உன்னை நெருங்கி, நெருங்கி வருகிறேன். நீ விலகி, விலகிப் போகிறாய்! இந்தத் தடவை நீ என்னிடம் வசமாக மாட்டிக் கொண்டாய்! நீ எனக்கு ஒரு வாக்குக் கொடுக்க வேண்டும்! இன்று மாலை அருகில் நடக்க இருக்கும் நடன நிகழ்ச்சிக்கு என்னுடன் நீ ஜோடியாக வரவேண்டும். கட்டாயம் நடன நிகழ்ச்சிக்கு வருகிறேன்' என்று வாக்குக் கொடுத்தால்தான் குளியல் தொட்டியை விட்டு எழுவேன். இல்லை என்றால் நீ மூச்சுவிட முடியாமல் தொட்டிக்குள்ளேயே மயங்கிக் கிடக்க வேண்டியதுதான்!'' என்றான்.

வேறு வழியின்றி எம்மா வாக்குக் கொடுத்தாள்.

ஒருநாள், இரவு நெடு நேரமாகியும் சிறுவனைக் காணவில்லை. ஹென்றிக்கு பயம் வந்துவிட்டது.

''பையன் எங்காவது வழி தவறிப் போய் விட்டானா? எனக்குக் கவலையாக இருக்கிறது! நான் போய்ப் போலீசில் புகார் செய்து விட்டு வருகிறேன்!'' - என்று அவர் டார்ச் லைட்டை எடுத்துக் கொண்டு கிளம்பிவிட்டார்...

களஞ்சிய அறையில் கோமாளி மானுவேலுடன் சிறுவன் வில்லம் பேசிக் கொண்டிருந்தான்.

''நள்ளிரவு வந்துவிட்டது! நீ கிளம்பு! உனக்கு பயமாக இருந்தால் நான் கூட வருகிறேன். வீடு வரை வந்து உன்னை விட்டு விட்டு வருகிறேன்.''

''இல்லை. துணை அவசியமில்லை. நானே தனியாக வீடு செல்வேன்'' - சொல்லிவிட்டு வில்லம் புறப்பட்டான்.

அவனைப் பார்த்த பிறகுதான் ஹென்றிக்கும் காதரினுக்கும் உயிர் வந்தது!

இதற்குள் இரண்டு படகுக் கார்கள் அவர்கள் வீட்டு எல்லைக்குள் வந்துவிட்டன. நீலச் சீருடை அணிந்த நாலைந்து போலீஸார் அந்தக் கார்களில் இருந்து இறங்கினார்கள். இரண்டு பெரிய அல்சேஷன் நாய்களும் வந்தன.. டார்ச் லைட்டை அடித்துக் கொண்டு அவர்கள் அக்கம்பக்கத்தில் தேடத் தொடங்கினார்கள்.... சார்ஜெண்ட் ஹென்றியிடம் வந்து விசாரிக்கத் தொடங்கினார்...

''ஐயா! மன்னிக்க வேண்டும்! போலீஸில் புகார் செய்து உங்களுக்கெல்லாம் தொல்லை கொடுத்து விட்டேன். என் பையன் பத்திரமாக வந்து சேர்ந்து விட்டான்.''

ஒருநாள் துண்டித்த முழுக் கயிறைப் பிசிறு இன்றி முழுசாகக் காண்பிக்கும் வித்தையை தன் தாய், தந்தை முன் வில்லம் செய்து காட்டினான்...

''எங்கேடா அப்பா இதைக் கற்றுக் கொண்டாய்?'' என்று காதரின் பூரித்தாள்.

''என்னோடு வாருங்கள்'' - என்று சைகைகள் செய்து ஹென்றி, காதரின், எம்மா - மூவரையும் வில்லம் சிதிலமடைந்த களஞ்சிய அறைக்கு அழைத்துச்

சென்றான்...

அங்கே கோமாளி மானுவேல் வழக்கமாகத் தங்கி இருக்கும் மறைவிடத்தில் அவனைச் சிறுவன் தேடினான். கோமாளியைக் காணவில்லை!...

''மானுவேல்!... மானுவேல்!'' என்று சிறுவன் கூவியழைக்கத் துவங்கினான்.

ஹென்றி, காதரின், எம்மா - மூவருமே சிலிர்த்துப் போனார்கள்.

இதுகாறும் பேசும் சக்தியை இழந்திருந்த பயல் இப்போது பேசுகிறானே! 'மானுவேல்' என்று கூவுகிறானே - என்று அதிசயித்தார்கள். ஆனால் கோமாளியைக் காணவில்லை.

அந்த ஊர் மாதா கோயிலின் தலைமைப் பாதிரியார் ஹென்றியின் வீட்டுக்கு வந்திருந்தார். அவர் கடுப்புடன் பேசினார்...

''அந்நியர்களோடு உறவு கொண்டாடுவதைத் தவிர்த்து விடுங்கள். அந்தக் கோமாளியோடு உங்கள் பையன் பழக வேண்டாம்...

சில முரடர்கள் துப்பாக்கியோடு மானுவலைத் தேடிக் கொண்டு வந்தார்கள்.

காதரின், ஹென்றி, எம்மா - மூவருமே மிகுந்த கவலைக்கு ஆளானார்கள். இந்த மூடர்களின் துப்பாக்கிக்கு இரையாகாமல் மானுவல் தப்பிக்க வேண்டுமே என்று நினைத்தார்கள்.

அப்போது கோமாளி மேக்கப்புடன் வில்லமும் அங்கு வந்தான். மானுவல், வில்லம் - இருவருமே எச்சரிக்கப்பட்டார்கள்.

ரயில்வே டிராக் அருகில் மானுவல் சென்றுகொண்டிருந்தபோது, ஒருவன் குறி பார்த்துச் சுட்டான். விலாவில் குண்டுபாய்ந்து மானுவல் தண்டவாளத்தின் மீது விழுந்தான்... காதரின் வாய்விட்டு அலறினாள். ஹென்றி தண்டவாளத்தின் அருகே ஓடோடியும் வந்தார்...

துப்பாக்கியால் சுட்டவன் அருகில் நின்று கொண்டிருந்தான். அவனைப் பார்த்துச் சீறினார்.

''என்ன மடத்தனம் இது? ஒரு அப்பாவியைச் சுட்டிருக்கிறீர்கள்...''

மார்பருகே காதை வைத்துக் கேட்டார். இதயம் இயங்கிக் கொண்டிருந்தது. மானுவலை அப்படியே ஹென்றி அள்ளிக் கொண்டு சென்றார்... உரிய நேரத்தில் தீவிர மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு, மானுவல் உயிர் பிழைத்தான்.





மானுவல், ஹென்றியின் வீட்டில் படுக்கையில் படுத்திருந்தான். சிறுவன் வில்லம் அருகே இருந்தான். தன் வாழ்வில் நடந்த கசப்பான சம்பவங்களை அசை போட்ட மானுவலுக்கு அழுகை வந்தது.

தாரை தாரையாகக் கண்ணீர் சொரிந்தான்... வில்லம் இதைப் பார்த்து மிகவும் சங்கடப்பட்டான்...

முன்னொரு நாள், தான் கண்ணீர் சிந்தியபோது, தன் கண்ணீரைத் துடைத்து, சிரிக்கும் முகமாகத் தன் முகத்தைக் கோமாளி மேக்கப் போட்டு மானுவல் ஆக்கியதை இப்போது அவன் நினைவு கூர்ந்தான்...

மானுவலின் கண்ணீர்த் துளிகளை வில்லம் சுண்டி எறிந்து, அவனைத் தேற்றினான். மேக்கப் சாதனங்களை எடுத்து வந்து மானுவலின் முகத்தில் கோமாளி மேக்கப் போட்டான்... பெரிய சிரிக்கும் உதடுகளை எழுதினான். மானுவல் மனக் கவலைகளை மறந்து சிரிக்கத் தொடங்கினான்...

சர்க்கஸ் குழுவினர் அங்கிருந்து நிலை பெயர்த்து, வேறு ஊருக்குச் செல்லும் நாள் வந்தது! மானுவல் ஹென்றி குடும்பத்தினரிடம் இருந்து பிரியா விடை பெற்றான். ரயில்வே ஸ்டேஷனுக்குச் சென்ற வில்லம், மானுவலின் உருவம் மறையும் வரை ரயில் பெட்டியைப் பார்த்துக் கையை ஆட்டிக் கொண்டு நின்றான்.

ஹென்றி குடும்பத்தில் இறுக்கம் தளர்ந்திருந்தது. பேசும் சக்தியை இழந்துவிட்ட வில்லம் பேசத் தொடங்கிவிட்டது குடும்பத்தில் ஒரு மகிழ்ச்சியான சூழலை உருவாக்கி இருந்தது. ஜோ - எம்மாவின் ஸ்நேகம் புத்துயிர் பெற்றிருந்தது. ஹென்றியும், காதரினும் மனம்விட்டுப் பேசி பல மகிழ்ச்சியான தருணங்களை அனுபவித்துத் தங்கள் அன்பைப் புதுப்பித்துக் கொண்டனர்.

அன்று அவர்கள் ஒரு பொது விருந்தில் கலந்துகொள்வதற்காகச் சென்றார்கள். ஹென்றி, காதரின், எம்மா, ஜோ, வில்லம் - அனைவருமே காரில் புறப்பட்டுச் சென்றார்கள். விருந்துக்கு வந்திருந்த பாதிரியாரின் ஆட்கள் ஹென்றி குடும்பத்தினரை வலுச் சண்டைக்கு இழுத்தார்கள். நிலைமை மோசமாகிவிடவே, ஹென்றி குடும்பத்தினர் அந்த இடத்தை விட்டுப் புறப்பட்டுச் செல்ல நேரிட்டது.

வீட்டுக்கு வந்து அவர்கள் ஆசுவாசப்படுத்திக் கொண்டார்கள். கொஞ்ச நேரம் கழித்து இரண்டு மூன்று கார்கள் நெருங்கி வரும் ஓசை கேட்டது.

பாதிரியாரின் ஆட்கள் காரிலிருந்து இறங்கி வந்தார்கள்.


''நடந்ததற்காக வருந்துகிறோம். மன்னிப்புக் கேட்கவே வந்தோம்'' - என்றான் ஒருவன். ஹென்றி குடும்பத்தினரும், வந்தவர்களும் கைகுலுக்கிக் கொண்டார்கள்.

(இது ஒரு 'சிம்பாலிக்' கதை. அத்துவானக் காடுகளைக் கூட புதிய சிந்தனை அலைகள், புது சித்தாந்தங்கள் ஊடுருவிவிடும். முதலில் புதிய அணுகுமுறைகளுக்கு எதிர்ப்பு இருக்கும். எதிர்ப்புகளை மீறி, புதிய சிந்தனைகள் சமுதாயத்தில் வேரூன்றிவிடும். புது வாழ்வு மலரும். மறு மலர்ச்சி உண்டாகும்... என்று இந்தக் கதை சொல்கிறது.

படத்தின் இயக்குனர்: காடிங்கா ஹெய்ன்ஸ்)

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

சிறுவர் பாடல்





# இரட்டைக்கிளவி இரட்டைச் சொல்

இருமுகிற சத்தத்திற்கு
இருக்குதுசொல் லொக்! லொக்!
இதயமிகத் துடிப்பதையே
இயம்பிடும்சொல்! திக்! திக்!

உருமும்புலி கண்டவுடன்
உள்ளமெலாம் பக்! பக்!
ஒரேசீராய் அணிவகுத்து
உலவும்நடை டக்! டக்!

இருமுள்ளும் மணிகாட்ட
இயங்குவது டிக்! டிக்
ஏதோ? ஆங் காரம்வரில்
இரண்டுகாலும் தக்! தக்!

பெரும்பல்லி சுவர்மீது
பேசுவது கிக்! கிக்!
பீப்பி! மேளம்! நாதஸ்வரம்
பின் 'சிங்கி' சிங்! சிக்!

இருசொல்லும் சேர்ந்தொன்றாய்
இணைந்துபொருள் கொள்! கொள்!
இது''இரட்டைக் கிளவி'' எனும்
இலக்கணத்தின் சொல்! சொல்!

ஒருசொல்தான் பிரிந்துவிடில்
ஒருபொருளும் இல்! இல்!
உணர்ந்துதமிழ் சிறப்புஎண்ணி
உண்மையிலே கல்! கல்!

- நெல்லை ஆ. கணபதி



**ஒரியா மொழி**

இந்தோ - ஆரிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது ஒரிய மொழி. பழங்காலத்தில் கடலோடிகளாக விளங்கிய கலிங்க மக்கள் பேசிய மொழி. இந்தியாவின் தென்கிழக்குப் பகுதியில் 10 ஆம் நூற்றாண்டில் புத்துயிர் பெற்று 14 ஆம் நூற்றாண்டில் இலக்கிய மொழியாகப் பரிணாமம் பெற்றது. இக்காலகட்டத்தில் மத்தியகால உலகையும் அதன் புராணச் சூழல்களையும் புறந்தள்ளிவிட்டு நவீனத்துவம் பெற்றது.

# சங்கமித்ரா

நந்தினி சத்பதி
மொழிபெயர்ப்பு: சரஸ்வதி ராம்னாத்

ஆளுயரக் கண்ணாடிமுன் நின்றிருந்தாள் சங்கமித்ரா. அவளதுவிழிகள் விழிப்புடன் கண்ணாடியில் தெரிந்த உருவத்தைப் பார்த்துக் கொண்டிருந்தன. அன்றைய சம்பவம் தன் மனத்தைப் பாதித்துள்ள அளவு உடலையும் பாதித்திருக்கிறதா இல்லையா என்பது பற்றித்தான் அவள் யோசித்துக் கொண்டிருந்தாள். காதோரத்துக் குழல்களில் நரையோடியது. விழிகளைச் சுற்றிப் படர்ந்துள்ள கருமை பின்னும் கருவளையமிட்டுவிட்டது. நெற்றியில்கூடத்தான் சுருக்கங்கள். ஹூம்... முகத்தின் பொலிவையெல்லாம் இறுகப் பிழிந்து விட்டதுபோல் தன் வாழ்க்கையில் நாற்பதாவது வசந்தம் கழிந்து விட்டதென்ற நினைவு ஏனோ திடீரென வந்தது. தன்னையுமறியாமல் தனது உடைகளைப் பார்த்துக் கொண்டாள் அவள். உலகத்திலிருக்கும் அழுக்கெல்லாம் தன் உடையில் வெளிப்படத் துடித்துக் கொண்டிருப்பது போல் கரியும் மஞ்சளும் அழுக்கும் திட்டுத் திட்டாகத் தெரிந்தன.

நடுப்பெண் டுளி இருக்கிறாளே, பிறந்ததிலிருந்தே இப்படித்தான் சதா மூக்கில் கொட்டிக்கொண்டே இருக்கும். குர், குர் என்று உறிஞ்சிக் கொண்டே இருப்பாள். பெரிய பையன் இருக்கிறானே! மகா குறும்பு. பந்து விளையாடி விட்டு, வீடு திரும்பியதும் கை, காலைக் கழுவிக்கொண்டு நேராய் வந்துவிட்டால், முகத்தைத் துடைத்துக் கொள்ள அம்மாவின் புடவைத் தலைப்புதான் வேண்டும். துண்டு கொடுத்தால் கூட எடுத்துக் கொள்ள மாட்டான். வீசி எறிந்து விடுவான். டுளி உன் தலைப்பில் மூக்கைத் துடைத்துக் கொள்ளும் போது நான் ஏன் கையைத் துடைத்துக் கொள்ளக் கூடாது என்பது அவன் வாதம்.

கைக்குழந்தை; அவள் தினமும் மித்ராவின் மடியை ஈரமாக்குவது வழக்கமாகி விட்டதே!... அவர்... அவளுடைய கணவர், சர்க்கார் காரியாலயத்தில் அண்டர் செகரெட்டரி. பிரசாந்த் மிஸ்ரா. அவருக்கும், சாப்பாடு, சிற்றுண்டி, எது சாப்பிட்ட பின்னும், கை அலம்பியதும், துடைத்துக் கொள்ள அவளுடைய புடவைத் தலைப்புதான் வேண்டும்.

*நந்தினி சத்பதி*

*இவர் பொது வாழ்க்கையில் ஈடுபட்டிருந்தாலும் இலக்கியத்தின் மீது அக்கறையும், நம்பிக்கையும் கொண்ட பெண் எழுத்தாளர். தொடர்ந்து நாவல், சிறுகதைகள் எழுதி வருகிறார். சமகால வாழ்க்கை இவரின் படைப்புகளில் பிரதிபலிக்கிறது. குறிப்பாக மனோதத்துவ ரீதியில் பெண்களின் மனஉணர்வுகளை ஆழமாக ஆராய்ந்து எழுதிவருகிறார். அவருடைய படைப்புகள் தமிழிலும் பிற இந்திய மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இவர் ஒரிஸா மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர்.*

மித்ராவிற்கு அடிக்கடி கோபம் வரும். கணவரின் இந்த வழக்கத்தைக் கிண்டல் செய்வாள் அவள். ஆனால் அவர் அசைய மாட்டார். அமைதியான புன்னகையுடன், "மித்ரா! உன்னுடைய புடவைத் தலைப்பு எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது" என்பார். மித்ரா இதற்கென்ன பதில் கூறுவாள்? கூறமுடியும்?

மித்ரா சிந்தனையிலாழ்ந்து போனாள். ஆனால் அன்றைய காலை நிகழ்ச்சி நினைவு வந்ததும் நனவுலகத்திற்குத் திரும்பி வந்தாள் அவள்.

அன்று காலை விநயனை அகஸ்மாத்தாய் சந்தித்தாள் அவள். விநயன் என்ற பெயருடன் அவளுடைய நினைவுகள் பலவும் இணைந்துள்ளன. மனதிற்குள்ளேயே இரண்டொரு முறை அப்பெயரைக் கூறிப் பார்த்துக் கொண்ட மித்ராவிற்குக் கண்ணாடியில் தெரிந்த தன் முகத்தைப் பார்த்ததும் சிரிப்புத்தான் வந்தது. கண்ணாடியில் பிரதிபலிப்பவள் நான்கு குழந்தைகளின் தாய், நாற்பது வயது மித்ரா அல்ல, இளம் பெண் மித்ரா என ஒரு கணம் தோன்றியது. இப்பொழுது எவரும் அவளை சங்கமித்ரா என்ற பெயரிட்டு அழைப்பதில்லை. அம்மா... அல்லது மித்ரா.... என்ற சொற்கள்தான் பொதுவாகக் காதில் விழுகின்றது. வீட்டிற்கு வெளியே அவள் மிஸிஸ் மித்ரா. கடிதங்களில் விலாசம் கூட மிஸிஸ் மிஸ்ரா என்றுதான் எழுதப்படுகிறது. உண்மையில் சங்கமித் என்ற ஒருத்தி எப்பொழுதோ மறைந்துவிட்டாள்.


இதனால்தானோ என்னவோ, இன்று விநயன் சங்கமித்ரா என அழைத்ததும் அவள் உடலும் உள்ளமும் ஒரு கணம் சிலிர்த்து விட்டதோ! விநயனின் அந்த அழைப்பில் வார்த்தைகளால் அளவிட்டுச் சொல்ல முடியாத இதயத்தால் உணரக்கூடிய ஏதோ ஒன்று இருக்கிறது. இருபத்தைந்து வருடங்களுக்குமுன் அவன் இப்படித்தான் அவளைப் பெயரிட்டு அழைத்தான்.

அலங்கார மேஜையின் முன்னிருந்த ஆசனத்தில் அமர்ந்து கொண்டாள் சங்கமித்ரா. அவளுக்குத் தலை சுற்றியது. திடீரென இத்தனை நாட்களுக்குப் பின் இவையெல்லாம் நினைவு வருவானேன்! *சீச்சி*. இன்று விநயனை வீட்டிற்கு வரும்படி அழைத்து எல்லாவற்றையும் ஒரேயடியாய்க் குழப்பியாகி விட்டது. ஹூம் அவனை எதற்காக வீட்டிற்கு வரும்படி அழைத்தாள்?

இந்த இருபத்தைந்து வருடங்களில் அவள் விநயனைச் சந்திக்கவில்லை என்பதில்லை. விநயன் பிரசாந்தின் நண்பன். எப்பொழுதாவது ஏதாவது வேலையாக அவர்கள் இல்லத்திற்கு அவன் வந்ததுண்டு. பிரசாந்த் விநயனை மிகவும் புகழ்வாள். பிரசாந்தின் முன்னிலையில் விநயனின் அடக்கமும் பணிவும் பல மடங்கு அதிகரித்து விடுவதையும் மித்ரா வியப்புடன் கவனித்ததுண்டு. ஆனால் அவள் உள்ளத்தில் சலனம் ஏதும் ஏற்பட்டதும் இல்லை. அவளது அன்றாட அலுவல்களில் எவ்விதக் குழப்பமும் உண்டாகியதில்லை.

இன்று அவள் விநயனிடம் என்ன சொல்லப் போகிறாள்? தன்னை அழைத்ததின் கார





ணத்தை அவன் நிச்சயம் கேட்கப் போகிறான். மித்ரா தன் உள்ளத்தின் மூலை முடுக்கெல்லாம் ஏதாவது இருக்கிறதா என்று தேடித் துருவிப் பார்த்துவிட்டாள். இந்த இருபத்தைந்து ஆண்டுகளில் இம்மாதிரி பல முறைகள் அவள் செய்ததுண்டு. துருவி ஆராய்ந்து அனாவசியமானதென்று தோன்றியதைச் சற்றும் தயா தாட்சண்யமின்றி, குப்பையென ஒதுக்கித் தள்ளியதுண்டு. உள்ளத்தில் பல முறை புயல் கொந்தளித்து எழும். ஆனால் சமூகம், குடும்பம், கட்டுப்பாடு, ஒழுக்கம் என்ற வரையறைகளைப் போக்குக் காட்டி, சற்றும் தளர்ச்சி காட்டாது. அவற்றைத் தூர ஒதுக்கித் தள்ளி இருக்கிறாள். அவள் அறிவற்றவள் அல்ல. இதனால் தான் மற்றவர்கள் அவளைப் பாராட்டியது மட்டுமின்றி அவளே தன்னைப் பாராட்டிக் கொண்டிருக்கிறாள்.

அன்று தோழிகளிடையே மணிமாலாவைப் பற்றிய பேச்சு எழவில்லையா? கணவன், குழந்தைகள் எனக் குடும்பம் நடத்திக் கொண்டிருந்தாளே, ஆனால் என்ன ஆச்சர்யம்? அழகான குணசாலியான கணவனை, விட்டு விட்டுப் போய் விட்டாளாமே? பவித்தரனின்பால் மணிமாலா கொண்டிருந்த காதல் அத்தனை வலுவானது போலும். அதுதான் கணவனை விட்டே அவளைப் பிரித்திருக்கிறது. இப்பொழுது அவள் பவித்திரனுடன் வாழ்வதாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அவள் குழந்தைகளெல்லாம் இப்பொழுது வளர்ந்து பெரியவர்களாகி விட்டார்கள். எல்லாவற்றையும் பார்த்து, புரிந்து கொண்டிருப்பார்கள். தங்கள் அம்மாவைப் பற்றி அவர்கள் மனத்தில் என்னென்ன எண்ணங்கள் தோன்றுகின்றனவோ, அன்றைய தினம் மணிமாலாவின் பேரில் வெறுப்பும் ஆத்திரமுமாய் பீறிக் கொண்டு வந்தது. உடம்பு கூசியது. மயிர்க்கால்கள் குத்திட்டு நின்றன. மணிமாலாவின் செய்கையைக் குறித்து அவளது கடு

மையான விமர்சனத்தைக் கேட்ட அவள் தோழிகள், வியப்பும், தயக்கமுமாய், மௌனமாகி விட்டனரே! மணிமாலா அவர்கள் யாவருக்கும் தோழிதான். ஆனால் மித்ரா அவர்களையெல்லாம் விட அதிகம் படித்தவளும்கூட. அவளுக்கு முகத்தில் நிலவிய கம்பீரத்தின் முன் எவருக்கும் அப்படி இப்படியெல்லாம் பேசவே துணிவு வராது.

அன்று சங்கர் ஒருவன்தான் மித்ராவின் கூற்றை எதிர்த்தான். "மிஸிஸ் மித்ரா! மனத்தின் உண்மையான உணர்ச்சிகளை மறைத்துக் கொண்டு, அடக்கிக் கொண்டு, தன்னைத்தானே துன்புறுத்திக் கொள்வதைத்தான் தாங்கள் விரும்புகிறீர்களா?

ஒரு கணம் இதைக் கேட்ட மித்ரா அதிர்ந்து போனாள். இயன்ற வரையில் தன் எழுச்சியை அடக்கிக் கொண்டு, "மிஸ்டர் தாஸ்! உணர்ச்சி வேகத்தின் வெள்ளத்தில் உலகம் மூழ்கிவிடுவதில்லை. கட்டுப்பாடுகள் என்ற பந்தயங்களிடையே தான் அது வாழ்கின்றது. மனிதன் தனக்குத் தானே நியமங்களை ஏற்படுத்திக் கொண்டு தன்னிச்சையாய் சமூகத்தின் அத்தியாவசியமான கட்டுப்பாடுகளைத் தகர்த்தெறிவதென்றால் அவன் மீண்டும் காட்டுமிராண்டித்தனமாக யுகத்திற்குத் திரும்ப வேண்டியிருக்கும்" என்றாள்.

அன்று பிரசாந்த் அவளுடைய இந்தத் தர்க்க வாதத்தை மிகவும் பாராட்டி என்ன சொன்னார்?... பிரசாந்த் அன்று கூறியது நினைவு வந்ததுமே மித்ராவின் முகமெல்லாம் குப்பென்று சிவந்தது. "உண்மையில் நீ அசாதாரணமானவள் மித்ரா" என்றான் பிரசாந்த். உவகை பொங்க மித்ரா, பேதைமை நிறைந்த இளமங்கைபோல் அவனது அகன்ற மார்பில் தன் முகத்தைப் பதித்துக் கொண்டாள் அல்லவா?

ஆனால் இன்று? மித்ராவிற்கு என்ன நேர்ந்து விட்டது? இன்று அவள் மனத்தில் இத்தகைய எண்ணங்கள் எங்கிருந்து முளைத்தன? பிரசாந்த் விநயனைப் பற்றி எல்லாம் கேள்விப்பட்டிருப்பார். ஆனால் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் இதைப் பற்றி ஒரு பேச்சுக் கூடப் பேசியதில்லை. ஒரு கேள்விக் கூடக் கேட்டதில்லை. ஆனால் பிரசாந்தனின் இந்த அலட்சிய பாவம் அவளைத் திகிலில் ஆழ்த்தியது உண்டு. எதையும் பாராட்டாத மேம்போக்கான இயல்பு, அவளுக்கு எரிச்சலூட்டியதும் உண்டு. வீடு, வாசல், குடும்பம் என்று அயராது அவள் உழன்று கொண்டிருக்கும்போது சற்றே ஆறுதலான இரண்டொரு வார்த்தைகளுக்கு அனுதாபத்திற்கு அவளது உள்ளம் ஏங்கும். ஆனால் அவசியமான இரண்டொரு வார்த்தைகளுடன், ஒய்விற்கோ அவகாசத்திற்கோ, தனது வாழ்வில் இடமில்லை என்பது போல் அவன் தன் வேலையில் மூழ்கிவிடுவான். மித்ராவின் உள்ளத்தில் ஆயிரமாயிரம் குறைகள், தாபங்கள் அலைமோதும். ஆனால் பிரசாந்தனின் அமைதியான, மகிழ்ச்சி நிலவும் முகத்தைப் பார்த்ததும் அவளால் தன் குறைகளை வெளியிடவே இயலாமல் போய்விடும். தோற்றுப்போய் மௌனமாகிவிடுவாள். பிரசாந்த் நடந்துகொள்ளும் முறையில் எங்கேனும் குறை காண முடிந்திருந்தால் தனது தாபங்களையெல்லாம் கொட்டிவிடச் சந்தர்ப்பம் கிடைத்திருக்கும் என்று அவள் அடிக்கடி எண்ணுவதுண்டு.

மித்ராவின் பார்வை எதிரேயிருந்த கண்ணாடியில் தான் நிலைத்திருந்தது என்றாலும் அது அவளது அந்தரங்கத்தைத்தான் துறுவிக் கொண்டிருந்தது. இந்த அமைதியான, அழகான வாழ்வினிடையே அவள் விநயனை ஏன் இழுத்து வருகிறாள்? என்ற கேள்வி அடிக்கடி அவள் உள்ளத்தில் அலை மோதியது. தன்னுடைய இந்தக் கேள்விக்கு அவளால் விடை காணவே இயலவில்லை. விநயனின்பால் அவள் இதயத்தில் இன்னமும்... இருக்கிறதோ?... "இல்லை இல்லை இருக்கவே முடியாது... விநயனின் உதவி எனக்குத் தேவையே இல்லை" எனக் கூவியது அவளது மனக்குரல்.



பனிக்காலத்து மாலைவேளை. இருள் மெல்ல மெல்லக் கனத்துக் கொண்டிருந்தது. மித்ராவின் கண்ணாடியிலிருந்து மறைந்துவிட்டது. வீட்டின் ஒவ்வொரு பொருளும் நிழலாக மங்கலாகத் தெரிந்தது. மித்ரா இன்னமும் அங்கேயே உட்கார்ந்து கொண்டிருந்தாள். இன்னமும் அறையினுள்ளே ஒருவரும் வரவில்லை. குழந்தைகள், டியூஷன் மாஸ்டரிடம் படிக்கத் தொடங்கிவிட்டன. எங்கிருந்தோ சில குரல்கள் லேசாகத் தெளிவற்றுக் காதில் விழுந்தன. பிரசாந்தின் அறையில் வெளிச்சம் திரையை ஊடுருவிக் கொண்டு லேசாகத் தெரிந்தது.

பைல்களின் குவியல்களிடையே பிரசாந்த் உட்கார்ந்திருப்பார். உள்ளங்கையில் மோவாயை ஊன்றிக் கொண்டு இன்னொரு கரத்தில் பேனாவுடன் உட்கார்ந்திருப்பார். மணி பத்தடித்து விட்டதோ என்னவோ, குழந்தைகள் சாப்பிட வேண்டும். படுக்கை விரித்துப் படுக்கச் செய்ய வேண்டும். இதெல்லாம் முடிந்தபின்தான் தளர்ந்த நடையுடன் அவர் தம் அறையிலிருந்து வெளியே வருவார். பேண்டையும் ஷர்ட்டையும் கழற்றிவிட்டு லுங்கியைக் கட்டிக் கொண்டு மித்ராவின் பின்புறம் வந்து நின்றவாறு, கள்ளமற்ற குழந்தை போல்... 'இன்று என்ன சாப்பாடு போடப் போகிறாய் மித்ரா' என்று கேட்பார். மித்ரா சாதாரணமான எளிய உணவை இரு தட்டுகளில் பரிமாறி எடுத்துக் கொண்டு வருவாள். இருவரும் ஒன்றாகவே சாப்பிட அமர்வார்கள். இரண்டொரு பேச்சுகள் நடைபெறும். பிறகு மௌனம்தான். மித்ராவிற்கு அந்த மௌனம் சகிக்கமுடியாததாக இருக்கும். மளமளவென்று சாப்பிட்டுவிட்டு எழுந்து போய் விடுவாள். இதுதான் அவர்களது அன்றாட வாழ்வின் சம்பவங்கள்.

இப்பொழுதே ஓடிச் சென்று பிரசாந்தின் இரு தோள்களையும் பற்றி உலுக்கி, 'சொல்லுங்கள் ஏன் இந்த மௌனம்? பிரசாந்தன் என்ற பெயரைப் பெருமைப்படுத்தவா இந்த மௌனம்' எனக் கேட்க வேண்டும் போல் அவளுக்குள்ளே ஒரு வெறி மூண்டெழுந்தது. அப்பொழுது.... அவன் வியப்புடன் அவளை ஏறிட்டுப் பார்ப்பான். அதற்கவள் சொல்லுவாள் - "இதோ பாருங்கள், இந்த மௌனத்திலிருந்து விடுதலை பெறத்தான் நான் இன்று விநயனை அழைத்திருக்கிறேன்" என்று.

சங்கமித்ரா நீண்ட பெருமூச்செறிந்தாள். விநயனை அழைத்ததன் காரணமென்ன என்பது இப்போது அவளுக்குப் புரிந்துவிட்டது. விநயன் எப்பொழுதும் தடதடவென்று ஓயாமல் ஏதோ பேசிக் கொண்டிருப்பான். அவனைப் பைத்தியம் என்றுகூடச் சொல்லலாம். ஆனால் மித்ராவின் வாழ்வில் விரவி நிற்கும் இந்தக் காடாந்திர மௌனத்தைக் கலைக்க அவன் ஒருவனால்தான் இயலும். விநயனுக்கு இதையெல்லாம் புரிந்து கொள்ளும் சக்தி இருக்குமா? இந்த அளவுடன் அவன் திருப்தி அடைந்துவிடுவானா? என்ன நினைப்பானோ? தன்பால் மித்ராவிற்கு இன்னும் ஆசை இருக்கிறது என்று அவன் நினைத்துவிட்டால்...?

மித்ராவினால் மேற்கொண்டு எதையுமே நினைத்துப் பார்க்க இயலவில்லை. தலையைக் கனத்தது. தன் மீதே வெறுப்பாக வந்தது. இப்படியொரு காரியத்தை அவள் ஏன் செய்தாள்? பிரசாந்தே அவனைத் தவறாக நினைத்து விட்டால்? ஹூம் அப்படித் தவறாக நினைக்க என்ன உரிமையிருக்கிறதாம்? என்றாவது என் இதயத் துடிப்பை உணர்ந்திருக்கிறாரா அவர்? சாப்பாட்டு வேளைக்குச் சாப்பாடு. உடுத்திக் கொள்ள உடை, நோயுற்றால் மருந்து... இது மட்டும் போதுமா ஒருத்திக்கு?

மித்ரா ஸ்விச்சைப் போட்டாள். குழல் விளக்கின் ஒளி பரவியதுமே மித்ராவின் பார்வை, அவளும் பிரசாந்தும் சேர்ந்து எடுத்துக் கொண்ட படத்தின் மீது தான் விழுந்தது. அழகான பெரிய பெரிய கலர் படங்கள். பிரசாந்தின் உதட்டில் அதே அமைதியான மதுரமான புன்னகை. இருபத்தி ஐந்து

வருடங்களுக்கு முந்திய அந்த இளமை, கண்களில் வீசும் அறிவொறி... பிரகாம்... உண்மையிலேயே பிரசாந்த் மிகவும் அழகாகத் தானிருக்கிறார்... கணநேரத்திற்குமுன் மித்ரா எடுத்துக் கொண்ட பிரதிக்ஞை மெள்ள மெள்ளத் தளரத் துவங்கியது. ஆயினும் அவள் தன்னைத் திடப்படுத்திக் கொண்டவளாய் எழுந்து உடை மாற்றிக் கொண்டாள். அறையை நோக்கிச் சென்றாள்.



பைல்களைப் பார்க்கும் வேலை முடிந்துவிட்டது போலும். சோம்பலுடன் ஒரு தடித்த ஆங்கிலப் புத்தகத்தைப் பிரித்து வைத்துக் கொண்டு அமர்ந்திருந்தான் பிரசாந்த். தன் தோள்களின்மீது லேசான பரிசத்தை உணர்ந்ததும் சட்டென நிமிர்ந்தான் அவன். லேசான வியப்பு, முகமெல்லாம் பூவாய் மலர்ந்தது உவகையில். மித்ரா இமையாது நோக்கிய வண்ணம் நின்றாள். பிரசாந்தின் கரம் மெல்ல அவள் இடுப்பைச் சுற்றி வளைத்துத் தன்னருகே இழுத்துக் கொண்டது. மித்ராவிற்கு மயிர் கூச்சலெடுத்தது. உடலெங்கும் ஒரு சிலிர்ப்பு.

சில நிமிடங்களுக்குப் பின்னர் அவன் கேட்டான்: "நீ இங்கே எப்பொழுது வந்தாய்? வழி கிழி தவறி விடவில்லையே?"

திகைப்புற்றவளாய் சங்கமித் பார்த்துக் கொண்டே நின்றாள். இரண்டே வார்த்தைகள்தான் வெளிவந்தன.

"இதன் அர்த்தம்?"

எதிரேயிருந்த மேஜையின்மீது அவளைப் பலவந்தமாக அமர்த்திய பிரசாந்த், தணிந்த குரலில், "அர்த்தமா?" என்றான். "அர்த்தம் ரொம்பத் தெளிவானதுதானே! குழந்தைகள், தோழிகள் என்று சதா உழன்று கொண்டிருக்கும் ஒருத்தி, தன் அப்பாவிக் கணவனை ஒருமுறை ஏறிட்டுப் பார்க்கவாவது நேரம் இருந்ததோ? இன்று திடீரென இம்மாதிரி அருள்மழை பொழிந்தால் வியப்பாக இருக்காதா என்ன?" பிரசாந்தின் குரலில் இனிமை கூடியது. உணர்ச்சி வேகத்துடன் "மிது உண்மையாகச் சொல்லுகிறேன். இந்த வரண்ட பைல்களுடன் தினசரி போராடிக் கொண்டு, இதிலேயே மூழ்கி இருக்கும்போதெல்லாம், ஏதாவதொரு சாக்குக் கூறிக் கொண்டு, நீ வரமாட்டாயா? உன் அழகிய முகத்தை என் தோளில் பதித்துக் கொண்டு..." பிரசாந்த் மௌனமாகி விட்டான். ஆனால் அவனது ஒளி மிகுந்த விழிகள் ஆயிரமாயிரம் கதைகளைப் பேசிக் கொண்டே இருந்தன. மித்ரா ஏதோ இந்திர ஜால மயக்கத்திலிருப்பவள் போல் திளைத்தாள். உண்மையில் இதெல்லாம் என்ன? இருபத்தைந்து வருடங்களில் பிரசாந்தனின் இந்தத் தோற்றத்தை அவள் கண்டதேயில்லையே! அப்படியென்றால் பிரசாந்தனும்... அவள் தன் வாழ்விலே இன்பத் தென்றலாக வீசட்டும் என்று எதிர்பார்த்துக் காத்திருந்தாரா?

வெகு நேரத்திற்குப் பிறகு குற்றவாளியைப் போன்ற உணர்வு மேலிட, "இன்று விநயனை நம் வீட்டிற்கு வரும்படி அழைத்திருக்கிறேன்" என்றாள் மித்ரா.

பிரசாந்த் உரக்கச் சிரிக்கலானான். மித்ராவின் மோவாயைப்பற்றி மெல்ல உயர்த்தியவாறு, "அப்படியென்றால்... அப்படியென்றால் பிரமாதமான சாப்பாடு கிடைக்கும் என்று சொல்... பிரமாதம்.... கிராண்ட் செலபிரேஷன் டே" என்றான்.

* பெண் - இந்தியப் பெண் எழுத்தாளர் சிறுகதைகள் தொகுப்பிலிருந்து

நூல் தொகுப்பாசிரியர்: டாக்டர். சு.மல்லிகா

விலை: ரூ. 70/-


வெளியீடு: நிவேதிதா நல்வாழ்வு கல்வி அறக்கட்டளை, 15, வங்கியர் குடியிருப்பு, குமரன் நகர், திருச்சி - 17.





# இந்திய வரைபட இறக்குமதிக்கு தடை

காஷ்மீரை நம்நாட்டில் இருந்து பிரித்துக் காட்டும் (சீனாவில் தயாரான) இந்திய வரைபடம், அட்லாஸ், உலக உருண்டை ஆகியவற்றின் இறக்குமதிக்கு தடைவிதிக்குமாறு டில்லி ஐகோர்ட்டில் கவுதம் என்பவர் மனுதாக்கல் செய்திருந்தார். அந்த மனுவில் அவர் கூறியிருந்தது...



சீனாவில் தயாரிக்கப்பட்ட இந்திய வரைபடங்கள், உலக வரைபடங்கள் (அட்லாஸ்), உலக உருண்டை (குளோப்) ஆகியவை நம்நாட்டு மார்க்கெட்டில் தாராளமாக விற்பனை செய்யப்படுகின்றன. இவை எல்லாவற்றிலும் நம்நாட்டு வரைபடத்துக்கு வெளியே காஷ்மீர் இருப்பதாக, தனியாக காட்டப்படுகிறது. அதற்கு இந்தியா முழுமைக்கும் தரப்படும் வண்ணத்தில் இருந்து தனி வண்ணம் கொடுக்கப்படுகிறது. இதன்மூலம் பார்ப்பவர் மனதில் காஷ்மீர் ஒரு தனிநாடு என்ற எண்ணம் ஏற்படுத்தப்படுகிறது.

எனவே, சீனாவில் தயாராகும் நம்நாட்டு வரைபடங்கள், அட்லாஸ், உலக உருண்டை ஆகியவற்றின் இறக்குமதிக்குத் தடை விதிக்க வேண்டும். வரைபடங்கள், அட்லாஸ், உலக உருண்டை ஆகியவற்றை இறக்குமதி செய்வதில் புதிய நிபந்தனைகளையும், கட்டுப்பாடுகளையும் மத்திய அரசு ஏற்படுத்த வேண்டும். இது போன்ற அத்துமீறலான வரைபடங்களை நமது மாணவர்கள் பார்த்தால், அவர்களது மனதில் எதிர்மறையான எண்ணங்கள் ஏற்படும். அவர்களுக்கு தவறான கல்வி



போதித்ததாகிவிடும். இதுவரை இறக்குமதியாகி இப்போது விற்பனையில் உள்ள சீனத் தயாரிப்பு வரைபடங்கள், அட்லாஸ், உலக உருண்டை ஆகியவற்றை விற்கத்தடை விதிக்க வேண்டும். அவற்றைப் பறிமுதல் செய்ய உத்தரவிட வேண்டும்.


மனுவை விசாரணைக்கு ஏற்ற டில்லி ஐகோர்ட், இதுகுறித்து விளக்கமளிக்குமாறு மத்திய அரசுக்கு கடந்த ஏப்ரல் 21 ஆம் தேதி நோட்டீஸ் அனுப்பியது. இந்த வழக்கில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை ஏற்க மத்திய அரசு முதலில் மறுத்தது. ஆனால், தீவிர விசாரணைக்குப் பிறகு, இது போன்ற உலக உருண்டைகள் சென்னை வழியாக இறக்குமதி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுவதை அறிந்தது.

டில்லி ஐகோர்ட் தலைமை நீதிபதி பி.சி.படேல், நீதிபதி பி.டி.அகமது ஆகியோர் கொண்ட டிவிஷன் பெஞ்ச் முன்பு இந்த மனு நவ.

## தொடர் மழையால் தமிழ்த்தாத்தா வீடு இடிந்து விழுந்தது


பாபநாசம் அருகே உத்தமதானபுரத்தில் தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாதய்யர் வீடு உள்ளது. அண்மையில் பெய்த அடைமழையில் அந்த வீட்டின் ஒரு பகுதி இடிந்து விழுந்துள்ளது.

உத்தமதானபுரத்தில் தமிழ்த்தாத்தா உ.வே. சாமிநாத அய்யர் வசித்த வீட்டை தமிழக அரசு உடமையாக்கி நினைவுச் சின்னமாக்கி உள்ளது. கனமழையால் வீட்டின் மேல் மாடி தென்புறச்சுவர் இடிந்து பக்கத்து வீட்டில் விழுந்தது.



வீட்டின் மாடியின் மேல்பகுதி இடிந்து விழுந்து கிடக்கும் காட்சி

இன்றுள்ள நிலையில் வீட்டின் அனைத்துப்பகுதிகளும், எந்நேரமும் இடிந்துவிழும் அபாயத்தில் உள்ளது. நினைச் சின்னம் என்பதற்கு அறிகுறியாக ஒரு சில பகுதிகளையாவது சீரமைத்துத்தர பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். ●



உத்தமதானபுரத்தில் உள்ள தமிழ்த் தாத்தா உ.வே.சாமிநாத அய்யர் வீட்டின் முகப்பு தோற்றம்

10 அன்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. பெஞ்ச் அளித்த உத்தரவில் கூறியிருப்பதாவது:

இதுபோன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் நடக்காமல் இருக்க மத்திய அரசு கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். சர்ச்சைக்குரிய உலக உருண்டைகளை நம்நாட்டுக்குள் இறக்குமதி செய்யத் துணை போன சென்னையைச் சேர்ந்த சுங்க அதிகாரிகள் மீதும் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுபோன்ற முக்கியமான பிரச்னைகளில் தனது பணியை சரியாகச் செய்யாமல் அலட்சியமாக இருந்த மத்திய அரசுக்கு ரூ.10 ஆயிரம் அபராதம் விதிக்கப்படுகிறது. இதுபோன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் நடக்காமலிருக்க சீனாவில் தயாரிக்கப்பட்ட நம் நாட்டு வரைபடங்கள், உலக வரைபடங்கள், உலக உருண்டை ஆகியவற்றை இறக்குமதி செய்வதற்கு மத்திய அரசு உடனடியாக தடை விதிக்க வேண்டும்.

இவ்வாறு அந்த உத்தரவில் கூறப்பட்டிருந்தது... ●






**தாமல் கண்ணன், பெங்களூர்.**

*நகைச்சுவை உணர்வு நம்மிடம் குறையக் காரணம் டென்ஷனா?*

நகைச்சுவை உணர்வு நம்மிடம் குறைந்திருக்கவில்லை... மறைந்திருக்கிறது... அவ்வளவுதான்.

அதை வெளியே கொண்டுவர பயன்படுகிற ஒரு கருவிதான் 'ஜோக்' என்பது. சிரிக்கத் தெரியாதவர்களுக்குத்தான் 'டென்ஷன்' வரும்.

மன இறுக்கத்துக்கு மத்தியிலேயும் மகாத்மா காந்தி எப்படி இருந்தார் தெரியுமா? இதைக் கேளுங்கள்.

ஆயுர்வேத மருத்துவர் ஒருவர் காந்தியைப் பார்க்க வந்தார். அவரிடம் காந்தி கேட்டார்.

''எல்லா வியாதிகளையும் ஆயுர்வேதத்தினால் குணப்படுத்திவிட முடியுமா?''




''நிச்சயமாக முடியும்!''

''அப்படியென்றால் ஒரு முக்கியமான வியாதிக்கு ஏதாவது மருந்து இருந்தால் கொடுங்களேன்!''

''என்ன வியாதி... அதன் பெயரைச் சொல்லுங்கள்!''

''தீண்டாமை!''

வந்த மருத்துவர் விழிக்க ஆரம்பித்தார்.

**வி.சோமசுந்தரம் திருமாண்டக்கவுண்டம்பாளையம் பல்லடம்வட்டம்.**

*பிறரின் காலில் விழுந்து ஆசீர்வாதம் பெறுவதால் ஆன்மிகவழியிலோ... அறிவியல்வழியிலோ... ஏதாவது நன்மை உண்டா?*

உண்டு.

மனசுக்குள் பணிவு ஏற்படுகிறது.

இது ஆன்மிக இலாபம்.

உடலுக்குப் பயிற்சி கிடைக்கிறது.

இது அறிவியல் இலாபம்.

இதைத் தவிர இன்னொரு சவுகரியமும் இருக்கிறது... அதாவது அவர்

போட்டுக் கொண்டிருப்பது நம்மு டைய செருப்புதான் என்பதையும் சுலபமாகக் கண்டுபிடிக்கலாம்!

டி.அய்யாசாமி, அரூர், தருமபுரி மாவட்டம்.

*உமக்கு 'கட்அவுட்' வைக்க ஆசை. சிரித்தபடி இருக்கும் ஃபோட்டோ கிடைக்குமா?*



முயன்று பார்த்தேன்... முடிய வில்லை... மன்னிக்கவும்.

எம்.சண்முகம், கொங்கணாபுரம், சேலம் மாவட்டம்.

*தங்களை மிகவும் கவர்ந்த அரசியல் தலைவர் யார்? அவர்களை சந்தித்துப் பேசியதுண்டா?*

ஓர் உண்மை தெரியுமா உங்களுக்கு? நான் இதுவரை எந்த அரசியல் தலைவரையும் நேரில் சந்தித்துப் பேசியதே இல்லை!

அ.மாணிக்கவாசகம், குருந்தம்பட்டு, சிவகங்கை மாவட்டம்.

*நாட்டில் பரவலாக கூட்டுக் குடும்பம் என்கிற முறை அரிதாகி வருகிறதே...?*

பிள்ளைகள் பிரிந்து போகவே விரும்புகிறார்கள். அப்படிப் போனால் வசதியாக வாழலாம் என்றும் நம்புகிறார்கள்.

வசதியான வாழ்க்கையெல்லாம் நிம்மதியான வாழ்க்கை ஆகாது என்கிற உண்மை அவர்களுக்குப் புரிவதில்லை.

அது இருக்கட்டும்! அண்மையில் நடந்த ஓர் உண்மைச் சம்பவத்தைக் கேளுங்கள்.

ஓர் அப்பா காணாமல் போனார். 15 ஆண்டுகள் கழித்து திரும்பிவந்தார். அவரைப் பார்த்த மகனுக்கும் மருமகளுக்கும் மிகுந்த மகிழ்ச்சி.

''இவ்வளவு நாளா எங்கே அப்பா இருந்திங்க?''

''மகனே! மும்பையில் இருந்தேன். நிறைய சம்பாதிச்சேன்... இரண்டு மூன்று இடங்கள் சொந்தமாக வாங்கினேன்... இதோ அதறகான பத்திரங்கள்! இனிமே இதெல்லாம் எனக்கு எதுக்கு? இந்தா வச்சிக்கோ!''

மகனும் மருமகளும் அவரை விழுந்து விழுந்து உபசரித்தார்கள். அவ்வப்போது மருத்துவரிடம் அழைத்துப் போனார்கள்... ஓட்டல்களுக்கு அழைத்துப் போனார்கள். விதம் விதமா சாப்பாடு!



ஒருநாள் மகனை அழைத்தார்.

''மகனே! மும்பை சொத்துக்களை விற்றுவிடலாம்... இனிமே நான் அங்கே போய் என்ன செய்யப் போகிறேன்? நீயும் உன் மனைவியும் மும்பை போய் நல்ல விலை பேசி ஆளை ரெடி செய்த பிறகு கூப்பிடுங்கள். வந்து கையெழுத்துப் போடுகிறேன்...!''

முகவரியை வாங்கிக் கொண்டு மும்பைக் குப் போனார்கள். அவர்களுக்கு அதிர்ச்சி!

அந்த முகவரியில் இருந்தவை ஒரு கோயில்... ஒரு சத்திரம்...

கோபத்தோடு சென்னை திரும்பினார்கள்.

இங்கே வந்து பார்த்தால்...

வீடு பூட்டிக் கிடக்கிறது!

அந்த 'பெரிசு' மறுபடியும் எஸ்கேப்!

ஜி.குப்புசாமி, சங்கராபுரம்

*பக்தி என்பது எப்படி இருக்கவேண்டும்?*

அதைச் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டுமா? அப்படியானால் அடியிற் காணும் வரிகளைக் கவனியுங்கள்.

''இறைவனை வேண்டும் உதடுகளைவிட சரியான சமயத்தில் பிறருக்கு உதவும் கரங்கள் புனிதமானவை!''

சேலம் செல்வக்குமார், காங்கயம், ஈரோடு - 638706.

*பெண்கள் அளவிற்கு ஆண்கள் அழகுபடுத்திக் கொள்வதில் நாட்டம் செலுத்தாது இருப்பதற்கு என்ன காரணம்?*

பூக்கள் அழகாக இருக்க வேண்டியது அவசியம். வண்டுகள் தங்கள் உடம்பில் வண்ணம் தீட்டிக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை.

ஒன்று கவர்கிறது.
இன்னொன்று கவரப்படுகிறது.
இது இயற்கையின் விதி!

டி.முருகேசன், திருவாரூர் - 1.

*என்றும் இளமையாகவும், கவலை இல்லாமலும் இருக்க நல்லவழி சொல்லுங்களேன்...?*

என்றும் இளமையாய் இருந்தால் கவலை இல்லாமல் இருக்கலாம்.

என்றும் கவலை இல்லாமல் இருந்தால் இளமையாய் இருக்கலாம்.

*சரி இதற்கு என்ன வழி?*

அடுத்தவர் மீது அன்பு செலுத்துங்கள் அதுபோதும்.

ஏரலான், மயிலாப்பூர் சென்னை.

*அன்று சுதந்திரம் அடைவதற்காக வெள்ளையனே வெளியேறு என்று சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு ஆங்கில மோகம் அதிகமாகத் தெரிகிறதே...?*

அன்றைக்கு ''ஆங்கிலேயனே வெளியேறு'' என்றுதான் சொன்னார்களே தவிர, ''ஆங்கிலமே வெளியேறு'' என்று சொல்லவில்லை!

ஆனாலும் இன்றைக்குத் தமிழ் உணர்வு தலைதூக்கி வருகிறது.


தாய் மொழியில் பேசிக் கொள்வதே சிறப்பு என்று நினைக்கிற காலம் நெருங்கி வருகிறது.

என்றாலும் எந்த மொழியையும் நாம் வெளியேறச் சொல்ல வேண்டியதில்லை!

எவ்வளவு மொழிகள் தெரிந்து வைத்திருக்கிறோமோ அவ்வளவும் நமக்கு பலம்!

ஒருநாய் பூனையைத் துரத்தியது.

அது 'மியாவ்' 'மியாவ்' என்று கத்திக் கொண்டே ஓடியது.



இனி தப்பிக்க முடியாது என்கிற நிலையில் பூனை திரும்பி நின்று, ''வள்...! வள்...!'' என்று குரைக்க ஆரம்பித்தது.

இப்போது நாய் திரும்பி ஓட ஆரம்பித்தது. அந்தப் பூனையிடம் கேட்டார்கள்.

''அது எப்படி.... உன்னால் அந்த நாயைத் துரத்த முடிந்தது?''

பூனை சொன்னது... ''நான் அந்த நாயின் பாஷையைக் கற்றுக் கொண்டுவிட்டேன்... அதுதான் காரணம்!''

நெய்வேலி க.தியாகராஜன்,
கொரநாட்டுக்கருப்பூர்.

*அனுமார் செல்லுமிடமெல்லாம் அதன் வாலும் செல்வதைப் போல, தாங்கள் செல்லுமிடமெல்லாம் எதை எடுத்துச் செல்வீர்கள்?*

அவர் மாதிரி எடுத்துக் கொண்டு போக என்னிடம் வால் இல்லை.

அவர் எடுத்துச் சென்றது வால்!

நான் எடுத்துச் செல்வது நூல்!

அதாவது புத்தகம்.

எஸ்.முரளி, ஸ்ரீரங்கம்.

*தங்களின் நகைச்சுவை உணர்வுகளை முழுமையாக ரசித்த ஊர் எது?*

அப்படி ஏதும் இல்லை.

ஆனாலும் உங்கள் ஊர் சம்பந்தப்பட்ட ஒரு நகைச்சுவை கூறுகிறேன். அதை உங்களால் ரசிக்க முடிகிறதா... பாருங்கள்.


ஸ்ரீரங்கம். ஸ்ரீரங்கநாதர் முன்னால் நின்று ஒரு பக்தர் புலம்பினார்...

''நீ ரொம்ப ஜாலியா காலை நீட்டிப் படுத்துக் கிட்டிருக்கிறே... இது அடுக்குமா?''

பக்கத்தில் நின்றவர் சொன்னார்.

''ஆண்டவனை இப்படி எல்லாம் பேசலாமா?''

''நீங்கள்லாம் பேசப்புடாது... நான் பேச




லாம்... ஏன்னா நான் இவருக்கு சொந்தக்காரன்!''

''எப்படி?''

''இதோ படுத்திருக்காரே... இவரு சம்சாரத்தோட (லட்சுமி) சகோதரிதான் (மூதேவி) எனக்கு சம்சாரமா வந்து வாய்ச்சிருக்கா...!''



# கடித மஞ்சரி

சென்ற மாத இதழில் இடம்பெற்ற உங்களோடு ஒரு வார்த்தை பகுதிக்கு எதிர்வினையாக பல கடிதங்கள் வந்துள்ளன. அவற்றுள் முத்தான மூன்று கடிதங்கள் இங்கே!

❋ நாள்தோறும் வளர்ந்துவரும் முதியோரில்லங்களும், 'கிரஷ்' என்னும் குழந்தைகள் காப்பகங்களும், அநாதை இல்லங்களும் சமூகத்தின் மாயக் கண்ணோட்டத்தில் பெரும் சமூகசேவக அன்பில்லங்களாகத் தோன்றினாலும், அவைகளெல்லாம் இத்தமிழ் மண்ணின் பாரம்பரியமான அன்பு, பாசம், நேசமென்ற அடிப்படைகள் சிறிது சிறிதாகக் குடும்பங்களில் குறைந்து கொண்டே வருவதற்கான குறியீடுகளே என்று நாம் இன்னும் உணராத நிலையில் இருந்து வருகிறோம்.

கூட்டுக் குடும்பங்களாக இருந்த காலத்தில், அத்தை, மாமா, பெரியம்மா, சித்தி, பெரியப்பா, சித்தப்பா எனப் பல்வேறு உறவுகள் ஒன்றியங்கி எல்லாக் குழந்தைகளும் சிரித்தும் களித்தும் ஒன்றாக வளர்ந்திருந்த நிலையில் உரம்பெற்றிருந்த அன்பும் அருளும் கருணையும், இன்று ஆண்ட்டி, அங்கிள் என்ற சுருங்கிய உறவுடன், அடுத்த வீட்டுக் குழந்தையுடன் கூடப் பழக விடாதவாறு பெற்றோர்கள் தனித்தனியாகக் குழந்தைகளை, பத்தடிக்குப் பத்தடியுள்ள சிறைக் கூண்டு ஃப்ளாட் வீடுகளில் குறுகச் செய்து, பிற்காலத்தில் தம் மகன் அல்லது மகளால் உச்சபட்சமாக எவ்வளவு அதிகம் சம்பாதிக்கமுடியுமென்பதை கணக்கில் கொண்டு வளர்த்து வரும் நிலையில், குறைந்து வருகின்றதென்பது ஒரு நிதர்சனமான உண்மை.

சொந்த பந்தங்களிலிருந்துவிலகி, பெற்ற தாய் தந்தையரை சுயநலத்துக்காக முதியோரில்லங்களுக்கனுப்பி, 'நான், என் மனைவி! கணவன், என்மகன், மகள்' என்று ஒரு இறுக்கமான கயிற்றின் வட்டத்துக்குள் இயங்கும் பெற்றோர்களே, இன்றைய தலைமுறைக்கும், வளரும் தலைமுறைகளுக்கும் அன்புப் பாடம் கற்றுக் கொடுக்காது கொடுமைப் படுத்தும் பிறவிகள். வசதியான, எளிமையான நல் வாழ்க்கையை விட்டு விட்டு, ஆடம்பர வாழ்க்கைக்குப் பேராசைப்பட்டு, அதற்குத் தம் மக்களை ஒரு

❋ வீரம் காத்தலை விழுமிய இந்தியக் கலாசாரம் இன்று வீணான களத்தில் நின்று ஊசலாடுகிறது என்பது உண்மையே. இன்று பெண்கள் 'மட'ந்தையர்களுமல்லர்;'பேதமை'யர்களுமல்லர். பெரும்பாலான பெண்கள் கல்வியறிவு பெற்று, பல துறைகளிலும் ஆண்களுக்குச் சமமாகப் போட்டியிடும் தன்மை படைத்தவர்களே. எனினும், இயற்கையிலேயே அவர்களிடம் சில குணங்கள் இருக்கத்தான் செய்கின்றன. ஆகையினாலே தான் படித்தபெண்களும் கூட பலசமயங்களில் ஏமாற்றமடைய நேரிடுகிறது. பலவிதமான ஆசைகளுக்கும் சிலவிதமான பாசங்களுக்கும் அவர்கள் ஆட்படுவதால், பழம்பெருமையைக் காக்கவும் முடியாமல், புதியனவற்றில் புகும் துணிவுமற்றவர்களாகத் திணறுகிறார்கள்.

ஆண்களைப் பொருத்தமட்டிலும், அவர்களுக்கு 'வீரம்' என்பது வெறும் வாய்ச்சொல்லே. 'வீரம்' எனும் சொல் பலவற்றை உள்ளடக்கியது. தற்காத்தும், தான் கொண்டவளைக் காத்தும், சோர்வின்றி உழைத்து ஊரார் நலம் பெறப் பேணும் உயர்தர வீரமின்றி, சுயநலமிகளாகவும் கூட்டத்தோடு சேர்ந்து கூச்சலிடுவோர்களாகவுமே உள்ளனர். உலகம் இன்று கையளவு சுருங்கியிருந்த போதிலும் பரந்த மனமும் மறைந்தே போயுள்ளது. பாலர், முதியோர், அநாதை என இல்லங்கள் பெருக, ஆண்களிடம் உரமோ, வீரமோ இல்லை என்பதற்குச் சான்றுகள்!

*ஆடுதுறை கோ. ராமதாஸன்*

பெரும் முதலீடாக நினைக்கும் குடும்பங்களால், அன்பும் அருளும் குறைவது மட்டுமல்ல, வீரமும் குன்றி வருகிறது.

ஆம். கூட்டுக் குடும்பத்தில் வளர்ந்த குழந்தைகள் மரமேறியும், ஓடியும் விளையாடியும் தங்கள் உடல்பலத்தையும் வளர்த்து, வீட்டுப் பெரியோர்களான தாத்தா, பாட்டி போன்றவர்கள் சொல்லித் தரும் நீதிபோதனைகளால் மனோபலத்தையும் வளர்த்து, எதையும் எங்கும் சமாளிக்கும் வீரம் படைத்திருந்தார்கள்.

ஆனால், இன்று ஒவ்வொரு வீட்டிலும் தனித்தனியாக வளரும் குழந்தைகள், பலநேரங்களில் பெற்றோரும் வீட்டிலில்லாத காரணத்தால், தனிமைப்பட்டு, தொலைக்காட்சியின் முன்னே வாழ்வையிழந்து, உடலாலும் உள்ளத்தாலும் நிலைகெட்டு, மன அழுத்தத்துடன் தீவிரவாத வெறியுணர்ச்சி மிகுந்து, வீரம் என்பதைத் தவறாகப் புரிந்து கொண்டு சிதைந்துபோவதை நாம் காண்பது உண்மையல்லவா?

கரைகாணாத அளவு பணம் சேர்ப்பதை மட்டுமேகுறியாகக் கொண்ட தற்காலக் கல்விமுறையும், வாழ்க்கை நோக்கும், இன்றைய உலகில் குறைந்துகொண்டே வரும் அன்புக்கும் அருளுக்கும், பாசத்துக்கும் கருணைக்கும் மட்டும் காரணமல்ல, வளர்ந்து வரும் தவறான வீரமான தீவிரவாதத்துக்கும் மூலகாரணமாகும்.

இயன்ற அளவு சொந்தபந்தங்களுடன் கூடிய ஒற்றுமையான கூட்டுவாழ்க்கை, ஆத்மசிந்தனையையும் மனோபலத்தையும் வளர்க்கக் கூடிய சிறந்த கல்வி முறை, எளிமையான வாழ்வின் சிறப்பையுணர்த்தும் உடலுறுதி விளையாட்டு என ஒவ்வொரு குடும்பத்தினரும் உறுதி பூண்டால், தமிழ் நாட்டின் கலாசாரம் மட்டுமல்ல, இந்தியக் கலாசாரத்தின் அடிப்படை நீதிகளான அன்பு, அருள், பாசம், நேசம், கருணை போன்றவைகளுடன், ஈரமனம் நிறைந்த பெரும் வீரமும் மறுமலர்ச்சி காணுமென்பது மறுக்க முடியாத உண்மை.

*கே.பி. பத்மநாபன், கோவை - 5*


✱ ஒருமுறை காந்தி - ராஜாஜி - கல்கி - சதாசிவம் ஆகியோர் கூடியிருந்து டி.கே.சி.யின் கம்பர் அமுதத்தை ரசித்துக் கொண்டிருந்தனர். அப்போது காந்திஜி "ஆஹா ராமாயணத்தைத் தமிழில் இவ்வளவு அற்புதமாக எழுதியிருக்கிறாரா? சரி... நான் இதைத் தமிழிலேயே கேட்டு ரசிக்க என்ன செய்ய வேண்டும்?" என்பது போல் கேட்டாராம். ராஜாஜி அதற்கு, "நீங்கள் மறுஜன்மத்தில் தமிழராகப் பிறந்து, தமிழ் படித்து வர வேண்டும்" என்றாராம்.

அப்படிப்பட்ட கம்பராமாயணப் பாடலுடன் குறுந்தொகைப் பாடலையும் ஒப்பீடு செய்து நீங்கள் எவ்வளவு அழகாக வெளிக்காட்டியுள்ளீர்கள்... விதைகள் விதைக்கிறோம். எல்லாமே முளைப்பதில்லை. கடிதங்களில் தான் சுருக்குவதற்காக ஏதோ 'சென்சார்' செய்வார்கள். நீங்கள் கடிதமஞ்சரி பகுதியையே 'சென்சார்' செய்துவிட்டீர்களே...

தாமல் கண்ணன்,
பெங்களூர்.

(கடித மஞ்சரியில் இதழ் சார்ந்த விமர்சனம் மட்டுமல்லாது சமூகம்சார்ந்த கருத்துகளும், அவரவர்களுடைய சுவாரஸ்யமான அனுபவங்களும் இடம் பெறலாமே என்று தோன்றுகிறது. வாசகர்கள் இதுவிஷயத்தில் கவனம் கொள்ளலாமே! - ஆர்.)





## உங்களோடு ஒரு வார்த்தை...

# நாவலும்... நானும்...

எழுத்தாளர் இல்லத் திருமணவிழா ஒன்றில் புஷ்பாதங்க துரை என்று எழுத்துலகம் அடையாளம் கண்ட ஸ்ரீ வேணுகோபாலனைச் சந்தித்தேன். மூத்த எழுத்தாளர், நாவலாசிரியர்... அவர் எழுதிய திருவரங்கன் உலா, மதுராவிஜயம் போன்ற பக்திச் சுவையுடன் கூடிய சரித்திர நாவல்களைப் பலமுறை படித்திருக்கிறேன். அந்நாவலின் சில இடங்களில், காட்சிக்குத் தக்க அவர் காட்டியிருக்கும் எழுத்து அலங்காரத்தில் கண்களில் ஈரம் பெருக லயித்திருக்கிறேன். வாய்ப்பு கிடைத்தால் நீங்களும் அவற்றைப் படித்து அனுபவிக்கலாம். தற்போது அந்த இரண்டு நாவல்களையும் ஒன்றாக்கி, திருவரங்கன் உலா என நான்கு பாகங்களாக இரண்டாம் பதிப்பை வெளியிட்டிருக்கிறார்.

அன்று அவரிடம் இந்த நாவல்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்த போது அவருடைய கண்களில் ஆனந்த பாஷ்பம் பெருக்கெடுத்தது. ஒரு படைப்பாளனுக்குரிய அங்கீகாரம் வாசகரின் பாராட்டில் தானே உள்ளது! கிட்டத்தட்ட பதினாறு ஆண்டுகள் சரித்திரக் குறிப்புகளைத் தேடி அலைந்து சிரமப்பட்டிருக்கிறார். அவர் அந்த நாவலில் காட்டும் திருவரங்கமும் கோயிலும் என் மனத்துள்ளே தியாகத்தின் உருவாய் நிலைபெற்றுவிட்டது. அது வரையில் பக்தியின் வெளிப்பாடாகத் தோன்றிய கோயில், அதன்பிறகு தமிழர் உணர்வுகளின் வெளிப்பாடாக; மானம், சுயமரியாதையின் வெளிப்பாடாகத் தோன்றத் தொடங்கியது.

கருவறையில் காட்சிதரும் அரங்கனின் கரியதிருமேனி, அரசு அருங்காட்சியகத்தில் இருக்கும் கலைப் பொருளல்ல என்று நம்பினேன். கலைப் பொருளைக் காணத்தானே கட்டணம் கொடுக்க வேண்டும்! கடவுளைக் காண...? கடவுளுக்கு அனைவரும் சமம் என்றால் கடவுள் முன் அனைவரும் சமம்தானே! சேர, சோழ, பல்லவ, விஜயநகரத்தார் காலத்தில் இல்லாத கட்டண தரிசனமுறை இப்போது இருக்கிறதே! ஆலயங்கள் அரசின் பிடியில் இருப்பதால்தானே இதற்குக் கட்டுப்பட வேண்டியுள்ளது!

ஸ்ரீ வேணுகோபாலனின் 'திருவரங்கன் உலா' படித்த நாள்முதலாய், கடந்த சில வருடங்களாக ஓர் விரதம் என்னுள்... 'எத்துணை பேருடைய தியாகத்தால் காக்கப்பட்டு வந்திருக்கிறது அரங்க விக்கிரகம்! காட்சிப் பொருளைக் காண்பதுபோல் அதைக் கட்டணம் தந்தா தரிசிப்பது? அரங்கம் மட்டுமா... இன்னும் எத்தனை ஆலயங்கள் அப்படி? எனவே எந்த ஆலயத்திலும் பக்தரோடு பக்தராக, இலவச தரிசனமாக இருந்தால் தரிசிப்பது; இல்லையெனில் வெளியில் நின்று மனத்தால் தரிசிப்பது. சிறுபிள்ளைத் தனமாய் சிலசமயம் தோன்றும். ஆனாலும் எனக்கும் அரங்கனுக்கும் உள்ள விளையாட்டாக எண்ணிக் கொள்வேன்.

இந்தத் தீபாவளித் திருநாளன்று அரங்கனை தரிசிக்கச் சென்றிருந்தேன். ரெங்கராஜா ஆனபடியால், கோயில் சந்தனு மண்டபத்தில் சாளி அலங்காரத்தில் அரங்கன்

காட்சியளிப்பான். சாளிகை என்றால் 'பை' என்று பொருள். தீபாவளி, யுகாதிப் பண்டிகைகளில் பெருமாளுக்கு பணப்பை வைத்து மேளதாளத்துடன் கொண்டு வருவார்கள்.

வழக்கம்போல் இலவச தரிசன வரிசையில் நான்... அரங்கன் இருக்கும் சந்தனு மண்டபத்தில் சுற்றிலும் திரையிடப்பட்டிருந்தது. திரை விலகுகின்ற சிறிய இடைவெளியில் அரங்கன் தரிசனம். கோயில் சிப்பந்தி அனைவரையும் நிற்கவிடாது விரட்டிக் கொண்டிருந்தார். திரையில் இடைவெளி தெரியாதவாறு இழுத்துக் கட்டவும் செய்தார்.

என் விரதம் ஒருபுறம்; உள்ளத் தவிப்பு மறுபுறம். கருவறையில் சயனித்திருக்கும் அரங்கனைத் தரிசித்து வெளியே வந்தால் தெய்வத் தமிழ் மணம்... ரீங்காரம் காதுகளில்... அரையர் தீந்தமிழ்ப் பாசுரங்கள் சொல்லி, பிறகு கோயில் ஜீயருக்கும் திருக்கோஷ்டியாருக்கும் திருவாடை தீர்த்தம் வழங்கிக் கொண்டிருந்தார். ஓரத்தில் ஒதுங்கி நடந்தேன். அரங்கன் கட்டளையிட்டானோ என்னவோ, அரையர் வலிய வந்து தீர்த்தம் வழங்கிச் சென்றார். புன்னகைப் பார்வையோடு அரங்கனிடம் விடைபெற்றேன்.

அன்று மாலை என் (கல்லூரி) தமிழாசிரியரைச் சந்திக்கலாமென எண்ணி, (திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரிப் பேராசிரியர் சுபாஷ்சந்திரபோஸ்) அவர் வீட்டிற்குச் சென்றேன். பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் தேர்வுக் கட்டுப்பாட்டாளராக இருந்தவர். தனிநபராக இருந்து பல நூல்களைப் பதிப்பித்து வருகிறார். இன்றைய பதிப்புலகம், இலக்கிய உலகம், மாணவர் உலகம் பற்றிப் பேசிக் கொண்டிருந்தபோது, 'மாணவர்களிடையே தமிழார்வம் எந்த அளவுக்கு உள்ளது? கல்லூரியில் தமிழ் மாணவர்கள் நிலை எப்படி உள்ளது?' என்றெல்லாம் வினா எழுப்பினேன். அவர் சொன்னதிலிருந்து....

ஓரளவே மாணவர்கள் இன்று தமிழ் பயில்கிறார்கள்... மாணவர்களைக் காட்டிலும் மாணவியர் அதிக அக்கறை எடுத்துக் கொள்கின்றனர். பிற்கால ஆசிரியப் பணியை மனத்தில் கொண்டே பயில்கின்றனர். சொற்பிழையும் வாக்கியப் பிழையும் மலிந்திருக்கும் பலரிடம்! ஆனாலும் முதுகலை தமிழ் பயின்று, பட்டம்பெற்று வெளிவரும் மாணவர்களைக் காட்டிலும், மற்ற அறிவியல் பட்டம் பயிலும் (தமிழை முதல் மொழியாகப் படிக்கும்) மாணவர்களே பிற்காலத்தில் பெரிய அளவில் பிரகாசிக்கிறார்கள்; அதுவும் தமிழில்! நான் மதுரையில் பி.எஸ்.சி வேதியியல் பயின்றவன். ஏன் நீ கூட கணிதம் பயின்றவன் தானே....

உலகியல் அறிவோடு, அறிவியலோடு தமிழையும் பயில்பவர்களால் தமிழ்ச் சமுதாயம் பலனடைகிறது என்பது அவருடைய கருத்து. அதோடு தமிழ் இலக்கண இலக்கியங்களையும், அவற்றில் பொதிந்துள்ள அறிவியல் செய்திகளையும் கூடுதலாகப் பயில வேண்டும்; அதற்கான பாடத்திட்டம் கல்லூரி அளவில் உருவானால் நன்றாக இருக்குமே என்று சொல்லி விடைபெற்றேன்.

இனி உங்கள் பக்கம்... வளர்ந்து வரும் இன்றைய அறிவியல் யுகத்தில் நாளைய தமிழ்ச் சமுதாயம் போட்டியிட்டு மேம்பட என்ன செய்யலாம்? உங்கள் ஆலோசனைகளை, கருத்துகளை மஞ்சரியோடு பகிர்ந்து கொள்ளலாமே!

செங்கோட்டை ஸ்ரீ. ஸ்ரீராம்

Edited and Published by R.Narayanaswamy for and on behalf of the Kalaimagal office,
No.1, Sanskrit College Street, Mylapore, Chennai - 600 004 Ph:2498 3099/2498 3799 And Printed at
Rajam Offset Printers, 1,Portugese Church Street, 9th lane, Chennai - 600 001



ஸ்ரீ சங்கர பகவத் பாதரவர்களுடைய
வாழ்வையும் வாக்கையும் விளக்கும்
வரலாற்று நூல்களுள் சிறந்தது
ஸ்ரீ ஆசாரிய சுவாமிகள் அருளிய

**ஸ்ரீ சங்கர விஜயம்**

விலை ரூ. 45/-

**மஹா சுவாமிகளின் உபந்நியாசங்கள்**

நூலகம்



8 வண்ணப்படங்களுடன் 630 பக்கங்கள்
விலை ரூ. 100

ஸ்ரீ ஆசாரிய சுவாமிகள் உபந்நியாசங்கள்
கேஸட்டுகளாகவும் வெளிவந்திருக்கின்றன

**எட்டுக் கேஸட்டுகள்**
**விலை ரூ. 250/-**



**ஸ்ரீ ஆசாரிய சுவாமிகள்**
**உபந்நியாசங்கள்**
(ஸ்ரீ ஜெயேந்திரர் – ஸ்ரீ விஜயேந்திரர் அருளியது)
விலை ரூ. 150/-

**கலைமகள் காரியாலயம்**
1, சம்ஸ்கிருத கல்லூரி முதல் தெரு,
சென்னை –4.

24983099 / 24983799

90/=

REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPERS FOR INDIA
REGD.NO.1105/57,POSTAL REGN.NO.TN/PMG(CCR)/549/03-05 & WPP NO.342


கலைமகள் ஜனவரி 2005 இதழில்

கமலப்ரியா எழுதும்
புதிய சரித்திரத் தொடர்கதை
**மதுரவல்லி**
ஆரம்பமாகிறது.

ஹனுமத்தாசன் எழுதும்
நாடி ஜோதிடம்



**முக்கூர் ஸ்வாமியின்**

**கனாக் கண்டேன் தோழீ**

மற்றும் ஒவ்வொரு மாதமும்
பிரபல எழுத்தாளர்களின் சிறுகதை

இதழ் விலை ரூ. 10/-

பக்கத்துக்குப் பக்கம் புதுமை

இப்போது இளமைத் துடிப்போடு கலைமகள்...

★ உங்கள் பிரதிக்கு இன்றே சொல்லிவையுங்கள்!
★ புதிய ஏஜெண்டுகள் வரவேற்கப்படுகிறார்கள்.

கலைமகள், 1. சம்ஸ்க்ருதக் கல்லூரித் தெரு, மயிலாப்பூர், சென்னை - 600 004
தொ.பே.எண் : 2498 3099 / 2498 3799


கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்
46272